## 1.8. தொல்லியல் கண்டுபிடிப்புகள்

### 1.8.1. தொல்லியல்

தொல்லியல் என்பது மனிதன் கடந்து வந்த பாதையைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் அறிவியல் ஆய்வாகும். தொல்லியல், தொல்பொருளியல் அல்லது தொல்பொருள் குறித்த ஆய்வு என்ற பொருளில் ஆர்க்கியாலஜி (ARCHAEOLOGY) என வழங்கப்படுகிறது. இச்சொல் கிரேக்க மொழியிலிருந்து தோன்றியது. ஆர்க்கே (ARCHAE) என்பது பழமை என்றும் (LOGES) என்பது அறிவியல் அல்லது கோட்பாடு என்ற பொருளில் வழங்கப்படுகின்றது.

### 1.8.2. தமிழ்நாடு தொல்லியல் துறை

தமிழ்நாடு தொல்லியல் துறையானது பின்வரும் நோக்கங்களுக்காக 1961 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது :

- பண்டைய மற்றும் வரலாற்றுத் தொன்மை வாய்ந்த சின்னங்களைக் கண்டறிதல், பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.
- மாநிலம் முழுவதும் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ளுதல்.
- கல்வெட்டுகளைப் படியெடுத்தல், படித்து பொருளறிதல், நூலாக்கம் செய்து ஆவணப்படுத்துதல்.
- அகழ்வைப்பகங்களை அமைத்தல்.

மாநிலத்தில் உள்ள வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கவும் புனரமைக்கவும் தமிழ்நாடு அரசு "தமிழ்நாடு புராதனச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் இடங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம் 1966 மற்றும் விதிகள்-1971-ஐ" இயற்றியுள்ளது.

### தமிழ்நாட்டில் அகழாய்வு மேற்கொண்ட இடங்கள்

2022-23 ஆம் ஆண்டு நிலவரப்படி, தமிழ்நாடு தொல்லியல் துறை இதுவரை 46 வரலாற்று முக்கியத்துவமிக்க இடங்களில் அகழாய்வு பணிகளை மேற்கொண்டுள்ளது. இவை தவிர, ஒன்றிய அரசின் தொல்லியல் துறை இதுவரை 50-க்கும் மேற்பட்ட இடங்களில் தமிழ்நாட்டில் அகழாய்வு மேற்கொண்டுள்ளது.

| இடம் | மாவட்டம் | ஆண்டு | இடத்தின் வகைப்பாடு |
|---|---|---|---|
| கொற்கை | தூத்துக்குடி | 1968-69<br>2020-21 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| பாஞ்சாலங் குறிச்சி | தூத்துக்குடி | 1968-69 | நவீன காலம் |
| வசவசமுத்திரம் | காஞ்சிபுரம் | 1969-70 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| ஆனைமலை | கோயம்புத்தூர் | 1969-70 | பெருங்கற் காலம் |
| பல்லவமேடு | காஞ்சிபுரம் | 1970-71 | இடைக்காலம் |
| கரூர் | கரூர் | 1973-74;<br>1994-95 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| பனையகுளம் | தருமபுரி | 1979-80 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| போளுவாம் பட்டி | கோயம்புத்தூர் | 1979-80;<br>1980-81 | இடைக்காலம் |
| கோவலன் பொட்டல் | மதுரை | 1980-81 | பெருங்கற் காலம் |
| தொண்டி | இராமநாதபுரம் | 1980-81 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| கங்கை கொண்ட சோழபுரம் | அரியலூர் | 1980-81;<br>1986-87;<br>2008-09;<br>2020-21;<br>2021-22;<br>2022-23 | இடைக்காலம் |
| கண்ணனூர் | திருச்சி | 1982-83 | இடைக்காலம் |
| குறும்பன்மேடு | தஞ்சாவூர் | 1984-85 | இடைக்காலம் |
| பழையாறை | தஞ்சாவூர் | 1984-85 | இடைக்காலம் |
| அழகன்குளம் | இராமநாதபுரம் | 1986-87;<br>1990-91;<br>1992-93;<br>1994-95;<br>1996-97;<br>2014-15;<br>2016-17 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| திருக்கோவிலூர் | விழுப்புரம் | 1992-93 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| கொடுமணல் | ஈரோடு | 1992-93;<br>1996-97;<br>2019-20;<br>2020-21 | பெருங்கற் காலம் & வரலாற்றுத் தொடக்க காலம் |
| சேந்தமங்கலம் | விழுப்புரம் | 1992-93;<br>1994-95 | இடைக்காலம் |
| படவேடு | திருவண்ணா மலை | 1992-93 | இடைக்காலம் |
| திருத்தங்கல் | விருதுநகர் | 1994-95 | நுண் கற்காலம் |
| பூம்புகார் | மயிலாடுதுறை | 1994-95;<br>1997-98 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| மாளிகைமேடு | கடலூர் | 1999-2000 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| தேரிருவேலி | இராமநாத புரம் | 1999-2000 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| மாங்குடி | திருநெல்வேலி | 2001-02 | நுண்கற் காலம் |
| பேரூர் | கோயம்புத்தூர் | 2001-02 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| ஆண்டிப்பட்டி | திருவண்ணா மலை | 2004-05 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| மோதூர் | தருமபுரி | 2004-05 | புதிய கற்காலம் |
| மரக்காணம் | விழுப்புரம் | 2005-06 | இடைக்காலம் |
| பரிக்குளம் | திருவள்ளூர் | 2005-06 | பழைய கற்காலம் |
| நெடுங்கூர் | கரூர் | 2006-07 | பெருங்கற் காலம் |

| | | | |
|---|---|---|---|
| மாங்குளம் | மதுரை | 2006-07 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| செம்பியன் கண்டியூர் | நாகப்பட்டினம் | 2007-08 | பெருங் கற்காலம் |
| தரங்கம்பாடி | மயிலாடுதுறை | 2008-09 | நவீன காலம் |
| இராஜாக்கள் மங்கலம் | திருநெல்வேலி | 2009-10 | இடைக்காலம் |
| தலைச்சங்காடு | மயிலாடுதுறை | 2010-11 | இடைக்காலம் |
| ஆலம்பறை | காஞ்சிபுரம் | 2011-12 | நவீன காலம் |
| ஸ்ரீரங்கம் | திருச்சிராப் பள்ளி | 2013-14 | இடைக்காலம் |
| உக்கிரன் கோட்டை | திருநெல்வேலி | 2014-15 | இடைக்காலம் |
| பட்டறை பெரும்புதூர் | திருவள்ளூர் | 2015-16; 2017-18; 2022-23 | கடைக் கற்காலம் |
| கீழடி | சிவகங்கை | 2017-18; 2018-19; 2019-20; 2020-21; 2021-22; 2022-23 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| ஆதிச்சநல்லூர் | தூத்துக்குடி | 2019-20; 2020-21 | இரும்புக் காலம் |
| சிவகளை | தூத்துக்குடி | 2019-20; 2020-21; 2021-22 | இரும்புக் காலம் |
| மயிலாடும் பாறை | கிருஷ்ணகிரி | 2020-21; 2021-22 | புதிய கற்காலம் |
| வெம்பக் கோட்டை | விருதுநகர் (வைப்பாற்றின் வடகரை) | 2021-22; 2022-23 | நுண்கற் காலம் |
| துலுக்கர்பட்டி | திருநெல்வேலி (நம்பியாற்றின் கரை) | 2021-22; 2022-23 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| பெரும்பாலை | தருமபுரி (நாகவதி ஆற்றின் இடதுகரை) | 2021-22 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| கீழ்நமண்டி | திருவண்ணா மலை | 2022-23 | பெருங்கற் காலம் |
| பொற்பனைக் கோட்டை | புதுக்கோட்டை | 2022-23 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| பூதிநத்தம் | தருமபுரி | 2022-23 | புதிய கற்காலம் |

**அண்மைக் கால அகழாய்வுகள் சில :**

**கீழடி, அகரம் மற்றும் கொந்தகை**

கீழடி மற்றும் அதனைச் சுற்றிய அகரம் மற்றும் கொந்தகை ஆகிய இடங்களில் எட்டாம் கட்டமாக (2022) நடைபெற்ற அகழாய்வில் வைகை ஆற்றங்கரையில் உள்ள சங்ககால நகரக் குடியேற்றத்தின் தொல்பொருட்கள் மற்றும் கட்டடப்பகுதிகள் கிடைத்துள்ளன.

கீழடியில், செங்கல் கட்ட அமைப்பு (3 மீட்டர் நீளம்), 15 இடங்களில் சுடுமண் உறை கிணறுகள், யானைத் தந்தத்தினால் ஆன ஆட்டக்காய்கள், சுடுமண் ஆண்தலை; தந்தத்தால் செய்யப்பட்ட பகடைக்காய்கள், சுடுமண் காதணிகள், இரும்பு கத்தி மற்றும் ஆணிகள், செப்பு நாணயங்கள் போன்ற பொருட்கள் கிடைக்கப்பட்டன.

அகரம் அகழாய்வில் 4 சுடுமண் உறை கிணறுகள் மற்றும் 530 தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இங்கு முதன்முறையாக சுடுமண் உறைக்கிணறு வெளிக்கொணரப்பட்டுள்ளது. உள்ளீடுபூட்டு முறையில் செயல்படுத்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

கொந்தகையில் சூதுபவள மணிகள், இரும்புக் கருவிகள், அரிசி உமிகள் மற்றும் கருப்பு - சிவப்பு வண்ணப் பானைகள் கிடைக்கப்பட்டன. ஒரே தாழியில் 74 சூதுபவள மணிகள் கண்டெடுக்கப்பட்டது இக்கட்ட ஆய்வின் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்பாகும்.

**சிவகளை- 3 ஆம் கட்ட அகழாய்வு (2022)**

சிவகளை கிராமம் தூத்துக்குடி, மாவட்டம் ஏரல் வட்டத்தில் பொருநை ஆற்றின் (தாமிரபரணி) இடது கரையில் அமைந்துள்ளது. இந்த புகழ்பெற்ற புதைவிடப்பகுதி இவ்வாற்றின் கரையில் மேற்கே அமைந்துள்ளது.

புகழ்பெற்ற நுண்கற்கால தளமான (தேரிப் பகுதிகள் என்று பரவலாக அறியப்பட்ட) சாயர்புரம், புகழ்பெற்ற ஈமத் தொல்லியல் தளமான ஆதிச்சநல்லூர் மற்றும் புகழ்பெற்ற தொடக்ககால வரலாற்றுப் பாண்டியர் துறைமுகமான கொற்கை ஆகியவை சிவகளைக்கு 15 கி.மீ. தொலைவில் முறையே வடக்கு, மேற்கு மற்றும் கிழக்கில் அமைந்துள்ளன.

சிவகளை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் தொடர்ந்து மூன்று கட்டங்களாக அகழாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிவகளை பரம்பு, பேட்மாநகர், மூலக்கரை ஆகிய இடங்களில் இரும்புக் காலத்தைச் சார்ந்த புதைவிடப்பகுதிகள் காணப்படுகின்றன.

வளப்பான்பிள்ளை திரடு, செக்கடி, ஆவாரங்காடு, பொட்டல்கோட்டை, பராக்கிரமபாண்டி திரடு ஆகிய இடங்களில் வாழ்விடப்பகுதிகள் காணப்படுகின்றன. புதைவிடப்பகுதியான சிவகளை பரம்பில்தான் முதலில் அகழாய்வு செய்யப்பட்டது. இந்த மூன்று கட்ட அகழாய்வில் 160 தாழிகளும் 583 தொல்பொருட்களும் கண்டெடுக்கப்பட்டன. இந்த இடத்தில் நடந்த அகழாய்வில் நூற்றுக்கும் மேற்பட்ட குறியீடுகளுடன் கூடிய பானை ஓடுகள், மூன்று புதிய கற்காலக் கருவிகள், ஐந்து தமிழி பொறிப்புள்ள பானை ஓடுகள் கிடைத்துள்ளன. தங்க ஆபரணங்கள், சீன நாணயங்கள் மற்றும் பானை ஓடுகளும் பராக்கிரமபாண்டி திரடில் கிடைக்கப்பெற்றுள்ளது. மேலும், இப்பகுதியில் வெளிப்படுத்தப்பட்ட செங்கல் கால்வாயில், சுத்தமான தண்ணீர் ஓடியது என்று இருகலப்பாசிகள் பகுப்பாய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

ஒரு தாழியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட நெல்லினை பகுப்பாய்வுக்கு உட்படுத்தி இதனின் காலம் கி.மு.1155 எனவும் தாமிரபரணி ஆற்றங்கரையில் , 3200 ஆண்டுகளுக்கு முன்பே நெல் சாகுபடி நடைபெற்றுள்ளது என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

கீழடி போன்றே தொன்மை மிக்கது இவ்வூர்

பண்டைய மனிதர்களின் வாழ்விடம். சிவகளை முதற்கட்ட அகழாய்வில் கிடைக்கப்பெற்ற 'ஆதன்' என்ற தமிழி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானையோடு, நமக்கு கீழடியை நினைவூட்டுகிறது. ஆதிச்சநல்லூரைப் போலச் செம்பினால் ஆன பொருட்களோ அல்லது தங்கத்தினால் ஆன பொருட்களோ சிவகளையில் இதுவரை கிடைக்கப் பெறவில்லை எனினும், கருப்பு - சிவப்பு வண்ணக் கலயங்கள், குடுவைகள், பானை மூடுகள் போன்றவற்றில் அழகிய வடிவமைப்பில் வரையப்பெற்றுள்ள வெள்ளை வண்ண வேலைப்பாடுகளை நோக்கும்போது சிவகளைப் பகுதியில் வாழ்ந்த தமிழ்ச் சமூகம் மிகப் பழமையானதாகக் கருதப்படுகிறது.

**மயிலாடும்பாறை - 2 வது கட்ட அகழாய்வு**

மயிலாடும்பாறை, கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டம், தொரப்பள்ளி கிராமத்திற்கு மேற்கே 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. நுண் கற்காலம், புதிய கற்காலம், இரும்புக் காலம், தொடக்க வரலாற்றுக் காலம் மற்றும் இடைக்காலத்தைச் சார்ந்த பண்பாட்டுப் பொருள்கள் இருந்ததற்கான சான்றுகளை வழங்கும் தமிழ்நாட்டின் மிக முக்கியமான தளங்களில் இதுவும் ஒன்றாகும்.

இதன் புதைவிடப்பகுதி 40 ஹெக்டேர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளது. 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இரண்டு கட்ட அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. அகழாய்வில் முதல் கட்டத்தில் கிடைத்த கரிம மாதிரிகள் கரிம பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டதில் இரும்புக்காலம் 4200 ஆண்டுகள் பழமையானது எனத் தெரியவருகிறது.

இந்த இடத்தில தங்குமிடங்களில் நுண்கற்காலக் கருவிகள், அடிவாரத்தில் புதிய கற்காலத்தைச் சார்ந்த தொல்பொருட்கள், புதிய கற்காலப் பள்ளங்கள், பாறை ஓவியங்கள், இரும்புக் கால பெருங்கற்காலப் புதை குழிகள், குறியீடுகள், தமிழி எழுத்துப் பொறிப்பு பானை ஓடுகள் மற்றும் நினைவுக் கற்கள் போன்றவை பழங்கால வரலாற்றுப் பண்பாட்டுப் பொருட்களும், இடைக்காலத்தின் வணிகக் கல்வெட்டுகளும் கிடைக்கப்பெற்றுள்ளது. நீண்டகாலங்களாக இத்தளம் பயன்பாட்டில் இருந்தமைக்குச் சான்றாக விளங்குகிறது.

**வெம்பக்கோட்டை**

வெம்பக்கோட்டை விருதுநகர் மாவட்டத்தில் வைப்பாற்றின் வடகரையில் அமைந்துள்ளது. 2021-2022 ஆம் ஆண்டில் முதல் கட்ட அகழாய்வு இங்கு மேற்கொள்ளப்பட்டது. இங்கு வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் இடைக்காலம் வரை தொடர்ச்சியான தொல்பொருள்கள் கிடைக்கின்றன.

முதல் கட்ட ஆய்வில் அரிய வகை கல்மணிகள் (3254), கண்ணாடி மணிகள், சங்கு மற்றும் கண்ணாடி வளையல்கள், சுடுமண்ணாலான மணிகள், ஆட்டக்காய்கள், பொம்மைகள், பதக்கங்கள், விளையாட்டுப் பொருள்கள், பந்துகள், முத்திரைகள், எடைக்கற்கள், மனித மற்றும் விலங்கு, பறவை உருவங்கள், திமிலுள்ள காளைகள், சக்கரங்கள், இரும்பு, செம்பு மற்றும் தங்கத்தினாலான பொருட்கள் கிடைத்துள்ளன. மேலும், நுண் கற்கால மூலப்பொருட்கள் மற்றும் செர்ட் செதில்கள் போன்றவை நுண்கற்கால காலத்தின் சான்றுகளைப் பிரதிபலிக்கின்றன.

**பெரும்பாலை**

பாலாற்றின் கிளை நதியான நாகவதி ஆற்றின் இடது கரையில் அமைந்துள்ளது (தருமபுரி மாவட்டம்). கொங்கு மண்டல சதகம் என்னும் நூலில் இவ்வூர் கொங்கு நாட்டின் வடக்கு எல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் 3 மீட்டர் பண்பாட்டு அடுக்கு கொண்ட குடியிருப்பு மேடு காலகணிப்பு மற்றும் கல்வெட்டுச் சான்றுகளின்படி கி.மு.6 -13 நூற்றாண்டு வரையிலான ஒரு தொடர்ச்சியான குடியேற்றத்தைப் பதிவு செய்கிறது.

**துலுக்கர்பட்டி**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், நம்பியாற்றின் கரையில் துலுக்கர்பட்டி அமைந்துள்ளது. இரும்பு காலத்தின் தொடர்பை எடுத்துரைக்கும் வகையில் தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

துலுக்கர்பட்டியில் முதல் கட்ட அகழாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட பழங்கால தொன்மையான ஓடுகள், குவளைகள், பாசிமணிகள் போன்ற பல்வேறு பொருட்கள் கண்டறியப்பட்டது. 2 ஆம் கட்ட பணிகளில் முதலில் தமிழ் எழுத்துகளில் புலி என்று பொறிக்கப்பட்டுள்ள கருப்பு சிவப்பு பானை ஓடு கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் பானை ஓடுகளில், திஈய, திச, குவிர(ன்) ஆகிய பொறிப்புகள் கிடைக்கப்பட்டுள்ளது.

## 1.8.3. தமிழ்நாட்டில் தொல்லியல் ஆய்வுகள்

தொல்பொருள் ஆய்வுகள், கல்வெட்டுகள், நாணயங்கள் எனத் தொல்லியல் கண்டுபிடிப்புகளால் தமிழ் சமுதாய வரலாற்றுத் தொடர்பான செய்திகளை அறிந்துகொள்ள முடிகிறது. இலக்கியங்கள், புராணங்கள் தரும் சான்றுகளைக் காட்டிலும் தொல்லியல் கண்டுபிடிப்புகள் அளிக்கும் சான்றுகள் பெரிதும் நம்பத்தகுந்தவையாக உள்ளன.

தமிழ்நாட்டில் இதுவரை நடத்தப்பட்ட தொல்லியல் அகழாய்வுகளின் மூலம் தமிழகத்தின் தொன்மையினையும், பண்பாட்டினையும் தமிழ் மக்களின் சமூகப் பொருளாதார சமயநிலையினையும் அறியமுடிகின்றது.

தமிழகத்தில் பல இடங்களில் குறிப்பாகப் பல்லாவரம், அத்திரம்பாக்கம், பையம்பள்ளி, கொடுமணல், ஆதிச்சநல்லூர், கரூர், தொண்டி, அழகன்குளம், கொற்கை, பூம்புகார், அரிக்கமேடு, கங்கைகொண்ட சோழபுரம், பாஞ்சாலங்குறிச்சி, கீழடி ஆகிய இடங்களில் அகழாய்வுகள் செய்யப்பட்டு, பல புதிய செய்திகள் அறியப்பட்டுள்ளன. அரிக்கமேடு, அழகன்குளம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆய்வுகள் சங்க காலத் தமிழரின் சிறப்பை வெளிப்படுத்துவதுடன் தமிழ்நாட்டிற்கும் ரோம் நாட்டிற்கும் இடையிலான வணிகத் தொடர்பை உறுதிசெய்கின்றன.

சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள செய்திகள் தொல்பொருள் ஆய்வுகளால் உறுதி செய்யப்படுகின்றன. பூம்புகார், கொற்கை, கரூர், உறையூர் தொல்பொருள் ஆய்வுகள், அந்நகரங்களின் தொன்மைச் சிறப்பையும் அவை அயல்நாடுகளுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பையும் வெளிப்படுத்துகின்றன. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கீழடி தொல்பொருள் ஆய்வுகளால் நகரமயமாதல் தமிழகத்தில் கி.மு.6 ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது என்பது தெளிவாகிறது.

### 1.8.3.1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் வாழ்க்கை முறையை அறிந்துகொள்வதற்கு தொல்லியல் ஆய்வுகள் மட்டுமே துணையாக விளங்குகின்றன. ஏனெனில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பது, எழுத்துப் பொறிப்புகள் (Inscriptions) அல்லது ஆவணங்கள் (Records) தோன்றுவதற்கு முந்தைய காலம் ஆகும்.

தமிழகத்தில் பழங்கற்காலம் முதல் பெருங்கற்காலம் வரையிலான காலம் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என வழங்கப்படுகிறது. இக்காலமானது பழங்கற்காலம், இடைக்கற்காலம் (நுண்கற்கருவிகாலம்), புதிய கற்காலம், பெருங்கற்காலம் அல்லது இரும்புகாலம் எனப் பகுக்கப்படுகிறது. தமிழகத்தின் பல இடங்களில் தொல்பொருள் ஆய்வுகளால் வரலாற்றுக்கு முந்தைய கால மக்கள் வாழ்ந்தமைக்கான தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

#### அ) பழங்கற்காலம்

**அத்திரம்பாக்கம்**

அத்திரம்பாக்கம் சென்னைக்கு வடமேற்கே சுமார் 60 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இப்பகுதியில் கொற்றலையாறு தற்போது ஓடுகின்றது. இங்கு கற்கருவிகள் செய்வதற்கு ஏற்ற கற்கள் கிடைக்கின்றன. இந்த இடம் இராபர்ட் புரூஸ் பூட் மற்றும் வில்லியம் கிங் ஆகியோரால் கி.பி.1863 - 1866 இல் கண்டுபிடிக்கப்பட்டது. அத்திரம்பாக்கத்தில் கே.டி.பானர்ஜி, சாந்தி பப்பு போன்ற அறிஞர்கள் அகழாய்வு செய்துள்ளனர். சாந்தி பப்பு அண்மையில் செய்த ஆய்வுகளின் வழியாக இந்த இடம் சுமார் 15 லட்சம் ஆண்டுகளுக்கும் மேல் பழமையானது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த தளத்தில் நடைபெற்ற ஆராய்ச்சி, தெற்காசியாவில் அச்சூலியன் மற்றும் இடை பழங்கற்காலம் குறித்த புதிய கண்ணோட்டங்களுக்கு வழிவகுத்துள்ளது.

இவர்கள் செய்த கருவி கைக்கோடரி என்று அழைக்கப்படுகின்றது. இதற்கு அச்சூலியன் கருவி என்ற பெயரும் உண்டு. இக்கருவிகள் வெட்டுவதற்கும், குழி தோண்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டன. இவர்கள் கிளீவர் எனப்படும் வெட்டும் கருவியையும்; பிற்காலத்தில் சுரண்டிகள் மற்றும் பிற கருவிகளையும் பயன்படுத்தினர்.

**குடியம்**

இந்தக் குகையில் பழங்கற்கால மனிதர்கள் வாழ்ந்ததற்கான தொல்லியல் சான்றுகள் கிடைக்கின்றன. இது திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இவ்விடம் இராபர்ட் புரூஸ் பூட் மற்றும் வில்லியம் கிங் ஆகியோர்களால் கண்டுபிடிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. இந்தக் குகை 1962-63, 1963-64 ஆம் ஆண்டுகளில் இந்திய அரசுத் தொல்லியல் துறையால் அகழாய்வு செய்யப்பட்டது.

பழங்கற்கால மனிதர்கள் இயற்கைச் சீற்றங்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள இயற்கையாக அமைந்துள்ள குகைகளைப் பயன்படுத்தினர் என்பதற்கு இந்த இடம் ஒரு சிறப்பான சான்றாகும். இங்கு பழங்கற்கால மனிதர்கள் பயன்படுத்திய கற்கருவிகள் கிடைக்கின்றன. அச்சூலியன் காலத்திற்குப் பிந்தைய (இடைப் பழங்கற்காலம்) காலக் கருவிகள் நுண்கருவி தொழிற்கூடமாக மாறுவதற்கான தொல்லியல் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

**பரிக்குளம்**

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பரிக்குளத்தில் கற்கருவிகளும் அருகாமையிலுள்ள மேட்டுப்பாளையத்தில் கல் மரமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்கு கற்கருவிகளைத் தயார் செய்கிற தொழிற்கூடம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும், குதிரையின் பற்கள் கிடைத்துள்ளன. பரிகுளத்தில் அகழாய்வு தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் 2005-2006 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. இங்கு நிலவிய பழைய கற்காலத்தை 5 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் கொண்டு செல்கிறார் தொல்லியல் அறிஞர் சாந்திபப்பு அவர்கள்.

1916 ல் புரூஸ்புட், தருமபுரி பகுதியிலுள்ள பர்கூர் மலைப்பகுதியில் சில கற்கருவிகளைக் கண்டெடுத்தார். இதன் பின்னர் வந்தவர்கள் இவற்றைக் கல்லாயுதங்கள் என்று கருத்து தெரிவித்தனர். தற்போது இவற்றைப் போன்ற கல்லாயுதங்கள் வரட்டனபள்ளி அருகிலும் கப்பல்வாடியிலும் (இப்பகுதியில் கற்காலக் கருவிகளை முதலில் பி.நரசிம்மையா கண்டுபிடித்தார்) கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை பழைய கற்காலத்தைச் சார்ந்தவை என்பது தெரியவருகின்றன.

#### ஆ) இடைக்கற்காலம் (நுண்கற்கருவிகாலம்)

**மாங்குடி**

மாங்குடி ஓர் இடைக்கற்கால, பெருங்கற்கால, சங்ககால வாழ்விடமாகும். மாங்குடி திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ளது. மாங்குடியில் தமிழக அரசுத் தொல்லியல் துறை அகழாய்வு செய்துள்ளது. இங்கு இடைக்கற்கால மற்றும் பெருங்கற்காலச் சான்றுகள் கிடைத்துள்ளன. வரலாற்றுத் துவக்கக்காலச் சான்றுகளும், மணிகளும் தமிழி (தமிழ் பிராமி) எழுத்துப் பொறிப்புள்ள பானை ஓடுகளும் இங்கு கிடைத்துள்ளன.

இங்கு அகழாய்வு செய்யப்பட்ட மண்ணிலிருந்து அக்கால மக்கள் பயன்படுத்திய தாவரங்கள் குறித்த தகவல்கள் நமக்குக் கிடைக்கின்றன. **"குருமங்கள அதன இ யானைய் போ"** என்ற தமிழ் பிராமி பொறிக்கப்பட்ட கருப்பு மற்றும் சிவப்பு வண்ணப் பானை ஓடு கண்டெடுக்கப்பட்டது. இப்பானை ஓடு சங்ககாலத்தைச் சார்ந்தது என அறியப்படுகிறது. (கி.மு 200) சங்க இலக்கியமான மதுரைக் காஞ்சியின் ஆசிரியர் மாங்குடி

மருதனார் இவ்வூரைச் சேர்ந்தவர் எனக் கருதப்படுகின்றது.

#### திருத்தங்கல்

விருதுநகர் மாவட்டத்தில் அமைந்துள்ளது திருத்தங்கல். சிலப்பதிகாரத்தில் திருத்தங்கல், பண்டைய காலத்தில் ஒரு முக்கிய வாழ்விடமாகத் திகழ்ந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வூரின் மேற்கோடியில் நுண் கற்காலக் கருவிகளும், மூலக் கற்களும் கண்டெடுக்கப்பட்டன.

#### மயிலாடும்பாறை

மயிலாடும்பாறை நுண்கற்கருவி கால புதிய கற்கால / பெருங்கற்கால/ இரும்புக்கால மக்கள் வாழ்ந்த ஊராகும். மயிலாடும்பாறை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ளது. இங்கு பேராசிரியர் க.இராசன் அவர்கள் தலைமையில் அகழாய்வுகள் நடைபெற்றன.

இங்கு குவார்ட்ஸ் கற்களால் செய்யப்பட்ட நுண்கற்கருவிகளும், செதில்களும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவை கி.மு.1000 -க்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்தவை. இங்கு ஆலோசீன் எனப்படும், சுமார் கி.மு.10,000 இல் துவங்கிய காலத்திலிருந்து மக்கள் வாழ்ந்துள்ளனர். தமிழகத்தில் நுண்கற்காலச் சான்றுகள் மண்ணடுக்குகளில் கிடைத்த ஒரு சில இடங்களில் இது குறிப்பிடத்தக்கதாகும்.

### இ) புதிய கற்காலம்

#### பையம்பள்ளி

தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தில் திருப்பத்தூர் தாலுகாவில் பையம்பள்ளி என்ற ஊர் உள்ளது. இப்பகுதியில் கள ஆய்வுப் பணிகளை இராபர்ட் புரூஸ்பூட் மேற்கொண்டு இப்பகுதியில் புதிய கற்கால மனிதன் வாழ்ந்தான் என்பதையும் அதற்குச் சான்றாக புதிய கற்காலக் கற்கருவிகளைக் கண்டுபிடித்தார். இவரைத் தொடர்ந்து பி.நரசிம்மையா, எஸ்.ஆர்.ராவ் மற்றும் பேராசிரியர் கே.வி.ராமன் ஆகியோரும் இங்கு கள ஆய்வு செய்தனர்.

பையம்பள்ளியில் இந்திய தொல்லியல் துறையானது முனைவர் S.R.ராவ் தலைமையில் 1964-65 மற்றும் 1967-68 ஆம் ஆண்டுகளில் அகழாய்வுகளை மேற்கொண்டது. இவ்வகழாய்வு தமிழகத்தில் முதன்முதலாக அறிவியல் சார்ந்த முறையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வாகும்.

இங்கு புதிய கற்காலத்தின் தொடக்கக் கட்டத்தில் வெளுப்பான சாம்பல்நிற மட்கலன்களும் மெருகூட்டப்பட்ட சாம்பல்நிற மட்கலன்களும் தானியங்களை அரைக்கப் பயன்படுத்தப்படும் கல்லால் ஆன (GRINDING STONE) வீட்டு உபயோகப் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டன.

இங்கு வாழ்ந்த புதிய கற்காலத்தின் இரண்டாம் காலகட்டத்தில் வாழ்ந்த மனிதன் பழுப்பு நிறமான மட்கலன்களைப் பயன்படுத்தியுள்ளான். இவற்றுடன் சாம்பல்நிற மட்கலன்களும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்காலத்தில் எலும்பிலான கருவிகளின் பயன்பாடு குறைந்து கற்கருவிகளின் பயன்பாடு அதிகரித்துள்ளது. புதிய கற்காலத்தின் இரண்டாவதுகட்ட மனிதன் குடிசைகளில் வாழ்ந்திருக்கிறான். இப்பகுதியில் வாழ்ந்த புதிய கற்கால மனிதர்கள் வேளாண்மையை நன்கு அறிந்திருந்தனர்.

பையம்பள்ளி பகுதியில் புதிய கற்காலத்தைத் தொடர்ந்து தொடர்ச்சியாகப் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்திருக்கின்றனர். அவர்கள் கறுப்பு சிவப்பு, சிவப்பு கறுப்பு நிறங்களைக் கொண்ட மட்கலன்களைப் பயன்படுத்தி உள்ளனர். பானைகளின் மீது அலங்கார வேலைப்பாடுகள் காணப்பட்டன. சிவப்பு மட்கலன்கள் மீது வண்ணங்கள் தீட்டப்பட்டிருப்பது பையம்பள்ளி மட்கலன்களின் சிறப்பான ஒன்றாகும்.

சுடுமண் உருவங்களும், அரிய வகைக் கல் மணிகளும், காதணிகளும், சுடுமண்ணாலான விளக்குகளும், சங்கு வளையல்களும் இவ்வகழாய்வில் கிடைத்துள்ளன. கல்லால் செய்யப்பட்ட வார்ப்படக்குப்பி (MOULD) ஒன்று இவ்வகழாய்வில் கிடைத்துள்ளதைக் கொண்டு இங்கு வாழ்ந்த மக்கள் தங்கத்தை உருக்கும் முறையை அறிந்துள்ளனர் என நம்மால் அறிய முடிகிறது.

பையம்பள்ளி அகழாய்வில் கிடைத்த ஈமச்சின்னங்கள் கல்வட்ட (Cairain Circle) வகையைச் சார்ந்தவை. புதைக்கப்பட்ட மனிதனுடன் ஈமப் பொருட்களான மட்கலன்களும், இரும்புப் பொருட்களும் சுடுமண் மணிகளும் காணப்பட்டன. மற்றும் ஓரிடத்தில் 24 கால்களை உடைய ஈமப்பேழை ஒன்று இடுபொருட்களுடன் காணப்பட்டது. பையம்பள்ளியில் இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. பையம்பள்ளி அகழாய்வு புதிய கற்கால மற்றும் இரும்புகால (பெருங்கற்கால) மனிதனின் வாழ்க்கையையும் பண்பாடுகளையும் அறியப் பெரிதும் உதவிகிறது. மேலும், இவ்வகழாய்வு மூலம் தான் இரும்பு காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் உள்ள இடைவெளியைச் சரியாகக் கணிக்க முடிந்தது.

#### தைலமலை

தைலமலை தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இங்கு புதிய கற்காலத்திலும், பெருங்கற்காலம் / இரும்புக்காலத்தில் மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் கிடைக்கின்றன. இங்கு பி.நரசிம்மையா செய்த அகழாய்வுகளில் புதிய கற்காலத்தைச் சேர்ந்த மெருகேற்றப்பட்ட கற்கோடரிகளும், பானை வகைகளும் கிடைத்துள்ளன. பெருங்கற்கால ஈமச்சின்னங்களான கல்வட்டங்கள் இவ்வூரில் காணப்படுகின்றன. இங்கு கருப்பு - சிவப்பு மற்றும் சிவப்புப் பானை வகைகளின் ஓடுகளும் கிடைத்துள்ளன.

#### முள்ளிக்காடு

முள்ளிக்காடு தருமபுரி மாவட்டத்தில் உள்ளது. இங்கு புதிய கற்காலத்தைச் சேர்ந்த மண்பானை ஓடுகளுடன் மெருகேற்றப்பட்ட கற்கோடரிகள் காணப்படுகின்றன. இங்கு இந்திய அரசுத் தொல்லியல் துறையைச் சார்ந்த பி.நரசிம்மையா அகழாய்வு செய்துள்ளார். புதிய கற்காலத்திற்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த நுண்கற்கருவிகள் (இடைக் கற்காலத்தைச் சேர்ந்தவை) கிடைக்கின்றன. புதிய கற்காலத்திற்குப் பிந்தைய காலத்தைச் சேர்ந்த பெருங்கற்கால /

இரும்புக்கால ஈமச்சின்னங்கள் காணப்படுகின்றன. இங்கு கருப்பு-சிவப்பு மட்கல ஓடுகளும் காணப்படுகின்றன.

### மோதூர்

மோதூர், தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இங்கு அகழாய்வு பணி 2004-2005 ஆண்டு தொடங்கப்பட்டது. அகழாய்வில் புதிய கற்கால கருவிகள் மற்றும் பெருங்கற்கள் தொல்பொருட்கள் போன்றவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும், சுடுமண் செம்மறி ஆடு மற்றும் சுடுமண் தாய் உருவமும் கண்டறியப்பட்டிருந்தன.

## ஈ) இரும்புக்காலம் / பெருங்கற்காலம்

### தமிழ்நாட்டில் இரும்பின் தொன்மை :

இரும்புத் தாதுவிலிருந்து இரும்பைப் பிரித்தெடுக்கும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்பு என்பது மனித குல வரலாற்றில் மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. செம்பு மற்றும் வெண்கலக் கருவிகளுக்கு மாற்றாக இரும்புக்கருவிகள் மலிவானவையாகவும் நீடித்த தன்மைகொண்டவையாகவும் அதிக திறன் கொண்டவையாகவும் கருதப்படுகின்றன. இந்தக் காரணங்களால் இரும்பின் பயன்பாடு வேளாண் உற்பத்தியை விரைவுபடுத்திச் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. இதனாலேயே, தொல்லியலாளர்களும் தொல் - உலோகவியலாளர்களும் உலகின் வெவ்வேறு பகுதிகளில் பின்பற்றப்படும் இரும்புத் தொழில்நுட்பத்தைப் புரிந்துகொள்ள முக்கியத்துவம் அளித்துவருகின்றனர்.

### உலகளவில் இரும்பின் தொன்மை

1911 ஆம் ஆண்டு வடக்கு எகிப்தின் கீழ்நைல் பள்ளத்தாக்கில் அல்கெர்செவில் உள்ள கல்லறைகளில் விண்கல் இரும்பினால் செய்யப்பட்ட மணிகள் கண்டறியப்பட்டன. இவையே, உலகிலேயே அறியப்பட்ட தொன்மையான இரும்பிலான தொல்பொருட்கள் என்று கருதப்படுகின்றன. இவற்றின் காலம் கி.மு.3400-3100 என்று கணிக்கப்பட்டுள்ளது.

இரும்புத் தொழில்நுட்பம் மிகப் பழங்காலத்திலேயே இருந்துள்ளது என்று கருதப்பட்டாலும் தற்பொழுது கிடைக்கும் சான்றுகளின் அடிப்படையில் இரும்புத் தாதுவிலிருந்து உருக்கிச் செய்யப்படும் இரும்புத் தொழில்நுட்பம் கி.மு.2000 ஆண்டுகளின் இடைப்பட்ட காலத்தில்தான் தொடங்கியதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. அனடோலியா மற்றும் காகசஸ் பகுதிகளில் இரும்புக்காலம் கி.மு.2000 ஆண்டின் பிற்பகுதியில் (சுமார் 1300) தொடங்கியது. அங்கிருந்து அத்தொழில்நுட்பம் உலகின் மற்ற பகுதிகளுக்குப் பரவியது என்றும் எண்ணினர்.

### இந்தியச் சூழலில் இரும்புத் தொழில்நுட்பம்

இந்தியாவில் இரும்பு அறிமுகப்படுத்தப்பட்ட காலமானது கி.மு. 1100 இல் இருந்து கி.மு.2000 ஆண்டாகக் கருதப்படுகிறது.

### தமிழ்நாட்டில் இரும்பின் தொன்மை

மாங்காடு, கீழ்நமண்டி, மயிலாடும்பாறை, ஆதிச்சநல்லூர் மற்றும் சிவகளை ஆகிய இடங்களில் உள்ள இரும்புக்கால ஈமக்குழிகளில் இருந்து பெறப்பட்ட சான்றுகளின் காலக்கணிப்புகள் தமிழ்நாட்டில் இதுவரை இரும்பின் தொன்மை பற்றிக் கொண்டிருந்த கருத்தை மறுபரிசீலனை செய்யவைத்துள்ளன.

### மாங்காடு

சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டத்தில் மாங்காடு என்ற இடத்தில் சிதைவுற்ற கல் பதுக்கையிலிருந்து கண்டறியப்பட்ட இரும்பு வாளின் காலம் கி.மு.1263 என்று அறியப்பட்டது. முதன்முறையாக, காலத்தால் முந்தைய காலக்கணிப்பு கிடைத்தது தமிழ்நாட்டில் இரும்பின் தொன்மை மீதான ஆர்வத்தைத் தூண்டியது.

### கீழ்நமண்டி

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள வந்தவாசி வட்டத்தில் கீழ்நமண்டியில் 2023 இல் தொல்லியல் ஆய்வு நடத்தப்பட்டது. ஆய்வில் ஈமப்பேழையுடன் கூடிய ஈமக்குழியில் இருந்து பெறப்பட்ட இரும்பு மாதிரியின் காலம் கி.மு.1692 என்று கணிக்கப்பட்டது. மேலும், ஆய்வினால் தமிழ்நாட்டில் ஈமப்பேழை அடக்கம் செய்யும் முறை நடைமுறையில் இருந்த காலம் முதன்முறையாக நமக்குக் கிடைத்தது.

### மயிலாடும்பாறை

கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறையில் 2021-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அகழ்வாய்வில் நுண்கற்காலத்தில் இருந்து இடைக்காலத்தின் பிற்பகுதி வரையிலான பல்வேறு பண்பாட்டுப் பொருட்கள் கிடைத்தன. அங்கு கிடைத்த இரும்பின் மாதிரியின் காலம் கி.மு.2172 என்று கணிக்கப்பட்டது. எனவே, கி.மு.2172 இல் தமிழகத்தில் இரும்பு பயன்படுத்தப்பட்டது என்று முடிவு செய்யப்பட்டது.

### ஆதிச்சநல்லூர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ஆதிச்சநல்லூரில் வாழ்விடப்பகுதியில் மேற்கொண்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட இரும்பு மாதிரிகளின் காலம் கி.மு.2522 என்று கணிக்கப்பட்டது. இந்தக் காலக் கணிப்பு தமிழ்நாட்டில் இரும்புப் பயன்பாட்டின் காலத்தை கி.மு.3000 ஆண்டின் இடைப்பகுதிக்குக் கொண்டு சென்றது.

### சிவகளை

சிவகளை அகழாய்வில் இரும்பு மாதிரிகளின் மூன்று காலக் கணிப்புகள் கி.மு.2953 முதல் கி.மு.3345 வரை கிடைத்தன. இதன் காரணமாகத் தமிழ்நாட்டின் இரும்புப் பயன்பாடு கி.மு.4 ஆம் ஆயிரத்தின் முதல் பகுதியைச் சார்ந்ததாக அமைகிறது. அதாவது, இரும்பின் பயன்பாடு குறைந்தபட்சம் கி.மு.3300 க்கு எடுத்துச் செல்லலாம் என இதன் மூலம் அறியமுடிகிறது.

இவ்வாறு, தமிழ்நாட்டில் இரும்புப் பயன்பாட்டின் தொடக்கம் அல்லது இரும்பின் அறிமுகம் என்பது 5300 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று அறிவியல் துணைகொண்டு நிறுவப்பட்டுள்ளது.

வடக்கே அமைந்துள்ள பண்பாட்டு இடங்கள் செப்புக்காலத்தில் இருந்தபோது, விந்தியத்திற்கு தெற்கே வணிகத்திற்குப் பயன்படுத்தும் அளவிற்குச் செப்புத்தாது குறைவாக கிடைத்த காரணத்தால் தென்னிந்தியா

இரும்புக் காலத்திற்குள் நுழைந்திருக்கலாம். எனவே, வட இந்தியாவின் செப்புக்காலமும் தென்னிந்தியாவின் இரும்புக் காலமும் சமகாலத்தவை எனலாம்.

### ஆதிச்சநல்லூர்

இந்தியாவில் நடைபெற்ற அகழாய்வுகளில் ஆதிச்சநல்லூர் பறம்பில் நடைபெற்ற அகழாய்வே, முதல் அகழாய்வாகும்.

ஆதிச்சநல்லூர், திருநெல்வேலியில் இருந்து திருச்செந்தூர் செல்லும் சாலையில், பாளையங்கோட்டையிலிருந்து 12 கி.மீ. தொலைவில் தண்பொருநை ஆற்றின் (தாமிரபரணி) தென்கரையில் உள்ளது. ஆதிச்சநல்லூரில் பறம்பு என்று கூறப்படும் மண்மேடு தாமிரபரணி ஆற்றின் தென்கரையில் தெற்கு வடக்காக நீண்டுக் கிடக்கின்றது. இந்தப் பறம்பின் மொத்தப் பரப்பளவு வரம்பு 114 ஏக்கர் ஆகும். இது பயிர்த் தொழிலுக்குப் பயன்படாத பாங்கற்ற நிலமாகக் கருதப்படுவதால் பறம்பு என்றழைக்கின்றனர். இந்த இடத்தைத் பண்டையத் தமிழர்கள் இறந்துபோன மக்களின் உடலைப் புதைக்கும் ஈமக்காடாகக் பயன்படுத்தியுள்ளனர். வரலாற்றுக் காலத்திற்கு முந்திய ஈமக்காடு பகுதிகளில் இதுதான் மிகப் பரந்ததாகும்.

#### முதல் அகழாய்வு

ஜெர்மன் நாட்டின் பெர்லின் நகரைச் சார்ந்த முனைவர் ஜாகோர் என்பவர் 1876 இல் ஆதிச்சநல்லூரில் அகழாய்வு செய்தார். இங்குக் கிடைக்கப்பெற்ற அரிய தொல்பொருட்களை எடுத்துச் சென்று பெர்லின் அருங்காட்சியகத்தில் இடம்பெறச் செய்துள்ளார்.

பாரீஸ் நகரைச் சார்ந்த எம்.லூயிஸ் லேபிக் என்பவர் 1903-1904 ஆம் ஆண்டு கள ஆய்வு மேற்கொண்டு கூடுதல் தகவல்களைத் திரட்டினார்.

#### இரண்டாவது அகழாய்வு

1903-1904 ஆம் ஆண்டு வரை ஆதிச்சநல்லூர் பறம்பில் அலெக்சாண்டர் ரீ அகழாய்வு நடத்தினார். அவர் கண்டறிந்த தொல்பொருட்கள் அனைத்தும் தற்போது சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளன. அவர் ஆதிச்சநல்லூரில் சேகரித்த தொல்பொருட்களின் பட்டியலை, 'ஆதிச்சநல்லூர் மற்றும் பெரும்பேர் ஊர்களிலுள்ள வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட தொல்பொருட்களின் பட்டியல்' என்னும் தலைப்பில் நூலாகச் சென்னை அரசு அருங்காட்சியகம் வெளியிட்டது (1915).

#### அகழாய்வு (2003-2005)

இந்திய ஒன்றிய அரசின் தொல்லியல் கண்காணிப்பாளர் சத்தியமூர்த்தி தலைமையில் 2003-2005 ஆம் ஆண்டுகளில் ஆதிச்சநல்லூரில் அகழாய்வுப் பணி நடைபெற்றது. இந்த அகழாய்வு பறம்பு என அழைக்கப்படும் இடுகாட்டுப் பகுதியில் மட்டுமே நடத்தப்பட்டன. இங்கு 600 ச.மீ. பரப்பளவில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் 160 க்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. 2021-2022 இல் **அருண் ராஜ்** தலைமையில் இந்திய தொல்லியல் துறை மீண்டும் அகழாய்வு செய்தது.

ஆதிச்சநல்லூரிலுள்ள புதை மேட்டிலிருந்து கிடைத்தவை

- ஒருபானையில் மீது ஒரு பெண்ணுருவம், நெற்கதிர்கள், ஒரு மான் மற்றும் ஒரு பல்லி ஆகியவற்றின் உருவங்கள் ஒட்டுருவமாகக் (applique) காணப்படுகின்றன.
- துணி, மரப்பொருள்களின் எச்சங்களும் இங்கு கிடைத்துள்ளன.
- தங்கத்திலான நெற்றிப்பட்டம், கத்தி மற்றும் வாள் போன்ற இரும்புப் பொருட்கள் மற்றும் வெண்கலப் பொருட்கள் கிடைத்துள்ளன.

தமிழகத்தில் உள்ள பெருங்கற்கால இடங்களில் மிகப்பெரிய இடம் இதுவாகும். வெப்ப உமிழ் காலக்கணிப்பு (Thermoluniscence dating) வழியாக இந்த இடம் கி.மு. 1500 இல் இருந்து கி.பி. 500 ஆண்டுகளுக்கு உட்பட்டது என்று கருதப்படுகின்றது.

#### அகழாய்வு (2021-21; 2022-23)

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் வாழ்விடப்பகுதியிலும் ஈமத்தளங்களிலும் அகழாய்வு நடத்தியது.

இதுவரை ஆதிச்சநல்லூரில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் பறம்பு பகுதியில் (புதைவிடப்பகுதி) மட்டும் நடைபெற்றுள்ளதால், முதுமக்கள் தாழிகள் பற்றியும், இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறை, சடங்குகள், பழக்க வழக்கங்கள் பற்றி மட்டுமே அறிய முடிந்தது. ஆனால், அம்மக்களின் வாழ்விடப்பகுதி, வாழ்வியல் நடைமுறைகள் கேள்விக்குறியாகவே இருந்தது. அதற்கு விடைகாணும் வகையில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வாழ்விடப்பகுதிகளிலும் அகழாய்வு மேற்கொண்டது.

ஆதிச்சநல்லூர் அகழாய்வில் இதுவரை 847 தொல்பொருட்கள் கிடைத்துள்ளன மற்றும் பல்வேறு வகையான பழங்கால மட்பாண்டங்கள் அதிக அளவிலும் கிடைத்துள்ளன. இத்தொல்பொருட்கள் ஆதிச்சநல்லூரின் வரலாற்றை மறுகட்டமைக்க உதவுகிறது. ஒவ்வொரு தொல்பொருளும் தாமிரபரணி ஆற்றங்கரையில் வாழ்ந்த பண்டைய மக்களின் பண்பாட்டினை வெளிப்படுத்துகிறது.

அகழாய்வில் இரும்புக் காலம் மற்றும் வரலாற்றுத் தொடக்க காலம் என இரண்டு காலகட்ட வாழ்விடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அகழாய்வானது இரும்புக காலத்திற்கு முன்னும் பின்னும் வாழ்ந்த மக்களின வரலாற்றை வெளிப்படுத்தியுள்ளது. கற்காலத்தைச் சார்ந்த நுண்கற்காலக் கற்கருவிகள் கிடைத்திருப்பதன் மூலம் இரும்புக் காலத்திற்கு முற்பட்ட மக்கள் இங்கு வாழ்ந்திருப்பதை அறிய முடிகிறது. இது இப்பகுதியில் தொடக்ககாலக் குடியேற்றத்தைக் குறிக்கிறது.

ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சி வரலாற்றில் தமிழி எழுத்துகளைக் கொண்ட பானை ஓடுகள் தற்போதைய அகழாய்வுகளில் கிடைத்துள்ளன. மேலும், குறியீடு கொண்ட பானை ஓடுகள் 500-க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் கிடைக்கின்றன.

இதன் வாயிலாகத் தொடக்க வரலாற்றுக் கால மக்கள் இங்கு வாழ்ந்திருப்பதை உறுதி செய்ய முடிகிறது. இம்மக்கள் இரும்புக் காலத்தைத் தொடர்ந்து இப்பகுதியில் வாழ்ந்து வந்திருப்பதை அவர்கள்

பயன்படுத்திய பல்வேறு மட்பாண்டங்கள், தொல்பொருட்கள், துளையிடப்பட்ட கூரை ஓடுகள் போன்ற சான்றுகள் வாயிலாக அறிகிறோம்.

ஈமத்தாழிகளில் கிடைத்துள்ள தரமான தொழில்நுட்பத்துடன் செய்யப்பட்ட மட்பாண்ட வகைகள் வாழ்விடப்பகுதிகளிலும் கிடைக்கப்பெற்றுள்ளன. குறிப்பாகக் காலத்தால் முற்பட்ட வெள்ளை வண்ணப் புள்ளிகள் இட்ட கருப்பு - சிவப்பு வண்ண மட்பாண்டங்கள் கிண்ணங்கள் வாழ்விடப்பகுதிகளில் கிடைக்கப்பெற்றுள்ளன. இவை மேம்பட்ட மக்கள் பயன்படுத்தியதற்குச் சான்றாகத் திகழ்கின்றன.

தொல்பொருட்களில் வட்டச்சில்லுகள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன. மேலும், செம்பு மற்றும் இரும்பிலான மோதிரங்கள், கண்ணாடி மணிகள், தங்கத்தினாலான மணிகள், அரிய கல் மணிகள், கண்ணாடி வளையல் துண்டுகள், எலும்பு மணிகள், சுடுமண்ணாலான மணிகள் மற்றும் வளையல்கள் ஆகியவை தாமிரபரணி ஆற்றங்கரையில் வாழ்ந்த மேம்பட்ட தமிழ்ச் சமூகத்தின் அணிகலன்களைக் கண்முன்னே சான்றாக நிறுத்துகின்றன.

வீடுகளின் களிமண் மண்தரையைத் தேய்க்க உதவும் கற்கள், அரவைக் கற்கள் மற்றும் கருவிகளைத் தீட்டும் கற்கள் என வீடுகளில் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படும் பொருட்களும் அகழாய்வில் கிடைத்துள்ளன. பண்டைய மக்களின் கைவினைத்திறனைக் காட்டும் மனித மற்றும் பறவைகளின் சுடுமண்ணால் ஆன உருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அன்றைய நீர் மேலாண்மைக்குக் கட்டியம் கூறுவது போன்று 21 எண்ணிக்கை கொண்ட சுடுமண்ணலான குழாய்கள் கிடைமட்டத்தில் பொருத்தப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. இது கழிவுநீரை வெளியேற்றுவதற்கு வீடுகளில் அமைக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது.

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை ஆதிச்சநல்லூர் வாழ்விடப்பகுதிகளில் மேற்கொண்டு வரும் அகழாய்வுகளின் வாயிலாகக் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்கள், மட்பாண்டங்கள் மூலம் தாமிரபரணி ஆற்றங்கரையில் பண்டையத் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியல், சமூகப் பொருளாதாரம், கலை, பண்பாடு, சூழலியல், படிப்பறிவு மற்றும் எழுத்தறிவு ஆகியவற்றை உலகிற்கு வெளிச்சமிட்டுள்ளது.

**ஆதிச்சநல்லூர் - மொகஞ்சதாரோ தொடர்பு**

ஆதிச்சநல்லூரில் கிடைத்த அனைத்து காதணிகள் மற்றும் உலோகப் பொருட்களில் துத்தநாகம் இருப்பது தெரியவந்துள்ளது. எல்லாப் பொருள்களிலும் 3-6% அளவுக்கு துத்தநாகம் உள்ளது. "ஒரு உலோகப் பொருளில் ஒரு சதவீதத்திற்கு மேல் வேறு உலோகம் இருந்தாலே, அவை வேண்டுமென்றே சேர்க்கப்பட்டதாகத் தான் பொருள். இந்தியத் துணைக் கண்டப் பகுதிகளைப் பொறுத்தவரை, இங்கும் மொகஞ்சதாரோவிலும் மட்டும்தான் இம்மாதிரி உலோகப் பொருட்களில் துத்தநாகத்தைக் கலக்கும் வழக்கம் இருந்திருக்கிறது" என்கிறார் சத்தியமூர்த்தி.

**கொடுமணல் - (நொய்யல் ஆற்று நாகரிகம்)**

சங்க இலக்கியங்களில் கொடுமணல்

பண்டைக்காலத்தில் கொடுமணல் (கொடுமணம்) கைவினைத் தொழிலுக்குப் பெயர் பெற்ற ஊராகும். புகழ்பெற்ற சங்கப் புலவர்கள் கபிலர், அரிசில் கிழார் ஆகியோர் இவ்வூர் பற்றிப் பாடியுள்ளனர். "கொடுமணம் பட்ட வினைமாண் அருங்கலம் பந்தர் பயந்த பலர் புகழ் முத்தம்" என்னும் பதிற்றுப்பத்து (74:5-6) (கபிலர்) சங்க இலக்கியக் குறிப்புகளிலிருந்து இப்பகுதி சங்ககாலத்தில் பல்வேறு வெளிநாட்டினர் வந்து சென்ற சிறப்புப் பெற்ற பன்னாட்டு வணிகத் தலமாக (பந்தர்) இருந்தது என்பதை அறிய முடிகிறது.

அகழாய்வு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து கொடுமணல் என்ற இடத்தில் அகழாய்வு மேற்கொண்டது. இவ்வகழாய்வு, பெருங்கற்காலம் மற்றும் தொடக்க வரலாற்றுக் காலப் பண்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளது. இவ்விடத்தின் வரலாற்றுச் சிறப்புகளை முதன் முதலில் 'நொய்யல் ஆற்று நாகரிகம்' என்ற அறிக்கையின் வாயிலாக வெளிக்கொணர்ந்தவர் பேராசிரியர் செ.இராசு அவர்களாவார். பின்னர், 1985 முதல் 1991 வரை பேராசிரியர் எ.சுப்பராயலு அவர்கள் தலைமையில் இங்கு நான்கு கட்டங்களாக அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. அண்மை அகழ்வாய்வு 2012 இல் நடைபெற்றது.

மட்பாண்டப் பொறிப்புகள்

தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட 300க்கும் மேற்பட்ட மட்கலப் பொறிப்புகள் இங்கு கிடைத்துள்ளன. மட்பாண்டங்களில் காணப்படும் பெயர்கள் பல (காட்டாக: ஆதன், சாத்தன், கோன், அந்தை, மகன்) சங்க இலக்கியப் பெயர்களுடன் ஒத்ததாகக் காணப்படுகின்றன. அக்காலத் தமிழ்ச் சமூகம் எழுத்தறிவு பெற்ற சமூகமாக விளங்குகின்றன எனில் மிகையன்று. அக்காலத் தமிழ்ப் பண்பாட்டோடு பிராகிருத மொழி பேசிய மக்களின் கலப்பு இருந்ததற்கான பல சான்றுகளும் (காட்டாக: நிகம விஸாகி) பானை எழுத்துப் பொறிப்புகளின் வாயிலாக வெளிப்படுவதைக் காணமுடிகிறது. இது இப்பகுதியினுடன் பிறநாடுகளைச் சேர்ந்தவர்கள் வணிக நிமித்தமாகக் கலந்துள்ளனர் என்பதைக் காட்டுகிறது.

**கொடுமணல் சிறப்புகள்**

- தமிழகத்தில் இதுவரை நடைபெற்ற அகழாய்வுகளில் நெடில் எழுத்துகள் கிடைத்ததில்லை. ஆனால், கொடுமணல் ஆய்வில் நெடில் எழுத்துகளான ஆ, ஈ என்ற எழுத்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- சமீபத்தில் (2020-21) கொடுமணல் பகுதியில் நடைபெற்ற அகழாய்வுப் பணியில் 2,300 ஆண்டுகளுக்கு முன்பு பொதுமக்கள் பயன்படுத்திய கிணறு கண்டுபிடிக்கப்பட்டது.
- தமிழகத் தொல்லியல் துறை முதன்முதலில் கொடுமணல் என்ற இடத்திலுள்ள பெருங்கற்கால நினைவுச் சின்னத்தை 1997 இல் அகழ்ந்து அவற்றை ஆய்வு செய்யும் பணியை மேற்கொண்டது.

பிற பொருட்கள்

குதிரைச் சேணத்தில் பயன்படும் இரும்பு வளையங்கள் கிடைத்துள்ளமை குதிரை அக்கால வணிகத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்ததை வெளிப்படுத்துகிறது. மத்திய தரைக்கடல் பகுதிகளிலிருந்து கடல்வழியாக குதிரைகள் ஏராளமாக தமிழகம் வந்திறங்கியதைப் பட்டினப்பாலை (185) குறிப்பிடுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

மணிகள்

கொடுமணல் பகுதியில் அரிய கற்களைக் கொண்டு மணிகள் செய்யும் தொழில் சிறப்புற்று விளங்கியுள்ளது. இங்குக் கிடைக்கும் 'பெரில்' எனப்படும் பச்சைக்கல் உலகப் புகழ்பெற்றது என்பது தெரியவருகின்றது. இந்தப் பச்சைக் கற்கள் ரோம் நாட்டினரைப் பெரிதும் கவர்ந்தது. இதைப் போன்று 'சபையர்' எனப்படும் நீலக்கல்லும் புகழ்பெற்றது. இப்பகுதியில் 'குவார்ட்ஸ்' எனப்படும் பளிங்குக்கல்லால் ஆன மணிகள் அதிக அளவில் காணப்படுகின்றன.

கொடுமணலில் அரியகல்மணிகளுக்குப் பட்டைத் தீட்டும் தொழில் நடைபெற்றுள்ளது. ஆப்கானிஸ்தானில் கிடைக்கின்ற 'லேபிஸ்லசுலி' என்ற கல்லும் குஜராத்தில் கிடைக்கின்ற கார்னிலியன் என்ற கல்லும் கொடுமணல் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை வியாபாரிகளால் வடநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டன என்பதும் இவற்றுடன் பல வகையான அரிய கல்மணிகளும் வியாபாரப் பொருளாக இங்கு இருந்தன என்பதும் தெரியவருகின்றன. இக்கல்மணிகள் சேரர்களின் துறைமுகமான முசிறி வழியாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள்

புதைகுழி மேட்டிற்கு அருகே காணப்பட்ட நினைவுக் கல் (Menhir) பெருங்கற்காலத்தைச் சேர்ந்தது என்று கணிக்கப்பட்டுள்ளது. ஈமக் குழிகள், ஈமத் தாழிகள், கற்படுக்கைப் புதைப்பு எனப் பலவகைப்பட்ட புதைக்கும் முறைகள் கொடுமணலில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பெருங்கற்காலப் பண்பாட்டைச் சேர்ந்த ஈமத் தாழியிலிருந்து 782 கார்னிலியன் மணிகள் சேகரிக்கப்பட்டன. மேலும் 169 செ.மீ நீளம் கொண்ட இரும்புவாள், செம்பு வடிக்கட்டி, சிறிய பிச்சுவாள் மற்றும் குறியீடுகளைக் கொண்ட பானை ஓடுகளும் கண்டறியப்பட்டன.

### பொருந்தல் - திண்டுக்கல் மாவட்டம்

கிடைத்துள்ள பொருட்கள்:

- புதைகுழிப் பொருட்கள், கண்ணாடி மணிகள் (வெள்ளை, சிகப்பு, மஞ்சள், நீலம் மற்றும் பச்சை வண்ணங்களில்) இரும்பு வாள்கள், தமிழ் - பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்டங்கள், அரிசி நிரப்பப்பட்ட மட்பாண்டங்கள், ஓரளவு அரிதான கற்களான படிகக்கல்,
- சிவப்பு நிற மணிக்கற்கள், சங்கு மற்றும் கண்ணாடி வளையல்கள்.
- இரும்பினாலான கதிர் அறுக்கும் அரிவாள், ஈட்டி, கொழுமுனைகள் ஆகியவை தமிழக மக்கள் நெல் விளைவித்ததற்கு சான்றுகளாய் உள்ளன.
- இங்கு கிடைத்துள்ள அரிசி நிரம்பிய பானை, மக்களின் முக்கிய உணவாக அரிசி இருந்தது என்பதை மெய்ப்பிக்கிறது.

### ஆனைமலை

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை கிராமத்தில் மானம்போழி என்ற பகுதியில் அமைந்திருந்த கல் பதுகையில், மாதிரி அகழாய்வு 1970 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. இக்கல்பதுகை பரம்பிக்குளம், ஆழியாறு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சாலைப்பகுதியில் கண்டறியப்பட்டன. இவ்வகழாய்வில் கத்தியின் கூர்முனைப் பகுதியும், கரும்பு மற்றும் சிவப்பு நிறப்பானை ஓடுகளும், பெருங்கற்கால ஈமப்பானை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டன. இவ்வகழாய்வு, ஈமச் சின்னங்களின் வகை மற்றும் ஈமபானை வகைகள் பற்றிய செய்திகளை வெளிப்படுத்தியுள்ளது. அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் பெருங்கற்காலத்தைச் சார்ந்தவைகள் ஆகும். (கி.மு.1000 முதல் கி.பி.300 வரை)

### கோவலன் பொட்டல்

கோவலன் பொட்டல் மதுரை பழங்காநத்தத்தில் அமைந்துள்ளது. தமிழ் காப்பியமான சிலப்பதிகாரத்தின் நாயகன் கோவலன் கொல்லப்பட்டதால் இப்பகுதி கோவலன் பொட்டல் எனப்படுகிறது. இப்பகுதியின் பழமையை அறியும் பொருட்டு 1980 ஆம் ஆண்டு அகழாய்வு நடத்தப்பட்டது. ஆய்வின் போது பெரிய முதுமக்கள் தாழிகள் மூன்று கண்டறியப்பட்டன. மேலும் சதுர செப்புகாசு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. காசின் ஒரு புறம் மீன் உருவம் பொறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது ஆகும். எனவே, இது முற்காலப் பாண்டியர் கால காசாக இருக்கலாம்.

### நெடுங்கூர்

நெடுங்கூர், கரூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. தென்னிந்திய கிழக்கு மேற்கு கடற்கரை பகுதிகளை இணைக்கும் கொங்கப் பெருவழித் தடத்தில் இவ்வூர் அமையப் பெற்றுள்ளதால், பண்டைய காலத்தில் முக்கிய நகரமாகத் திகழ்ந்திருக்கலாம். இங்கு அகழாய்வு 2006-2007 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. அகழாய்வு இப்பகுதியில் பெருங்கற்காலப் பண்பாடு (கி.மு.300 - கி.பி.300) நிலவியிருந்ததை வெளிப்படுத்துகிறது.

### செம்பியன்கண்டியூர்

இவ்வூர் நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ளது (காவேரி ஆற்றின் துணை ஆறான விக்ரம ஆற்றின் கரை). செம்பியன்கண்டியூரில் அகழாய்வுப் பணி 2007-08 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

அகழாய்வில் பெருங்கற்காலப் பொருட்களான கருப்பு மற்றும் சிவப்பு வண்ணப் பானை ஓடுகள், கருப்பு வண்ணப் பானை ஓடுகள் மற்றும் சிவப்பு பூச்சு பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டன. 13 வெவ்வேறு வகையான குறியீடு கொண்ட பானை ஓடுகள் அகழாய்வில் சேகரிக்கப்பட்டன. மேலும், ஐந்து முதுமக்கள் தாழிகள் வரிசையாக அடுத்தடுத்து அமைக்கப்பட்ட குழிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்காலத்தினைச் செம்பியன் கண்டியூரில் கி.மு.100 காலக்கட்டத்தில் மனிதன் வாழ்ந்துள்ளதை எடுத்தியம்புகின்றன.

**மல்லப்பாடி**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இங்கு புதிய கற்காலத்தின் பிற்பகுதி மற்றும் இரும்புக் காலத்தின் துவக்கத்தில் வாழ்ந்த மக்களின் தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. இங்கு பெருங்கற்கால மற்றும் வரலாற்றுக் காலங்களின் சான்றுகளும் கிடைத்துள்ளன. மேலும், புதிய கற்கால மெருகேற்றப்பட்ட கற்கோடரிகளும், பெருங்கற்காலக் கருப்பு-சிவப்பு மற்றும் சிவப்பு வகைப் பானை ஓடுகளும் கிடைக்கின்றன. சுடுமண் பொம்மைகள், கண்ணாடி (பளிங்கு) மற்றும் சங்கு வளையல்கள் ஆகிய தொல் பொருட்கள் கிடைத்துள்ளன.

மல்லப்பாடியில் உள்ள மலையில் பெருங்கற்காலத்தைச் சார்ந்த ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த ஓவியங்களில் இரண்டு குதிரை வீரர்கள் சண்டையிடுவது போன்ற காட்சி தீட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட தொல் பழங்கால பாறையோவியம் இதுவே ஆகும். சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தொல்லியல் துறையினர் 1978 இல் இதைக் கண்டுபிடித்தனர்.

### 1.8.3.2. தொடக்க வரலாற்றுக் காலம்

மொழியின் வரிவடிவம் தோன்றிய வரலாற்றின் தொடக்க காலத்தைச் சேர்ந்த இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் வழியாகச் சங்க கால மக்களின் வாழ்க்கை முறை குறித்த சான்றுகள் கிடைத்துள்ளன.

**கொற்கை**

கொற்கை தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டத்தில் தாமிரபரணி ஆற்றின் வடக்கே சுமார் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கொற்கை இடைச் சங்க காலத்தில் பாண்டியர்களின் தலைநகராகவும் துறைமுகமாகவும் விளங்கியது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில், முதன்முதலாகக் கொற்கை கிராமத்திற்கு வந்து கொற்கை தொடர்பான பழந்தமிழ் இலக்கியங்களையும், அயல்நாட்டவர் குறிப்புகளையும் ஆராய்ந்து பலவகை நாணயங்களையும், முதுமக்கள் தாழிகளையும் கண்டறிந்து பாண்டியர்களின் பழமையான தலைநகரம் தொன்மைச் சிறப்புமிக்க துறைமுகப்பட்டினமாகச் செயல்பட்டிருந்தது என்று கொற்கையை உலகறியச் செய்த பெருமை கால்டுவெல் அவர்களையே சாரும்.

தாலமி, பிளினி, மெகஸ்தனிஸ் போன்ற வெளிநாட்டவர் கொற்கையை கொல்சிஸ், கொல்காய் என்றும் கொற்கை துறைமுகத்தைக் கொற்கை வணிகமையம் என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

கொற்கை கடலில் நடைபெற்ற முத்துக்குளித்தல் தொழிலைப் பாண்டியர் அறநெறி தவறாது காத்து வந்துள்ளனர். இதனை,

"மறப்போர் பாண்டியர் அறத்திற்காக்கும்
கொற்கைப் பெருந்துறை முத்து"

என்று மதுரைக் கணக்காயனார் அகநானூற்றுப் பாடல் ஒன்றில் புகழ்கிறார். இப்புலவரே நற்றிணைப் பாடலொன்றில் கொற்கை முத்துகளை நன்னீர் முத்துகள் எனச் சிறப்பு செய்கிறார்.

கிரேக்கம், எகிப்து, அரபு நாட்டைச் சேர்ந்த கப்பல் மாலுமிகளுக்கும் கடல்வழி வணிகர்களுக்கும் மிகப்பெரிய வணிகத் தலமாகக் கொற்கை விளங்கியதை மேலைநாட்டு நிலநூல் வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர்.

மலோனி, லோவன்தால் போன்ற அயல்நாட்டு அறிஞர்களும் கொற்கைப் பகுதியினை ஆய்வு செய்து பழங்காசுகளைச் சேகரித்தனர். அவற்றுள் தங்கக் காசுகளும் அடங்கும். லோவன்தால் சேகரித்த பழங்காசுகள் திருநெல்வேலி காசுகள், திருநெல்வேலி தங்கக் காசுகள் என இரு நூல்களாக ஆங்கில மொழியில் வெளியிடப்பட்டுள்ளன. ரா.பி.சேதுப்பிள்ளை மற்றும் மு.வரதராசனார் ஆகியோரும் கொற்கையினை ஆய்வு செய்துள்ளனர்.

**அகழாய்வு (1968-1969)**

தமிழ்நாடு தொல்லியல் துறை தொடங்கப்பட்ட பிறகு மேற்கொள்ளப்பட்ட முதல் அகழாய்வு கொற்கை அகழாய்வு ஆகும்.

அகழாய்வில் 75 செ.மீ. ஆழத்தில் ஒன்பது அடுக்குடன் கூடிய செங்கற்கட்டடப் பகுதி ஆறு வரிசையில் இருப்பது வெளிப்படுத்தப்பட்டது. இச்செங்கற் கட்டடப்பகுதிக்கு கீழே மூன்று பெரிய சுடுமண் வளையங்கள் ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது. கி.பி 300-200 நூற்றாண்டைச் சார்ந்த தமிழ் பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும், அடுப்புக் கரித் துண்டுகளும் கண்டெடுக்கப்பட்டன. இவற்றின் காலம் கி.மு. 785 என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதன்மூலம் கி.மு.எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பாகவே, கொற்கை ஒரு துறைமுகமாகச் செயல்பட்டு வந்தது என்பது உறுதி செய்யப்படுகிறது. மேலும், சற்றேறக்குறைய கி.மு.4 ஆம் நூற்றாண்டு அளவில் கங்கைச் சமவெளி மக்களுடன் தமிழ் மக்கள் கொண்டிருந்த பண்பாட்டுத் தொடர்புக்குக் கொற்கையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மௌரியப் பானை ஓடுகள் சான்று பகர்கின்றன.

**அகழாய்வு (2021-2022)**

அகழாய்வில் 2800 ஆண்டு பழமையான செங்கல் கட்டுமானம், சங்கு அறுக்கும் இடம் கண்டுபிடிக்கப்பட்டது. அகழாய்வில் கருப்பு வண்ணப்பூச்சு பெற்ற கங்கைச் சமவெளியைச் சார்ந்த பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இவற்றைக் கவனமாக ஆய்வு செய்த இந்தியத் தொல்லியல் துறையின் முன்னாள் தலைமை இயக்குநர் முனைவர் இராகேஷ் திவாரி மற்றும் இந்து பனாரஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் இரவீந்திரநாத் சிங் ஆகியோர் கொற்கைத் துறைமுகமானது கி.மு.6 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே வெளிநாடுகளுடனும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். மேலை நாட்டினருடனும், கீழைநாட்டினருடனும் இந்தியாவின் பிற பகுதிகளுடனும் வணிகத் தொடர்பு கி.மு.8 ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே

நடைபெற்றிருந்ததைக் கொற்கை அகழாய்வின் காலக்கணக்கீடு உறுதி செய்துள்ளது.

### வசவசமுத்திரம்

காஞ்சிபுரம் மாவட்டத்தின் கடலோரப் பகுதியில் அமைந்துள்ளது. கள ஆய்வின் போது கூம்பு வடிவ ஜாடி மற்றும் ரோமானிய ஆம்போராவின் கழுத்து பகுதி ஆகியன கண்டெடுக்கப்பட்டன. இப்பகுதியில் கி.பி.1-2 ஆம் நூற்றாண்டில் (கி.பி 100-200) ரோமானியர்களுடன், வாணிகத் தொடர்பு இருந்ததை இவற்றின் மூலம் அறிய முடிகின்றது. அகழாய்வில் அடுத்தடுத்து அமைந்த இரண்டு வட்டக் கிணறுகள் வெளிப்படுத்தப்பட்டது. இவை செங்கற்சுவரில் கட்டப்பட்டுள்ள தொட்டியைச் சார்ந்து அமைந்துள்ளது. இத்தொட்டிகள் சாயம் போடுவதற்கோ அல்லது துவைப்பதற்கோ பயன்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. ரௌலட்டடு ஓடுகள், ஆம்போரே ஓடுகள், சிவப்பு வண்ணப் பானை ஓடுகள், சிவப்புப் பூச்சுப் பானை ஓடுகள், கருப்பு பூச்சு பானை ஓடுகள் மற்றும் பழுப்பு வண்ணப் பானை ஓடுகள் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட முக்கிய தொல்பொருட்களாகும்.

### கரூர்

திருச்சி நகரத்திலிருந்து சுமார் 70 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சங்ககாலச் சேரரது தலைநகரான வஞ்சி மாநகராமாக இருந்திருக்க வேண்டும் என்று பல அறிஞர்கள் கூறியுள்ளதை மெய்ப்பிக்கும் வகையில் வரலாற்று முக்கியம் வாய்ந்த பல நாணயங்களும் அணிகலன்களும் கிடைத்துள்ளன.

கரூரில் சேரர்களது சின்னமாகிய வில்லும், அம்பும் ஒரு பக்கத்திலும், யானையும், மங்கல குறிகளும் மறுபக்கத்திலும் ஏந்திய பல செப்பு நாணயங்கள் கிடைத்துள்ளன. சில சேர நாணயங்களில் அரசர்களது உருவமும் 'மாக்கோதை' என்ற பெயர்களும் பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்டிருப்பதை ரா.கிருஷ்ணமூர்த்தி வெளியிட்டுள்ளார். இங்கு நடத்தப்பட்ட அகழாய்வில் பண்டைய காலத்தில் கரூர் ஒரு முக்கிய வாணிப மையமாக திகழ்ந்ததற்கான ஆதாரங்கள் வெளிக் கொணர்ந்துள்ளது.

குறிப்பாக ரோமானிய தங்கமும் வெள்ளியும் இங்கு பெரிய அளவில் வந்ததற்கு இங்கு கிடைத்துள்ள நாணயப் புதையல்கள் சான்று பகிர்கின்றன. அவை பெரும்பாலும் ரோமானியப் பேரரசர்களான அகஸ்டஸ் (கி.மு.31- கி.மு.14), டைபீரியஸ், கிளாடியஸ், மார்க்கஸ், அயிரீலியஸ் (கி.பி.161-180) வெளியிட்ட நாணயங்களாகும். ரோமானிய நாணயங்கள் மட்டுமின்றி ரோமானிய சின்னங்கள் பொறித்த அணிகலன்களும் கிடைத்திருப்பது இவ்வணிகத் தொடர்புக்கு மேலும் சான்றாக அமைந்துள்ளன.

கரூரில் கிடைத்த அணிகலன்கள்

- கரூரில் கலைச் சிறப்புமிக்க பல பொன், வெள்ளி மோதிரங்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் 'தித்தன்', 'வெளி ஈ சாம்பன்', 'ஊபாஆன்', 'தாயன் ஓதலன்', 'சாதன்சாதி வேள்', 'நெல் வேட்டைச' (நெல்வேள் திசன்), 'குறவன்', 'வேடுவன்', 'பேர்அவதான்', 'மிதிரான்' முதலான பெயர்கள் பொறிக்கப்பட்ட மோதிரங்கள் குறிப்பிடத் தக்கவைகளாகும். இவை அனைத்தும் தமிழ்-பிராமி எழுத்துக்கள் ஆகும்.
- இவை மட்டுமின்றி ஆண்-பெண் உருவம் பொறிக்கப்பட்ட சங்க கால மோதிரம் ஒன்றும் கிடைத்துள்ளது.
- குதிரை, புலி, மீன், அப்போலோ ஆகிய உருவங்கள் பொறிக்கப்பட்ட நேர்த்தியான விலைமதிப்பிட இயலாத மோதிரங்களும் இங்கே கிடைத்துள்ளன. புலி மீதமர்ந்த அப்போலோ கணையாழி ரோம் நாட்டுத் தொடர்பை உணர்த்துகின்றது.

### பனையக்குளம்

பனையக்குளம் என்ற கிராமம் தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. அகழாய்வில், கி.பி.8 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அழகிய சுடுமண் உருவத் தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் கி.பி. 300-1300 ஆம் ஆண்டு வரை மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் காட்டுகின்றன.

### தொண்டி

தொண்டி, இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடானையிலிருந்து சுமார் 25 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கு பிற்காலத்தைச் சார்ந்த பானை ஓடுகளும் செங்கற்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

### அழகன்குளம்

அழகன்குளம் இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. அகழாய்வில் தமிழ் பிராமி பொறிக்கப்பட்ட சிவப்பு நிற பானை ஓடுகளுடன் மத்திய தரைக்கடல் பகுதியைச் சார்ந்த நூற்றுக்கு மேற்பட்ட ரௌலட்டட் மற்றும் ஆம்போரா பானை ஓடுகளும் கிடைக்கப் பெற்றன.

தமிழ் பிராமி பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கி.பி. 100 காலத்தைச் சார்ந்ததாகும். மேலும், துளையுடன் கூடிய ஓடுகள், செங்கற்கள், மணிகள் மற்றும் மூன்று ரோமானியக் காசுகள் அகழாய்வில் சேகரிக்கப்பட்டுள்ளன. ரோமானியக் காசு ஒன்றில் முன்புறம் ரோமானியப் பேரரசரின் தலைப் பகுதியும், பின்புறம் வெற்றி தெய்வத்தின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்தமைதியின் மூலம் பேரரசன் 2 வது வேலன்டைன் (கி.பி. 375) காலத்தில் இக்காசு வெளியிட்டதாக அறியப்படுகிறது. மேலும், சதுரவடிவிலான பாண்டியர் காசுகளும் இங்கு கிடைத்துள்ளன.

வடநாட்டுப் பானை ஓடுகளும் (North Indian Polished Black Ware) இப்பகுதியில் ஆய்வில் கிடைத்துள்ளதால், அழகன்குளத்திற்கும், வடஇந்தியாவிற்கும் குறிப்பாக கங்கைநதிப் பகுதிக்கும் இடையில் தொடர்பு இருந்துள்ளது தெரியவருகிறது. அழகன்குளத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள பானை ஓடு ஒன்றில் பண்டைய தமிழ் எழுத்தில் 'சமுதஹ' என்று பொறிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் காணப்படும் குகைக் கல்வெட்டுகளிலும் 'சமுதஹ' என்ற சொல் காணப்படுகிறது. இக்கண்டுபிடிப்பின் வாயிலாக இலங்கைக்கும், தமிழகத்திற்கும் உள்ள நெடுங்காலத் தொடர்பினை அறியமுடிகிறது.

அழகன்குளம் அகழாய்வில் கிரேக்க கலைப் பாணியை ஒத்துள்ள ஒரு பெண் தன் குழந்தையை இடுப்பில் தாங்கி உள்ளதைப் போன்று சுடுமண்

பொம்மை கண்டெடுக்கப்பட்டுள்ளது. கிரேக்க கலையின் தாக்கமும் தொடர்பும் இக்கண்டுபிடிப்பின் வாயிலாகத் தெரியவருகிறது. வேறொரு பானை ஓட்டில் மூன்று பெண்கள் விசிறியை தம் கைகளில் கொண்டும், ஒரு கை மதுக்குடத்தைத் தாங்கியும் காணப்படுகின்றனர். இவ்வுருவங்கள் எகிப்து பிரமீடுகளில் உள்ள வண்ண உருவங்களை ஒத்துள்ளன.

அழகன்குளத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு ரௌலட்டட் வகைப் பானை ஓட்டில் கப்பல் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கப்பலின் உருவம் கி.பி.முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த ரோமானிய மொசைக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ள உருவத்தினை மிகவும் ஒத்துள்ளது. அழகன்குளம் அகழாய்வில் சுடுமண்ணால் செய்த கூரை ஓடுகளுடன் ரோமானிய ஓடுகளும் கலந்து காணப்படுகின்றன. இங்கு ரோமானியர்கள் வந்து வாழ்ந்தமைக்கு அவர்கள் விட்டுச் சென்ற தொல்பொருட்களான மட்பாண்டங்களின் எச்சங்கள், கூரை ஓடுகளுடன் ஏராளமாகக் கலந்து கிடைத்துள்ளன. எனவே, ரோமானியர்கள் வணிகத்திற்கெனத் தமிழகத்தில் நீண்டநாட்கள் தங்கியிருந்திருக்க வேண்டும் என்பதையும் அறிய முடிகின்றது.

**வடஇந்திய பளபளப்பான மட்பாண்டம் (North Indian Polished Black Ware)**

வடஇந்திய அகழாய்வுகளில் கிடைக்கப்பெற்ற மட்பாண்டங்கள் 'மௌரியர் மட்பாண்டங்கள்' என்று கூறப்படும் பளபளப்புமிக்க கருமை நிறமுடையவை. தமிழ்நாட்டில் கொற்கை, அழகன்குளம் அகழாய்வுகளில் இவை கிடைத்துள்ளன.

**திருக்கோவிலூர்**

திருக்கோவிலூர் விழுப்புரம் மாவட்டத்தில் பெண்ணையாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. இவ்வூர் சங்க காலத்துக் குறுநில மன்னனான மலையமானின் தலைநகரமாகத் திகழ்ந்துள்ளது. அகழாய்வில் கி.பி. 100-300 காலத்தைச் சார்ந்த பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும், கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சார்ந்த **பெண் உருவம் பொறிக்கப்பட்ட சிவப்பு வண்ணப் பானை ஓடு** மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

**காவிரிப்பூம்பட்டினம் (புகார்)**

சங்க காலத்தில், சோழர்களின் ஒரு முக்கிய துறைமுகப்பட்டினமாகவும், இரண்டாம் தலைநகரமாகவும் திகழ்ந்த நகரம் புகார் அல்லது காவிரிப்பூம்பட்டினம் (நாகப்பட்டினம் மாவட்டம்) ஆகும். காவிரி ஆறு கடலில் கலக்கும் இடத்தில் இந்நகரம் அமைந்துள்ளது. கி.பி.2 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த ரோம் நாட்டு ஆசிரியரான தாலமி, 'காவிரிப்பூம்பட்டினம் ஒரு வணிக முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகத் திகழ்ந்தது' என்று குறிப்பிட்டுள்ளார்; 'கபேரிஸ் எமபோரியான்' என்று இவ்வூரை அவர் குறிப்பிட்டுள்ளார். 'பெரிப்ளஸ்' என்னும் நூலில் இந்நகரின் பெயர் குறிக்கப்படவில்லை. ஆயினும், கடலோரத்தில் உள்ள சோழர்களின் தலைநகரம் என்று இவ்வூர் குறிப்பிடப்பட்டுள்ளது. பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பழந்தமிழ் இலக்கியங்கள், புகார் நகரில் சிறப்புற்றுத் திகழ்ந்த மாளிகைகள், கோயில்கள், அங்காடிகள், மக்கள் வாழ்வியல் பற்றி எல்லாம் விரிவாகக் கூறியுள்ளன.

புகார் என்றால் ஆறு கடலில் சங்கமம் ஆகும் இடம். பூம்புகார் என்பது காவிரியாறு கடலில் புகும் இடமாகும். இந்நகருக்கு பூம்புகார், காவிரிப்பூம்பட்டினம், காகந்தி, சம்பாபதி, பலர் புகழ் மூதூர், மண்ணகத்து வான்பதி, சோழபட்டினம் மற்றும் கோலபட்டணம் என்று பல பெயர்கள் உண்டு.

பூம்புகார் நகரம் மருவூர்பாக்கம், பட்டினப்பாக்கம் என்ற இரண்டு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இரண்டு பகுதிகளுக்கும் இடையில் நாளங்காடி இருந்தது. மருவூர் பாக்கத்தில் பல தொழில் செய்பவர்கள் வாழ்ந்து வந்தனர். பட்டினப்பாக்கத்தில் அரசனுடைய மாளிகை, அவருடைய சுற்றம், பெருங்குடி வணிகர், உழவர் முதலியோர் வாழ்ந்தனர்.

சங்ககாலச் சோழப் பெருமன்னன் கரிகாற்பெருவளத்தான் காவிரிப்பூம்பட்டினத்தைத் தன்னுடைய இரண்டாவது தலைநகராக ஆக்கிக்கொண்டான் என்பதையும் காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் இருந்த படகுத்துறைகளையும் ஏற்றுமதி - இறக்குமதி பொருட்களையும் பற்றி பட்டினப்பாலை என்னும் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. காவிரிப்பூம்பட்டினத்தில் நிலைத்திருந்த சைவ, வைணவ சமயங்களைச் சார்ந்த கோயில்களைப் பற்றியும், புத்த - சமண மதத்தைச் சார்ந்த சைத்தியங்களைப் பற்றியும் சிலப்பதிகாரம் கூறுகின்றது. காவிரிப்பூம்பட்டினத்தில் புத்த மதம் சிறந்தோங்கியிருந்ததை மணிமேகலைக் காப்பியத்தின் மூலமாகத் தெரிந்து கொள்கின்றோம். காவிரிப்பூம்பட்டினம் கடல் கொந்தளிப்பால் ஒரு சமயம் அழிந்தது என மணிமேகலை குறிப்பிடுகிறது. ஆனால், அது முழுமையாக அழிந்து விடவில்லை என்பதை பிற்காலக் குறிப்புகளால் (கி.பி.5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அபிதம்மவதாரம், 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அப்பர், திருஞானசம்பந்தர் பாடல்கள்) அறியமுடிகிறது. அகழ்வாராய்ச்சிகளும் இதை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளன.

**இந்தியத் தொல்லியல் துறை அகழாய்வு**

1962 இல் இந்தியத் தொல்லியல் துறை இங்கு அகழாய்வு நடத்தும் பணியைத் தொடங்கியது. வாணகிரி என்னும் ஊரின் அருகில் கடலோரப் பகுதியில் சோழ மன்னர்களின் புலி இலச்சினைகளைக் கொண்ட சதுர வடிவக் காசுகளும், பல வண்ணக் கற்களால் செய்யப்பட்ட எண்ணற்ற அணிகலன்களும், ரோமானிய மட்பாண்டச் சிதைவுகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

வெள்ளையன் இருப்பு என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ரோமானிய நாணயமும், வாணகிரியை அடுத்துள்ள கடலோரப் பகுதியில் கிடைத்த ரோமானிய மட்பாண்டங்களும் இங்கு யவனர் தங்கியிருந்ததை உறுதி செய்கின்றன.

**பௌத்தப்பள்ளி**

1963-64 ஆம் ஆண்டுகளில் மேலும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அப்பொழுது மூன்று பெரும் செங்கற்கட்டட அமைப்புகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. அவற்றில் மிகவும் முக்கியமானது பௌத்தப்பள்ளி

ஆகும். மேலையூர் என்னும் பகுதியில் பல்லவனீச்சுரம் என்னும் கோயிலுக்கு அருகாமையில் இந்தப் பௌத்த விகார் உள்ளது. அதன் ஓர் அறையில் புத்தரின் சிறிய செப்புத் திருமேனியும் கண்டெடுக்கப்பட்டது. மற்றோர் அறையில் புத்தபிரானின் பாதங்களை ஏந்தி நிற்கும் அழகிய சலவைக்கல் கண்டெடுக்கப்பட்டது. இது புகழ்மிக்க பௌத்த தலங்களாகிய அமராவதி, நாகார்ஜுன கொண்டா போன்ற இடங்களில் உள்ள சிற்ப வேலைப்பாட்டை ஒத்து இருக்கின்றது.

கி.பி.4 ஆம் நூற்றாண்டு அளவில் இங்கே புத்தமதத் துறவிகளின் மடங்கள் இருந்ததற்கான குறிப்புகள் இலக்கியங்களில் இருக்கின்றன. உறையூரைச் சார்ந்த புத்ததத்தன் என்னும் அறிஞர் புத்தமதக்கோட்பாடுகளைக் கற்றுத் தேர்வதற்காக இரண்டுமுறை ஈழத்திற்குச் சென்றதாகவும், பிறகு காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள கணதாசருடைய மடத்தில் தங்கி அபிதம்மவதாரம் என்னும் நூலை எழுதியதாகவும் நூலின் முகவுரையில் குறிக்கப்பட்டுள்ளது.

படகுத்துறை

கடற்கரையிலிருந்து மேற்கில் உள்ள கீழையூரில் சிறிய படகுகளை நிறுத்தி, சரக்குகளை இறக்குமதி ஏற்றுமதி செய்வதற்கான சிறிய முன் துறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சுவரில் அங்குமிங்கும் மரக்கம்பங்கள் பொருத்தப்பட்டிருப்பது நன்கு தெரிகின்றது. கார்பன் 14 ஆய்வின்படி அவை சுமார் கி.மு.3 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்று கணிக்கப்பட்டது.

நீர்த்தேக்கம்

சோழர் காலத்தைச் சேர்ந்த நீர்த்தேக்கம் ஒன்று வாணகிரி என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை அகழாய்வு

தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை, கிழார் வெளி மற்றும் தர்மகுளம் பகுதியில் அகழாய்வை மேற்கொண்டது. கிழார்வெளி அகழாய்வில் கண்டறியப்பட்ட கட்டட அமைப்பு படகுத்துறையாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

கிழார் வெளியில் வெளிப்படுத்தப்பட்டுள்ள படகுத்துறை முன்னர் இந்திய தொல்லியல் துறையால் வெளிப்படுத்தப்பட்டுள்ள (கீழையூர்) படகுத்துறையின் மறுவடிவம் போன்று காணப்படுவதாக நடன.காசிநாதன் அவர்கள் தெரிவித்துள்ளார். கோவா தேசிய கடல் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து, 1996-97 ஆம் ஆண்டு இக்கடற்கரைப் பகுதியில் ஆழ்கடல் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

காவிரிப்பூம்பட்டினத்தில் மணிவகைத் தொழில்

காவிரிப்பூம்பட்டினத்தில் பல வண்ணக் கற்களால் செய்யப்பட்ட மணிகள் மிகவும் அதிக அளவில் கிடைத்துள்ளன. இதிலிருந்து காவிரிப்பூம்பட்டினம், மணிகள் செய்யும் தொழிலுக்கும், அதன் வியாபாரத்திற்கும் மையமாக அமைந்திருந்தது என்று கணிக்கப்படுகிறது.

மூலக்கற்கள் கிடைக்காத கடலோரப் பகுதியான காவிரிப்பூம்பட்டினத்தில் பல வண்ணக்கல் மணிகளாலான அணிகள் கிடைத்திருப்பது வியப்பாக உள்ளது. ஆகவே, இந்த மூலப் பொருட்கள் எல்லாம் மலைப்பகுதிகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகின்றது. 'வடமலைப் பிறந்த மணியும்' என்று தொடங்கும் பட்டினப்பாலையிலுள்ள வரிகள் இங்குக் கருதத்தக்கது.

உறைகிணறு மற்றும் நாணயம்

காவிரிப்பூம்பட்டினம் கடற்கரையின் அருகிலே சில கிணறுகள் பூமிக்கடியில் காணப்பட்டன. இக்கிணறுகளின் புறங்கள் சுடுமண் பூசப்பட்டும் அதன் மேல் கெட்டியான களிமண் பூசப்பட்டும் விளங்கின. இவற்றை உறை கிணறு என்று அழைப்பர். பட்டினப்பாலையில் கடற்கரை ஓரத்தில் உறை கிணறுகள் இருந்தன என்று "உறைகிணற்றுப் புறச்சேரி" என்று குறிப்பிட்டுள்ளது.

செப்புக் காசுகளும் இங்கு ஏராளமாகக் கிடைத்துள்ளன. அவற்றில் சதுரமாகவும், வட்டமாகவும் உள்ள காசுகள் பல இருக்கின்றன. இக்காசுகளின் முன்புறம் வாலைத் தூக்கி நிற்கும் புலியின் உருவமும் அதன்மேல் சூரியனின் உருவமும் காணப்படுகிறது. பின்புறத்தில் யானையின் உருவம் காணப்படுகிறது. சோழர்களது இலச்சினையான புலி காணப்படும். இக்காசுகள் கரிகாலன் காலத்தவையாக இருக்கலாம். அமரர் தருவைச் சின்னமாக உடைய பண்டைய காசு ஒன்றும் காவிரிப்பூம்பட்டினத்தில் கிடைத்தது. வெள்ளையன் இருப்பு என்ற இடத்தில் ரோமானிய செப்புக் காசு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

**மாளிகைமேடு**

கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. 1999-2000 ஆம் ஆண்டு அகழாய்வு நடத்தப்பட்டது. அகழாய்வின் மூலம் மூன்று காலகட்டப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் முகமாகத் தொல்பொருட்கள் மற்றும் உஜ்ஜயின் குறியீடு கொண்ட சாதவாக அரசர்கள் காலச் செப்புக் காசு ஆகியவை கண்டெடுக்கப்பட்டன. கி.மு.300 முதல் கி.பி.1300 வரை இப்பகுதியில் மக்கள் வாழ்ந்தனர் என்பது தொல்லியல் சான்றுகளால் அறியப்படுகின்றது.

**பேரூர்**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இங்கு 2002 ஆம் ஆண்டு அகழாய்வு நடத்தப்பட்டது. முக்கிய தொல்பொருட்களாக, சுடுமண் முத்திரை ஒன்றில் வில், அம்பும் அவற்றின் இருபுறமும் விளக்குகளும், மேற் பகுதியில் பிறை நிலவின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது. இது சேர மன்னனின் அரச முத்திரையாகும். மேலும், உத்திரபிரதேசம், மதுராவில் கண்டெடுக்கப்பட்ட சுடுமண் உருவத்தை ஒத்த சுடுமண் உருவத்தின் ஒரு பகுதி கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 5-6 ஆம் நூற்றாண்டு ஆகும். அகழாய்வில் சங்கு வளையல் துண்டுகளும், வண்ண மணிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**ஆண்டிப்பட்டி**

ஆண்டிப்பட்டி, திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இங்கு அகழாய்வு 2004-05 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. நத்தமேடு மற்றும் சாம்பல்காடு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் பெருங்கற்காலம் மற்றும் வரலாற்றுக் கால தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், குறியீடு பானை ஓடுகள் தாய் உருவ சுடுமண் உருவம் ஆகியவை அகழாய்வில் சேகரிக்கப்பட்ட முக்கிய தொல்பொருட்களாகும். ஆண்டிப்பட்டி அகழாய்வில் கிடைக்கப்பெற்ற சுடுமண் காளை உருவம் சிறப்பானதாகும்.

### மாங்குளம்

மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ளது. வரலாற்றுக் காலம் மற்றும் இடைக்காலப் பண்பாடு இங்கு நிலவியிருந்ததை அகழாய்வின் மூலம் அறியப்படுகிறது.

### அரிக்கமேடு

#### அமைவிடம் மற்றும் பெயர்

அரிக்கமேடு, புதுச்சேரி நகருக்கு தெற்கே 6 கி.மீ. தொலைவில் அரியாங்குப்பம் ஆற்றின் வலது கரையோரத்தில் அமைந்துள்ளது. இங்கு கி.மு.200 முதல் கி.பி.200 வரை வாணிபம் நடந்ததற்கான ஆதாரங்கள் அகழாய்வு மூலம் கிடைத்துள்ளன. இவ்விடம் ஒரு இந்தோ-ரோமானிய வணிக நகரமாகவும், தொடக்ககால இந்தோ-பசிபிக் மணிகள் தயாரிக்கும் இடமாகவும் இருந்தது. அரிக்கமேடு 'இந்தோ- ரோமானிய வணிக நிலையம்' என்று அழைக்கப்பட்டது.

'அரிக்கமேடு' என்ற சொல் 'அருக்குமேடு' அல்லது 'அருகன் மேடு' என்ற வார்த்தையிலிருந்து பெறப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. மேலும், இது இந்த நகரம் 'விராய்ப்பட்டினம்' அல்லது 'விராம்பட்டணம்' என்ற பெயருடன் இணைக்கப்பட்டுள்ளது. எரித்திரியன் கடலின் பெரிப்ளஸ் நூலில் இடம்பெற்றுள்ள 'பொதுகே' (Poduke) மற்றும் தாலமியின் புவியியல் நூலில் இடம்பெற்றுள்ள பொதுகே எம்போரியம்' ஆகிய இடங்கள் அரிக்கமேட்டைக் குறிப்பதாகவே ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

#### ஆய்வுகள்

பதினெட்டாம் நூற்றாண்டில் அறிக்கேமட்டில் காணக்கூடிய எச்சங்களை லு ஜென்டில் என்பவர் முதன்முதலில் விவரித்தார். ஆனால் தொல்பொருள் கவனத்தை முதலில் ழுவோ துய்ப்ராய் செலுத்தினார். அவர் அவர் 1937 ஆம் ஆண்டிலும் அதற்குப் பிறகும் அரிக்கமேட்டில் இருந்த மணிகளையும், மட்பாண்ட ஓடுகளையும் சேகரித்தார். அவற்றுள் குறிப்பிடத்தக்கது உரோமானியப் பேரரசன் அகஸ்டஸ் சீசரின் தலை பொறிக்கப்பட்ட மணிக்கல் ஒன்றாகும். இதன் தொடர்ச்சியாக, 1941 ஆம் ஆண்டு மற்றும் அதற்குப் பிறகு, பாண்டிச்சேரியின் சகோதரர் எல். ஃபௌஷெக்ஸ் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டார். அரிக்கமேட்டுப் பகுதியில் அறிவியல் சார்ந்த அகழாய்வினை இந்தியத் தொல்லியல் துறையின் தலைமை இயக்குநராக விளங்கிய சர் மார்டிமர் வீலர் என்பார் 1945 ஆம் ஆண்டு மேற்கொண்டார். மேரி கஸால் (1947 - 1950) என்பவர் அரிக்கமேடு உண்மைகளை பிரெஞ்சு மொழியில் நூலாக வெளியிட்டார். பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியை விமலா பெக்ளி என்பார் 1989-92 ஆம் ஆண்டுகளில் இங்கு மீண்டும் அகழாய்வுகளை மேற்கொண்டார்.

#### முக்கிய கண்டுபிடிப்புகள்

**பண்டகசாலை**

வீலர் மேற்கொண்ட அகழாய்வுகளில் இப்பகுதியில் செங்கற்களால் கட்டப்பட்ட பல கட்டடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. வடக்குப் பகுதியில் நடந்த அகழாய்வில் இங்கு ஒரு பண்டக சாலை இருந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. உள் நாட்டில் இருந்து வரும் ஏற்றுமதிப் பொருள்களையும் வெளி நாட்டில் இருந்து வரும் பொருள்களை இறக்கி வைக்கவும் இப்பண்டக சாலை பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பண்டக சாலை 45 மீட்டர் நீளமும் 11 மீட்டர் அகலமும் உடையது.

**சாயத்தொட்டிகள்**

அரிக்கமேட்டின் தென் பகுதியில் அகழாய்வில் இரண்டு சாயத் தொட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன. தொட்டிகள் இரண்டும் 3மீ x 4 மீ அளவினை உடையவை. அரிக்கமேட்டில் நெசவுத் தொழில் சிறந்து விளங்கியிருந்துள்ளமையை இக்கட்டிடத்தின் பயன்பாட்டின் மூலம் அறிய முடிகிறது. வெண்துகில்களுக்குச் சாயமிடுவதற்கு இத்தொட்டிகள் பயன்படுத்தப்பட்டுள்ளமையை அறிய முடிகிறது. இப்பகுதியில் பல உறைக்கிணறுகளும், தானியக்கிடங்கும் கண்டுபிடிக்கப்பட்டன.

**சங்க கால சோழர் நாணயம்**

1989-92 இல் இங்கு நடந்த அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட ஒரு சதுர வடிவ செப்பு நாணயம் சங்ககாலத்தைச் சேர்ந்ததாகக் கருதலாம். பூம்புகாரில் 1962-65 ஆண்டுகளில் நடந்த அகழ்வாய்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள் போன்றே இதுவும் உள்ளது. இதன் ஒரு பக்கத்தில் நிற்கும் யானையும், அதன் மேற்புரத்தில் 'ஸ்ரீவத்சம்' என்னும் இலக்குமியைக் குறிக்கும் மரு அல்லது சின்னம் உள்ளது. பக்கத்தில் குடையும், குதிரையும் பொறிக்கப்பட்டுள்ளன. மறுபக்கத்தில் ஒரு குதிரையும், ஒரு காலைத் தூக்கிக் கொண்டு நிற்கும் ஒரு புலியும் காணப்படுகின்றன.

**ரோமானிய மட்பாண்டங்கள்**

அரிக்கமேடு அகழாய்வில் உள் நாட்டில் தயாரிக்கப்பட்ட மட்கலன்களும் வெளி நாடுகளில் இருந்து தயாரிக்கப்பட்டுக் கொண்டுவரப்பட்ட மட்கலன்களும் பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்டன. குறிப்பாக உரோமாபுரியைச் சார்ந்த மட்கலன்களான அரிட்டைன், ஆம்போரா மதுக் குடுவைகள் ரௌலட்டட் எனப்படும் தட்டு வகைகள் பெருமளவில் கிடைத்தன. பேராசிரியர் விமலா பெக்ளி நடத்திய அகழாய்வில் டெர்ரா சிகிலிட்டா என்ற பகுதியில் தயாரிக்கப்பட்ட மட்கல ஓடுகளும் கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இம்மட்கலக் கண்டுபிடிப்புக்கள் மூலம் மத்தியத் தரைக்கடல் வாணிகர்கள் இத்துறைமுகத்திற்கு வருகைப் புரிந்துள்ளமையை அறியமுடிகிறது.

**தொல்பொருட்கள்**

அரிக்கமேடு அகழாய்வில் அரிய கல்மணிகள் தங்கத்திலான மணிகள், சங்கு வளையல்கள், மணிகள், சுடுமண் மணிகள் பெருமளவில் கிடைத்தன. அரிய கல்மணிகள் இந்நகரத்திற்கு அருகில் இருந்த மணிக்கொல்லை என்ற பகுதியில் தயாரிக்கப்பட்டு வெளி

நாடுகளுக்கு ஏற்றுமதி இத்துறைமுகத்தின் வாயிலாக ஏற்றுமதி செய்யப்பட்டன. இவ்வகழாய்வில் சுடுமண் உருவங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. சுடுமண் உருவங்களில் அழகும் வனப்பும் மிக்க பெண் உருவம் குறிப்பிடத்தக்கது. இப்பெண் தன் ஒரு கையைத் தொடையில் இருத்தியவாறு மறு கையில் கூடை ஒன்றினைத் தாங்கியவாறு காணப்படுகிறாள். தேர் உருவம் பொறிக்கப்பட்ட முத்திரை ஒன்றும் இங்கு கிடைத்தது. இதன் நீளம் 5.5 க.செ.மீ. அகலம் 5.0 செ.மீ. களிமண்ணால் உருவாக்கப்பட்ட இம்முத்திரையில் தேரினை இரண்டு குதிரைகள் இழுக்க அதன் மீது நின்ற நிலையில் தேரோட்டி உருவம் பொறிக்கப்பட்டு மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

எழுத்துப்பொறிப்பு

அரிக்கமேடு அகழாய்வுகளில் தொன்மையான தமிழ் எழுத்துப் பொறிப்புக்கள் கொண்ட மட்கல ஓடுகள் பல கண்டுபிடிக்கப்பட்டன. முதன் முதலில் தமிழி (தமிழ்-பிராமி) எழுத்துப் பொறிக்கப்பட்ட மட்கல ஓடுகள் அகழாய்வில் கிடைத்த இடமாக அரிக்கமேடு விளங்குகிறது.

சிறப்பு

தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையில் பல துறைமுகங்கள் சங்க காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கியிருந்தமையை சங்க இலக்கியங்கள் சுட்டுவதை அறிவியல் முறை அடிப்படையில் நடத்தப்பட்ட அகழாய்வுகள் பல உறுதி செய்து வருகின்றன. தமிழர்கள் கடல் கடந்து வாணிகம் மேற்கொண்டு தமிழகத்தின் நறுமணப் பொருள்களையும் பட்டாடைகளையும் அணிமணிகளையும் ஏற்றுமதி செய்தும் மேலை நாடுகளின் பல பொருள்களை தமிழகத்திற்கு இறக்குமதி செய்ததையும் குறிப்பாக யவனர்கள் தமிழகத்துடன் பெரிதும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதையும் மெய்ப்பிக்கும் வகையில் தமிழகத்தில் கடற்கரைப் பகுதிகளில் நடந்த அகழாய்வுகள் உறுதி செய்கின்றன.

இராமநாதபுரம் பகுதியில் அழகன் குளம் என்ற இடத்தில் தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை மேற்கொண்ட அகழாய்வுகளிலும் மேற்கு நாடுகளுடன் தமிழகம் சங்க காலத்தில் மேற்கொண்ட வாணிகத் தொடர்பை அறிய முடிகிறது. இதே போன்று காவேரிப் பூம்பட்டினம் அகழாய்வும் மேலைக் கடற்கரையில் பட்டினம் என்ற இடத்தில் நடத்தப்பட்ட அகழாய்வும் செங்கடற் பகுதியில் பெரினிகே மற்றும் குவசீர் அல் குதாம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட அகழாய்வுகளும் சங்கத் தமிழர்களின் கடல் கடந்த வாணிகத் தொடர்பை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன.

திருக்காம்புலியூர்

திருக்காம்புலியூர், கரூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இங்கு 1962-63 இல் சென்னைப் பல்கலைக்கழகம் அகழாய்வு மேற்கொண்டது. திருக்காம்புலியூர் அகழ்வாய்வில் சேமிப்பு அறை என்று கருதப்படுகின்ற கட்டடம் ஒன்று வெளிப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி.4-ஆம் நூற்றாண்டு ஆகும்.

உறையூர்

சங்ககாலச் சோழர்களின் தலைநகராகத் திகழ்ந்த உறையூர் இன்றைய திருச்சி நகரில் ஒரு பகுதியாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. உறையூர், உறந்தை, கோழி அல்லது கோழியூர் என்னும் பல பெயர்களில் இது வழங்கி வந்திருக்கின்றது. கி.மு.1 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பெரிப்ளஸின் நூல் உறையூரை 'அருகரு' என்று குறிக்கின்றது. மிகப் பழங்காலத்தில் இருந்தே உறையூர் பருத்தி நெசவுக்கும் பட்டு நெசவுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகத் திகழ்ந்து வந்திருக்கின்றது. பருத்திப் பொருட்களின் வணிகத்திற்கு உறையூர் மையமாகத் திகழ்ந்திருக்கிறது என்பதைப் பெரிப்ளஸ் எழுதிய நூலில் இருந்தும் அறிகின்றோம்.

உறையூரில் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையானது 1964-1968 ஆம் ஆண்டு வரை T.V.மகாலிங்கம் அவர்களின் தலைமையில் அகழாய்வுகளை மேற்கொண்டது. இந்த அகழாய்வுகளில் இரண்டு பெரிய கால கட்டங்களைச் சேர்ந்த பண்பாட்டுக் கூறுகளுக்கான ஆதாரங்கள் வெளிக் கொணரப்பட்டன. முதற்காலம் கி.பி.3 அல்லது 4 ஆம் நூற்றாண்டுகளையும், இரண்டாம் காலம் கி.பி.5-ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட ஆண்டுகளையும் சேர்ந்ததாகும். இங்கே கிடைத்துள்ள காவி வண்ணம் தீட்டப்பட்ட ஓடுகளும், ரௌலட்டட் ஓடுகளும், கி.பி. 1 ஆம் நூற்றாண்டுக்கு அருகிலுள்ள காலத்தைத் துல்லியமாகக் காட்டுகின்றன. பிராமி எழுத்துக்களைக் கொண்ட பானை ஓடுகள் மிகுந்த எண்ணிக்கையில் கிடைத்திருப்பது மிகவும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஒரு நீண்ட பானை ஓட்டில் 'முலான்பேடு அந்தணன்' என்ற பிராமி எழுத்துக்கள் உள்ளன. இங்கு கிடைத்துள்ள செங்கற்களால் கட்டப்பட்டுள்ள சாயத் தொட்டியின் வடிவம் முதலாவது காலத்தைச் சேர்ந்த மிக முக்கியமான கட்டட அமைப்பாகும். இது, அரிக்கமேட்டில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சாயத்தொட்டியைப் பெரிதும் ஒத்திருக்கின்றது. ஆகவே, மிகப் பழங்காலத்தில் இருந்தே தென்னிந்தியா முழுவதற்கும் கைத்தறி நெசவுத் தொழிலுக்குப் பெயர்பெற்ற நகரமாக உறையூர் திகழ்ந்து வந்திருக்கின்றது என்பது தெரிகின்றது.

**கீழடி - சிவகங்கை மாவட்டம் (வைகை நதிக்கரையில் சங்க கால நகர நாகரிகம்)**

அமைவிடம்

தமிழகத்தின் ஒரு கோவில் நகரமாகத் திகழும் மதுரை நெடுஞ்சாலை வழியே கிழக்கு தென்கிழக்காக 13 கி.மீ. தொலைவில் கீழடி (திருப்பத்தூர் தாலுகா) அமைந்துள்ளது.

ஆய்வுகள்

2014-15, 2015-16 மற்றும் 2016-17 ஆம் ஆண்டுகளில் கீழடியில் இந்திய தொல்லியல் துறையின் அகழாய்வுப் பிரிவின், பெங்களூரு பிரிவு அகழாய்வு மேற்கொண்டது. கீழடியில் நான்காம் கட்ட அகழாய்வினைத் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 2017-18 ஆம் ஆண்டு மேற்கொண்டது. 2018-19 ஆம் ஆண்டு ஐந்தாம் கட்ட முறையான தொல்லியல் அகழாய்வானது நிறைவுப் பெற்றுள்ளது.

**கீழடி : ஒரு முக்கிய திருப்புமுனை**

கீழடி அகழாய்வில் வெளிக்கொணரப்பட்ட தொல்பொருட்கள் இதுவரை தமிழக வரலாற்றில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த கருதுகோள்களைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய அல்லது மறுபரிசீலனை செய்ய வேண்டிய சூழலை ஏற்படுத்தி உள்ளன என்றால் மிகையாகாது.

பொதுவாக 'சங்க காலம்' என்பது கி.மு.3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.3-ஆம் நூற்றாண்டு வரை என்று கருதப்பட்டு வந்தது. ஆனால், கீழடியில் கிடைத்த காலக்கணிப்புகள் தமிழகத்தின் எழுத்தறிவை கி.மு.6 ஆம் நூற்றாண்டுக்கு எடுத்துச் செல்வதால் சங்க காலத்தின் காலவரையறையை மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டியுள்ளது.

கொடுமணல், பொருந்தல் ஆகிய இடங்களில் கிடைத்த தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்புபெற்ற மட்பாண்டங்களின் காலம் கி.மு.5-ஆம் நூற்றாண்டு வரை இட்டுச் செல்கிறது. ஆனால், கீழடியில் கிடைத்த அறிவியல் சார்ந்த கால கணிப்புகள் இதன் காலத்தை மேலும் ஒரு நூற்றாண்டுப் பழமையானதாக அதாவது கி.மு.6-ஆம் நூற்றாண்டின் நிலை நிறுத்தி உள்ளதே கீழடி ஆய்வுகளின் சிறப்பு அம்சமாகும்.

கி.மு.6-ஆம் நூற்றாண்டு அளவிலேயே தமிழகம் எழுத்தறிவு பெற்ற சமூகமாக விளங்கி இருப்பதால் கி.மு.6-ஆம் நூற்றாண்டு அளவிலேயே தொடக்க வரலாற்றுக் காலம் தொடங்கி விடுவதால் வரலாற்றுக் காலத்துக்கு முந்திய இரும்புக்காலம் கி.மு.2000-த்தில் தொடங்கி விடுகிறது எனலாம்.

சேலம் பகுதியில் மாங்காடு மற்றும் தெலுங்கனூர் பகுதியில் பெருங்கற்படைச் சின்னத்தில் கிடைத்த தொல்லியல் சான்றுகள் அறிவியல் காலக்கணிப்புக்கு உட்படுத்தப்பட்டு இரும்பின் காலம் கி.மு.2000-த்திற்கு எடுத்து செல்லப்பட்டதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

இந்தியாவில் கங்கைச் சமவெளி பகுதியில் கி.மு.6 ஆம் நூற்றாண்டு அளவில் தோன்றிய இரண்டாம் நகரமயமாக்கம் தமிழகத்தில் காணப்படவில்லை என்ற கருதுகோள் இதுவரை அறிஞர்கள் இடையே நிலவிவந்தது. ஆனால், கீழடி அகழாய்வு கி.மு.6-ஆம் நூற்றாண்டு அளவில் தமிழகத்தில் நகரமயமாக்கம் உருவாகிவிட்டதை நமக்கு உணர்த்துகிறது.

பழைய கற்காலத்தில் வேட்டையாடி உணவு சேகரித்த மனிதர்கள், புதிய கற்காலத்தில் ஆற்றங்கரை ஓரங்களில் குழுக்களாக குடியேறி வேளாண்மை செய்யத் தொடங்கினர். சங்க காலத்தில் தங்கள் மரபுசார் வேளாண்மை மற்றும் கால்நடைவளர்ப்புத் தொழிலினை மேற்கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்கி, உபரியைச் சேமிக்கத் தொடங்கினர். தமிழகத்தின் ஆற்றங்கரை ஓரங்களில் நாகரிகத்தினை விரிவுப்படுத்தினர்.

வைகைக் கரையில் அமைந்துள்ள கீழடியில் சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் வேளாண்மையையும், கால்நடை வளர்ப்புத் தொழிலையும் முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தனர். வேளாண்மைக்கு உதவக்கூடிய துணைத் தொழில்களின் தொழிற்கூடங்களை அமைத்துள்ளனர். கீழடியில் வெளிப்படுத்தப்பட்டுள்ள செங்கல் கட்டுமானங்களில் செங்கல் இணைப்பிற்கு 97% கொண்ட சுண்ணாம்புச் சாந்தினைப் பயன்படுத்தியுள்ளது. இச்சுவரானது வலிமையாக இன்று வரை நீடித்திருப்பதற்கு சான்றாகத் திகழ்கிறது. இக்கட்டுமான அமைப்பானது சங்க காலத்தில் இருந்த வளர்ச்சி அடைந்த சமூகத்தின் அடையாளமாகப் பார்க்கப்படுகிறது. மேலும், அன்றாட தேவைகளுக்கானப் பானைகளைத் தயாரிக்கும் தொழிற்கூடம், நாகரிக வாழ்க்கையை வெளிப்படுத்தக்கூடிய ஆடைகளைத் தயாரிக்கும் நெசவுக்கூடம் போன்றவற்றை ஏற்படுத்தியுள்ளனர். தொழிற்கூடப் பகுதிக்கு அருகே குடிநீர் பயன்பாட்டிற்கு உறைகிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

சங்ககாலப் புலவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்திருந்தனர் என்பதை சங்க இலக்கியங்களில் புலவர்களின் பெயர்களுக்கு முன்னால் முன்னொட்டாக ஊர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. சாதாரண மக்கள் தங்களுக்குரிய பானைகளில் தங்களின் பெயர்களைத் தாங்களே தமிழி (தமிழ்-பிராமி) எழுத்துகளில் பொறித்துக் கொண்டுள்ளனர். எனவே, புலவர்கள் மட்டுமின்றி சாதாரண மக்களும் கல்வி அறிவு பெற்றிருந்தனர் என்பதை இதன் வாயிலாக அறியமுடிகிறது.

கீழடியில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களின் கரிமப் பகுப்பாய்வின் கீழடிப் பண்பாட்டின் காலம் கி.மு.6-ஆம் நூற்றாண்டு என்பதைக் காட்டுகிறது.

சங்ககாலத்தில், இப்பகுதியில் வாழ்ந்திருந்த மக்கள் தங்கம், செம்பு, தந்தம், பளிங்குக் கல், கண்ணாடி, சூதுபவளம் போன்றவற்றால் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்துள்ளனர். இவை இவர்களின் பொருளாதார வளத்தினைக் காட்டுகின்றன. இச்சமூகம் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைந்த நிலையில், தங்களது ஓய்வு நேரங்களில் உடற்பயிற்சி மற்றும் அறிவுத்திறனைப் பெருக்கும் விளையாட்டுகளை விளையாடி பயனுள்ள வகையில் பொழுதுகளைக் கழித்துள்ளனர்.

சங்ககாலத்தில் இவ்வூர் மக்கள் வெளியூர் இந்தியாவின் பல்வேறு பகுதிகள் மற்றும் உரோம நாட்டுடன் வாணிபத் தொடர்புகள் கொண்டிருந்தனர் என்பதற்கு அப்பகுதியில் இருந்தே கொண்டு வரப்பட்ட பானைகள், மணிகள் போன்ற தொல்பொருட்கள் சான்று பகர்கின்றன. மேற்படி ஆய்வுகளின்படி வைகைக்கரையில் வாழ்ந்த சங்ககால மக்கள் வேளாண்மை மூலம் பொருளாதாரத்தை பெருக்கி தன்னிறைவுடன் தங்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொண்டனர். இம்மக்கள் செங்கல் கட்டுமானத்தில் வீடுகள், தொழிற்கூடங்கள் அமைத்துள்ளதும் பிற நாட்டினருடன் வாணிபம் மேற்கொண்டுள்ளதும் நகரநாகரிகத்தோடு வாழ்ந்திருந்தனர் என்று கூறுவதற்குப் பொருத்தமானதாகும். இச்சான்றுகள் தமிழகத்தில் நிலவிய சங்ககாலப் பண்பாட்டு வரலாற்று ஆய்வில் ஒரு முக்கிய திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளன எனலாம்.

### தேரிருவேலி

தேரிருவேலி கிராமம் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது அகழாய்வில் ரோமானிய ரௌலட்டட் இனப் பானை ஓடுகள், குறியீடு பானை ஓடுகள், மௌரியர் காலத்தியப் பானை ஓடுகள் (வடநாட்டு கருப்பு பூச்சு பானை ஓடுகள்) மற்றும் எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டன. குறியீடு பானை ஓடுகளில் இரண்டில் மீன் உருவம் கீறப்பட்டுள்ளன.

தமிழ் பிராமி பொறிக்கப்பட்ட பானை ஓடுகளில், கொற்றன், சாத்தன் மற்றும் நெடுங்கிளி போன்ற பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளது. மேலும், சங்க காலத்தைச் சார்ந்த சுடுமண் விளக்குகள், இரும்பு பொருட்கள், சங்கு வளையல் துண்டுகள், தோசைக்கல் மற்றும் கார்னிலியன் மணிகள் கண்டெடுக்கப்பட்டன.

### தமிழகப் பாறை ஓவியங்கள்

உலகின் மிகத் தொன்மையான குகை ஓவியங்கள் அல்டமிரா என்னுமிடத்தில் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றின் காலம் சுமார் 30,000 ஆண்டுகள் ஆகின்றன எனக் குறிப்பிடுகின்றனர். இந்தியாவிலும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 50 இடங்களுக்குமேல் பாறை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறையினரின் முயற்சியால் முதன்முறையாக மல்லப்பாடி (கிருஷ்ணகிரி) என்னுமிடத்தில் தமிழகத்தின் முதல் பாறை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. புதுவை வரலாற்றுக் கழகத்தைச் சார்ந்தவர்களால் கீழ்வாலை (விழுப்புரம்) ஓவியங்கள் கண்டறியப்பட்டன. காமய கவுண்டன்பட்டி (மதுரை) மலைப்பகுதிகளில் உள்ள சில ஓவியங்கள் இராசு.பவுன்துரையால் கண்டுபிடிக்கப்பட்டன.

குகை ஓவியங்களில் அதிக அளவில் இடம்பெறுகின்ற ஓவியங்களாகத் திகழ்வன வேட்டைக்காட்சி ஓவியங்களாகும். மல்லபாடி, செத்தவரை, சென்னராயன் பள்ளி, வேட்டைக்காரன் மலை, கொணவக்கரை, மல்ல சமுத்திரம், சிறுமலை, ஒப்பத்தவாடி, குருவிநாயனப்பள்ளி, ஒரமணக்குண்டா ஆகிய இடங்களில் வேட்டைக் காட்சிகள் இடம்பெறுகின்றன. கீழ்வாலை, வேட்டைக்காரன்மலை ஆகிய இடங்களில் சிறப்பான நடன ஓவியங்கள் காணப்படுகின்றன. சென்னராயன்பள்ளி, கொணவக்கரை, சிறுமலை, மல்லசமுத்திரம் போன்ற இடங்களில் போரிடும் வகை ஓவியங்கள் காணப்படுகின்றன. செத்தவரையில் கைவடிவம் இடம்பெறுகின்றது. தலைப்பாகை போன்ற வடிவில் மனித உருவ ஓவியங்கள் காமயகவுண்டன்பட்டி, கொணவக்கரை, சிறுமலை போன்ற இடங்களில் காணப்படுகின்றன. கீழ்வாலை, சிறுமலை ஆகிய இடங்களில் நீண்ட தலைமுடியுடைய மனித ஓவியங்கள் உள்ளன. சிறுமலை, செத்தவரை போன்ற இடங்களில் பறவையின் வடிவங்கள் இடம் பெறுகின்றன. கீழ்வாலை மற்றும் குற்றாலபுடைக் கல்வெட்டு வரைவுகளிலும் ஞாயிறு வடிவம் இடம்பெறுகின்றது.

செத்தவரையில் சிந்துவெளி முத்திரையில் காணப்படும் வீட்டின் வடிவம் போன்று இங்கும் காண முடிகின்றது. குற்றாலப்புடைக் கீறல் வடிவங்களிலும், ஒரமணக்குண்டா ஓவியங்களிலும் வீடு, இடம் ஆகியவை இடம்பெறுகின்றன. கீழ்வாலை, காமயகவுண்டன்பட்டி ஆகிய இடங்களில் படகின் வடிவங்கள் இடம்பெறுகின்றன. சிறுமலை ஓவியத்தில் நீர் வாழ்வன ஓவியத்தினைக் காணலாம். சீகூர், சிறுமலை, மல்ல சமுத்திரம் ஆகிய இடங்களில் மயில் ஓவியத்தைக் காணலாம். விலங்குகளின் உடல் உள்ளுறுப்புகளைக் காட்டும் வகையிலான ஓவியத்தை ஆலம்பாடி என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப் பெற்ற ஓவியத்தில் காண முடிகின்றது.

## 1.8.3.3. இடைக்காலம்

### பல்லவமேடு

காஞ்சிபுரம் நகரின் எல்லையில் பல்லவமேடு அமைந்துள்ளது. அகழாய்வில் மூன்று கால கட்டப் பண்பாட்டை பிரதிபலிக்கும் தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இத்தொல்பொருட்கள் கி.பி. 600-900 நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவ காலத்தைச் சார்ந்தவையாகும்.

### போளுவாம்பட்டி

போளுவாம்பட்டி கோயம்புத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது (காஞ்சி ஆறு எனப்படும் நொய்யல் ஆற்றின் மேற்குக் கரைப் பகுதி). கோட்டைக்காடு என்ற பகுதியில் நடத்தப்பட்ட அகழாய்வில் ஐம்பது வண்ண கற்களால் ஆன பெரிய மற்றும் சிறிய மணிகளும், சுடுமண் காதணிகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. மேலும், இரும்புப் பொருட்கள், சங்கு வளையல்கள், சுடுமண் கிண்ணங்கள், சுடுமண் முத்திரை ஆகியன புதைகுழியிலிருந்து கண்டெடுக்கப்பட்டன. சுடுமண் முத்திரையில் மூவேந்தர்களின் சின்னங்களான மீன், உட்கார்ந்த நிலையில் புலி மற்றும் வில் அம்பு பொறிக்கப்பட்டுள்ளன. விளிம்பு பகுதியில் பொறிக்கப்பட்ட வாசகம் கிரந்த எழுத்தில் வர்மனஹ் என எழுதப்பட்டுள்ளது. விளிம்பு பகுதியில் பொறிக்கப்பட்ட வட்டெழுத்துகள் கி.பி.7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது.

### கங்கை கொண்டசோழபுரம்

கங்கை கொண்டசோழபுரம், அரியலூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. சோழர்களின் இரண்டாம் தலைநகரமாக சுமார் 250 ஆண்டுகள் சிறப்புற்று விளங்கிய இந்நகரம் இரண்டு மதிற்சுவர்களை அரணாகக் கொண்டு விளங்கியிருந்தது என்ற செய்தி இலக்கியங்கள், கல்வெட்டுகள் மூலம் அறியப்படுகிறது. அகழாய்வில் சேகரிக்கப்பட்ட சீனப் பானை ஓடுகள், கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டில் சோழப் பேரரசர்கள் சீன நாட்டுடன் கொண்டிருந்த வாணிகத் தொடர்பை எடுத்தியம்புகின்றன.

### கண்ணனூர்

கி.பி.13 ஆம் நூற்றாண்டில், ஹொய்சாலா மன்னர்களின் தலைநகரமாகத் திகழ்ந்திருந்தது. தற்பொழுது சமயபுரம் என்று அழைக்கப்படும் இவ்வூர் திருச்சி மாவட்டத்தில் அமைந்துள்ளது. அகழாய்வில் இடைக் காலத்தைச் சார்ந்த பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. ஆய்வில் வெளிப்படுத்தப்பட்ட கட்டடப் பகுதி மற்றும் கால்வாய்ப் பகுதி கி.பி. 13-14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

கண்டெடுக்கப்பட்ட சிலைகள் மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**தலைச்சங்காடு**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் தலைச்சங்காடு கிராமம் அமைந்துள்ளது. இவ்வூர் பண்டைய காலத்தில் பூம்புகாரின் ஒரு பகுதியாக விளங்கியது. இவ்விடத்தில் 2010 ஆம் ஆண்டு அகழாய்வு நடத்தப்பட்டது. இரும்புக்காலம் முதல் இடைக்காலம் வரையிலான மூன்று பண்பாட்டு காலங்கள் அகழாய்வின் மூலம் வெளிப்பட்டன. சில்லுகள், சுடுமண் விளக்கு, செங்கற்கள், கெண்டிகள், கூரை ஓடுகள், அலங்காரம் செய்யப்பட்ட பானை ஓடுகள் மற்றும் சுடுமண் உறை கிணறு ஆகியவை இவ்வகழாய்வில் கண்டறியப்பட்டன. பராந்தக சோழன் காலத்து கோயில் ஒன்றின் தடயங்கள் இவ்வகழாய்வில் வெளிப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**ஸ்ரீரங்கம்**

திருச்சியிலிருந்து 12 கி.மீ தொலைவில் காவேரி ஆற்றங்கரையில் ஸ்ரீரங்கம் அமைந்துள்ளது. இங்குள்ள ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோயில் வளாகத்தில் 2013-14, 2014-15 ஆகிய இரு ஆண்டுகளில் அகழாய்வு நடைபெற்றது. இக்கோயில் 108 வைணவத் திருத்தலங்களில் ஒன்றாக விளங்குகிறது. இங்குள்ள ஆயிரங்கால் மண்டபத்தின் அதிட்டானத்தில் அமைந்திருந்த புடைப்புச் சிற்பங்களை வெளிக்கொணரும் நோக்கில் 2013-14ஆம் ஆண்டில் பண்பாட்டு அகழாய்வு நடைபெற்றது. 2014-15 ஆம் ஆண்டில் ஆயிரங்கால் மண்டபத்தின் மையப்பகுதியில் உள்ள நம்பெருமாள் மண்டபத்தின் கீழ்ப்பகுதியில் அகழாய்வு நடைபெற்றது.

### 1.8.3.4. நவீன காலம்

**பாஞ்சாலங்குறிச்சி**

இவ்வூர், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டத்தில் அமைந்துள்ளது. வீரபாண்டிய கட்டபொம்மன் ஆட்சி செய்த மாளிகைப் பகுதியின் எச்சத்தை வெளிப்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்ட அகழாய்வில் மாளிகையின் முக்கியப் பகுதி வெளிக் கொணரப்பட்டது. மக்கள் கூடும் சபை இருந்த இடம் இந்தக் கண்டுபிடிப்பின் முக்கிய அம்சமாகும். மேலும், அகழாய்வில் கல்யாண மண்டபப் பகுதியும் வெளிப்படுத்தப்பட்டது.

**தரங்கம்பாடி**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் தரங்கம்பாடி திகழ்ந்துள்ளது. உப்பனாறு என்று அழைக்கப்படும் பொறையாறு, தரங்கம்பாடி கோட்டை தஞ்சையை ஆண்ட ரகுநாத நாயக்க மன்னரிடம் டென்மார்க் அரசர் நான்காம் கிறிஸ்டியன் செய்து கொண்ட வணிக ஒப்பந்தத்தின்படி 1620-ல் டேனிஷ் கப்பல் படைத்தலைவர் ஓவ் ஜெட்டி என்பவரால் கடற்கரை அருகில் கட்டப்பட்டது.

டேனிஷ் கோட்டையினை 2008 மார்ச் மாதம் டேனிஷ் அரசானது தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மற்றும் மத்திய தொல்லியல் துறையுடன் இணைந்து அகழாய்வு செய்தது. இக்கோட்டை அகழியின் மட்டம் வரை அகழாய்வு செய்யப்பட்டது. இவ்வகழாய்வில் சீனமட்பாண்டங்கள், டென்மார்க்கில் தயாரிக்கப்பட்ட புகைப்பான்கள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டன.

**குறும்பன் மேடு**

தஞ்சை பெரிய கோயிலின் மேற்குப் பகுதியில் சுமார் 3 கி.மீ தொலைவில் குறும்பன்மேடு அமைந்துள்ளது. இப்பகுதியில் சோழ மன்னர்களின் மாளிகைப் பகுதி அமைந்திருக்கலாம் என கருதப்பட்டால் இங்கு அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. அகழாய்வில் இடைக்காலத்தைச் சார்ந்த பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன

**பழையாறை**

இடைக்காலச் சோழர்களின் இரண்டாம் தலைநகரமாகப் பழையாறை திகழ்ந்திருந்தது. இவ்வூர், கும்பகோணத்திலிருந்து சுமார் 7 கி.மீ. தொலைவில் உள்ளது. நந்தன்மேடு என்ற பகுதியில் பெருங்கற்காலத் தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. இங்கு நடத்தப்பட்ட அகழாய்வில், பெருங்கற்காலம் மற்றும் இடைக்காலத்தைச் சார்ந்த பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

**சேந்தமங்கலம்**

சேந்தமங்கலம் விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டில் கடவ மன்னர்களின் தலைநகரமாகத் திகழ்ந்திருந்தது. இங்கு மேற்கொண்ட கள ஆய்வில் இரண்டு மீன் உருவங்கள் மற்றும் செங்கோல் பொறிப்புடன் கூடிய பித்தளை முத்திரை (கி.பி. 13 ஆம் நூற்றாண்டு) ஒன்று கண்டெடுக்கப்பட்டது. முறையான அகழாய்வில் சுடுமண் உருவங்கள், ரௌலட்டட் பானை ஓடுகள், கருப்பு மற்றும் சிவப்பு வண்ணப் பானை ஓடுகள் மற்றும் கி.பி. 1-2 நூற்றாண்டைச் சார்ந்த வட்ட கிணற்றுப் பகுதிகள் வெளிக்கொணரப்பட்டன.

**படைவேடு**

திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டத்தில் அமைந்துள்ளது. சம்புவராயர்களின் தலைநகரமாகத் திகழ்ந்த இப்பகுதியில் 1992-1993 ஆம் ஆண்டில் அகழாய்வுப் பணிகள் நடத்தப்பட்டது. இந்த ஆய்வில் கட்டடப்பகுதியின் குடிநீர்க் கால்வாய்கள் மற்றும் வட்டக் கிணறுகள் உட்பட கி.பி. 13-16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன

**மரக்காணம்**

மரக்காணம் விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. மரக்காணத்தைப் பற்றிய குறிப்புகள் சங்க கால இலக்கியங்களான சிறுபாணாற்றுப்படை மற்றும் பெரும்பாணாற்றுப்படை நூல்களில் காணப்படுவதால் இவ்வூரின் தொன்மையை அறியும் பொருட்டு அகழாய்வு பணி 2005-2006 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. அகழாய்வில் விஜயநகர மன்னர்கள் காலத்திய செம்பு காசுகள் உட்பட இடைக்கால தொல்பொருட்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

**இராஜாக்கள் மங்கலம்**

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரிலிருந்து 12 கி.மீ தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இங்கு 2009-10-ஆம் ஆண்டு அகழாய்வு நடைபெற்றது. முற்கால பாண்டியரின் கட்டுமான கோயிலின் தடயங்கள் இவ்வகழாய்வில் வெளிப்பட்டது. இங்கு

**ஆலம்பரை**

காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்த இவ்வூர் பண்டைய நாட்களில் இடைக்கழி நாட்டுக்குட்பட்டதாக விளங்கியிருக்கிறது. ஆலம்பரையில் கி.பி. 17-18 ம் நூற்றாண்டில் நடைபெற்ற வணிகம் குறித்த தடயங்களும், இங்கு வாழ்ந்த மக்களின் சமூக-கலாச்சார அம்சங்களையும் அகழாய்வானது வெளிப்படுத்தியது.

## 1.8.4. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்

### 1.8.4.1 கல்வெட்டியல்

கல்வெட்டியல் (Epigrahy) என்பது கற்பாறைகள், தூண்கள், கோயிற்சுவர்கள், செப்பேடுகள், காசுகள், கற்கள், உலோகங்கள், பானைகள், மரங்கள், ஓலைச்சுவடிகள், துணிகள், சங்குகள் மற்றும் ஓவியங்கள் மீதான எழுத்துப் பதிவுகள் பற்றிய ஆய்வாகும்.

பண்டைய நாகரிகங்களின் வரலாறு, பண்பாடு முதலியவற்றை முழுமையாக வடிவமைத்து அறிந்து கொள்ள உதவும் முக்கியமான முதன்மைச் சான்றாகக் கல்வெட்டியல் விளங்குகிறது. நீதி இயல், சமுதாயப் பண்பாட்டியல், இலக்கியம், தொல்லியல் ஆகியவற்றின் வரலாற்றுத் தொன்மையை நிலைநிறுத்த முதன்மை ஆவணச் சான்றாகக் கல்வெட்டியல் விளங்குகின்றது.

இந்தியக் கல்வெட்டுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், தமிழகக் கல்வெட்டுகள் இந்தியக் கல்வெட்டுகளின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளன. கல்வெட்டுகளின் எண்ணிக்கை, செப்பேடுகளின் எண்ணிக்கை ஆகிய எல்லா பிரிவுகளிலும் இந்திய மாநிலங்கள் அனைத்திலும் தமிழகமே முதலிடம் வகிக்கிறது.

தமிழ்நாடு அரசால் தொல்லியல் துறையில் கல்வெட்டுகளுக்கென்று தனிப்பிரிவு 1996-இல் தொடங்கப்பட்டது. இதன் முக்கிய பணி தமிழகத்தில் கோயில் சுவர்களிலும், கற்றூண்களிலும், கற்பலகைகளிலும், குகைத் தளங்களிலும், செப்பேடுகளிலும் மற்றும் பிறவற்றிலும் உள்ள கல்வெட்டுகளைப் படியெடுப்பதாகும்.

### 1.8.4.2. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்

'தமிழ் பிராமி' என்ற வரிவடிவத்தில் தமிழ்மொழி முதன்முதலில் எழுதப்பட்டதால் தமிழ்நாட்டில் கிடைக்கப் பெற்ற கல்வெட்டுகளில் காலத்தால் பழமையானவைகளாக 'தமிழ் பிராமி' கல்வெட்டுகள் உள்ளன. இடைக்காலத்துக் கல்வெட்டுகள் வட்டெழுத்திலும் கிரந்த எழுத்திலும் உள்ளன.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த அசோகரின் கிர்னார் கல்வெட்டு அன்றைய தமிழக அரசுகளைக் காட்டுகிறது. அண்மையில் கிடைத்த ஜம்பை கல்வெட்டு அசோகர் காலத்தில் வாழ்ந்த அதியமான்களின் சமயப் பொறைக்கு விளக்கமளிக்கிறது. களப்பிரர் காலத்து அரசியல் குழப்பங்களை வேள்விக்குடி சாசனம் காட்டுகிறது. மூன்று மொழிகளில் இருக்கும் பல்லவர் காலக் கல்வெட்டுகள் அவர்களுடைய வரலாற்றை உணர்த்துகின்றன. சோழர் காலத்து வரலாற்றுக்கும் பாண்டியர் காலத்து வரலாற்றுக்கும் மிகுதியான கல்வெட்டுகள் தமிழகத்தில் பரவலாகக் கிடைக்கின்றன. கல்வெட்டுகளில் பல மெய்க்கீர்த்திகளாகவோ அல்லது பிரஸ்திகளாகவோ அமைந்திருப்பதால் அவை அரசியல் வரலாற்றுக்கு விளக்கமளிக்கின்றன.

### 1.8.4.3. சங்ககால காலக் கல்வெட்டுகள்

சங்க காலத்தைக் குறித்து அறிய உதவும் கல்வெட்டுச் சான்றுகள் பின்வருமாறு :

**1) அசோகர் கல்வெட்டுகள்**

அசோகருடைய கல்வெட்டுகளே (பொ.ஆ.மு. 270-30) தென்னிந்தியாவின் அரசியல் நிலை குறித்த முதல் சித்திரத்தை வழங்குகின்றன. அசோகருடைய இரண்டாம் மற்றும் பதிமூன்றாம் பேராணைக் கல்வெட்டுகளில் தென்னிந்திய அரசுகளும் இலங்கையும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இரண்டாம் பேராணை கல்வெட்டு

அசோகரது இரண்டாம் பேராணைக் கல்வெட்டு குஜராத் மாநிலம் கத்தியவாரில் கிடைக்கப்பெற்ற முக்கியமான ஒரு கல்வெட்டாகும். அசோகரின் பதிமூன்றாம் கல்வெட்டில் இருப்பதைவிட அதிகமான செய்திகள் இக்கல்வெட்டில் உள்ளன.

மௌரிய அரசின் எல்லைக்கப்பால் அமைந்த அண்டை அரசுகளாக அதில் சோடா (சோழ), பாடா (பாண்டிய), ஸதிய்புதோ (சத்தியபுத்திரர்), கேதளபுதோ (கேரளபுத்திரர்), தம்பபன்னி (இலங்கை) ஆகிய அரசு பெயர்கள் இடம்பெறுகின்றன. அப்பகுதிகளில் அசோகர் மனிதர்களுக்கும் விலங்குகளுக்குமான இருவகைப்பட்ட மருத்துவ வசதிகள் செய்து கொடுத்தார் எனச் சொல்லப்படுகிறது. அக்காலத்தில் மௌரியப் பேரரசு கர்நாடகா, ஆந்திராவின் வடபகுதிகளையும் கொண்டிருந்தது. ஆனால், தமிழக அரசுகள் சுதந்திரமான அண்டை நாடுகள் என்றே கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கல்வெட்டின் முக்கியத்துவம்

அசோகர் இரண்டாம் பேராணைக் கல்வெட்டில் தமிழகத்தில் சங்க காலத்தில் வாழ்ந்த அரசர்களின் வம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனால், அசோகருக்கு இணையான காலத்தில் (பொ.ஆ.மு.3 ஆம் நூற்றாண்டு) தமிழ் அரசர்கள் வாழ்ந்தது விளங்கும். தமிழ் அரசர்கள் மட்டுமின்றி தமிழ் அரசர்களின் சிற்றரசர்களாக விளங்கிய அதியமான் (சத்தியபுத்திரர்) போன்றோரும் அசோகர் அறியும் வண்ணம் சிறப்புற்று விளங்கியுள்ளனர் என்பது தெளிவு. அசோகருக்கு அண்டை நாடாகக் குறிப்பிடப்படுவதால் அசோகரின் ஆட்சியோ படையெடுப்போ தமிழகத்தில் நிகழவில்லை என்பதை அறியலாம். தமிழ் மன்னர்கள் இக்காலத்தில் வலிமைகொண்டு விளங்கியுள்ளனர் எனக் கூறலாம்.

**2) ஹதிகும்பா கல்வெட்டு**

அசோகருடைய கல்வெட்டுகளுக்குப் பின் தமிழகத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்ற மிகப் பழைய பொறிப்பு, காரவேலனுடைய ஹதிகும்பா கல்வெட்டு ஆகும். காரவேலன் கி.மு.இரண்டாம் நூற்றாண்டின் முற்பாதியில் கலிங்க நாட்டையாண்டான். அவன் பட்டத்திற்கு வந்த 11 ஆம் நூற்றாண்டில் (சுமார் கி.மு.155) 'திரமிர தேச சங்காத்தம்' என்று அவன் பொறிப்புக்

குறிப்பிடுகின்ற தமிழக அரசர்களின் கூட்டணியை முறியடித்தான். அந்தக் கூட்டணி 113 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது என்றும் அதனால் கலிங்க நாட்டுக்கு ஊறு விளையுமென்று அவன் கருதியதாகவும் அவனுடைய பொறிப்புக் கூறுகிறது.

இக்கல்வெட்டு (கி.மு.இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்தது) தமிழக அரசர்களின் கூட்டிணைவினால் கலிங்க நாட்டிற்கு ஆபத்து நேரலாம் என்றும், அந்தக் கூட்டிணைவு அந்தக் கல்வெட்டைப் பொறிப்பதற்கு 113 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியது என்றும் கூறுகிறது. அந்தப் பழங்காலத்திலேயே தமிழக அரசர்கள் நிலைத்து நிற்கக்கூடிய அரசியல் ஒப்பந்தங்களைத் தமக்குள் செய்துகொள்ளவும், தமக்கு அண்மையிலும் சேய்மையிலும் இருந்த பிற நாடுகளோடு அடிக்கடி மாறாத தன்மையுடைய அரச தந்திர நெறியைக் கடைப்பிடித்து ஒழுகவும் தேவையான ஆற்றல் பெற்றிருந்தன என்பதை இந்தக் கல்வெட்டு காட்டுகிறது.

**3) தமிழ் - பிராமி கல்வெட்டுகள்**

தமிழ்நாட்டில் முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் தமிழ் பிராமி கல்வெட்டுகள் கற்பாறைகளிலும் குகைவாழிடங்களிலும் காணப்படுகின்றன. சமணத் துறவிகள் இக்குகைகளைப் பெரும்பாலும் தமது வாழிடங்களாகக் கொண்டிருந்தனர்.

தமிழ்நாட்டில் மாங்குளம், முத்துப்பட்டி, புகளூர், அரச்சலூர், கொங்கர்புளியங்குளம், ஜம்பை, மதுரை உள்ளிட்ட பல இடங்களில் உள்ள குகைவாழிடங்களில் தமிழ் பிராமி கல்வெட்டுகளை இன்றும் காணலாம். பெரும்பாலான குகைவாழிடங்கள் பண்டைக்கால வணிக வழிகளில் அமைந்துள்ளன.

**தமிழ் - பிராமி எழுத்து கண்டுபிடிப்புக்கள்**

"தமிழ்-பிராமி" எழுத்துக்களை 1903 இல் திரு.வெங்கோபராவ் முதன் முதல் கீழவளவு என்ற இடத்தில் கண்டு வெளிக்கொணர்ந்தார். 1906 இல் மறுகால்தலை என்ற இடத்தில் எல்.எ.கெமைடு (L.A.Cammiade) அவர்கள் ஒரு கல்வெட்டையும் அதே ஆண்டில் பிரான்சிஸ் (W.Francis) என்பவர் மற்றொரு கல்வெட்டையும் கண்டுபிடித்தார். அதன் பிறகு ஆனைமலை, அழகர்மலை, மேட்டுப்பட்டி, முத்துப்பட்டி, சித்தன்னவாசல் முதலிய இடங்களில் சில கல்வெட்டுக்களை ச.கிருஷ்ண சாஸ்திரியும், கே.வி.சுப்பிரமணிய அய்யரும் கண்டுபிடித்தனர். அதன் பின்பு திருச்சி, மாமண்டூர் முதலிய இடங்களிலும் சில கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அரசலூரில் (அறச்சாலையூர்) ஒரு கல்வெட்டை மயிலை *சீனி* வேங்கடசாமி, செ.இராசு ஆகியோர் கண்டுபிடித்தனர் (1960). 1966 இல் ஐராவதம் மகாதேவன் திருவாதவூரில் மற்றொரு கல்வெட்டைக் கண்டுபிடித்தார். இதைத் தொடர்ந்து பல அறிஞர்கள் தமிழகத்தில் பல்வேறு இடங்களிலிருந்து ஏராளமான கல்வெட்டுக்களைக் கண்டுபிடித்து வருகின்றனர். இன்று இதன் எண்ணிக்கை 94 ஆகும். 1882 இல் இராபர்ட் சீவலாலும், 1906 இல் டபிள்யு.∴பிரான்சிசாலும் கண்டுபிடிக்கப்பட்ட மாங்குளம் கல்வெட்டு 1965 இல் தான் முழுமையாகப் படித்துணரப்பட்டது. இதில் பாண்டிய அரசர் நெடுஞ்செழியன் பெயர் உள்ளதை முதன் முதலில் கண்டறிந்த பெருமை ஐராவதம் மகாதேவனை சாரும்.

தமிழகத்தில் கிடைத்துள்ள தமிழ்-பிராமி கல்வெட்டுகள் இந்தியா முழுவதிலும் பயன்படுத்தப்பட்ட எழுத்தான பிராமி வகையைச் சேர்ந்ததாகும். இருப்பினும் தமிழுக்கே உரிய சிறப்பு எழுத்துகளான ற, ழ, ள, ன ஆகிய நான்கும் இதில் தனியாக இடம்பெற்றுள்ளன. எனவே, இதனைத் தமிழ்-பிராமி அல்லது தமிழி என வேறுபடுத்திக் குறிக்கிறோம். தமிழகத்தில் கிடைக்கும் பிராமி எழுத்திற்குத் "தமிழ் பிராமி" என்று பெயரிட்டவர் ஐராவதம் மகாதேவன் ஆவார். அதுபோல் "தமிழி" என்று பெயரிட்டவர் நாகசாமி ஆவார். இதனைத் "தொன்மைத் தமிழ் எழுத்துக்கள்" என நடன காசிநாதன் மற்றும் சு.இராசவேல் போன்றோர் குறிப்பிடுகின்றனர்.

**மாங்குளம் கல்வெட்டு (சுமார் பொ.ஆ.300)**

மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் உள்ள மாங்குளம் என்ற ஊரிலுள்ள கழுகுமலை அல்லது ஓவாமலை என்று அழைக்கப்படும் மலையில் பல தமிழ் பிராமி கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளை 'மீனாட்சிபுரம் கல்வெட்டுகள்' என்றும் கூறுவர். இங்குள்ள கல்வெட்டுகள் 1882 இல் ராபர்ட் சீவல் என்பவரால் பார்வையிட்டாலும் முதலில் இதனை முயற்சித்துப் படித்தவர் வெங்கோபராவ் (1906) ஆவார். இக்கல்வெட்டுகளின் காலத்தை கி.மு. மூன்றாம் நூற்றாண்டு என்பர். தமிழகத்தில் கிடைத்துள்ள பிராமிக் கல்வெட்டுகளிலேயே இவைதான் காலத்தால் முற்பட்டவை.

பெரும்பாலும் இவை அனைத்துமே இந்தப்பாறைக் குகைகளில் சமண முனிவர்கள் அமர்ந்து கொள்ளவும், படுத்து உறங்கவும், பாறைகளைச் செப்பனிட்டு வழவழப்பாக அமரும் வண்ணம் செய்து கொடுத்ததையே கூறுகின்றன. இவ்விதம் அமைத்துக்கொடுப்பதற்குக் கல்வெட்டுகளில் 'பாளிய்' என்ற சொல் பயன்பட்டுள்ளது. பின்னர் காலங்களில் ஏற்பட்ட சமண, புத்தப் பள்ளிகளுக்கு இவையே அடிப்படையாகும். பாறையைச் செப்பனிட்டு கொடுக்கும் செயலிற்கு பிணவு, பிளவு, கொட்டுதல் போன்ற பல சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். கணிய் நந்தஸ்ரீகுவன் என்ற சமணத் துறவிக்குச் சங்க காலப் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் சேவகனும், சகலையும் மற்றும் பல பொது மக்களும் குகையில் இருக்கை அமைத்துக் கொடுத்ததை இக்கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

சிறப்புகள்

- நெடுஞ்செழியன் என்ற சங்க கால பாண்டிய மன்னனின் பெயர் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டு சிறப்புப் பெயராக வழுதி, கடலன், பணஅன் என்பனவும் குறிப்பிடப்படுகின்றன.
- புலிமான்கோம்பை மற்றும் தாதப்பட்டிக் கல்வெட்டுகள் கண்டுபிடிப்பதற்கு முன்பு வரை மாங்குளம் கல்வெட்டே காலத்தால் முந்தைய பழந்தமிழ் எழுத்தாகக் கருதப்பெற்றுவந்தது.
- நிகமம் என்று அழைக்கப்பட்ட வணிகக்குழுக்கள் இருந்தமை தெரியவருகிறது. காவிதிப் போன்ற பட்டங்கள் வணிகர்களுக்கு வழங்கப்பட்டமையை அறியமுடிகிறது.

- சங்க காலத்தில் முத்து வணிகம் சிறப்புற்று இருந்திருப்பதை அறியலாம்; பாண்டிய நாட்டில் சமணத்திற்கு அரச ஆதரவு இருந்துள்ளமையினையும் அறியலாம்.

1965 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் நாளன்று மதுரைக்கு அருகில் உள்ள மாங்குளம் குகைக் கல்வெட்டுகள் சங்ககாலப் பாண்டிய மன்னாகிய நெடுஞ்செழியனுடையவை என்றும் அவை கி.மு.2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்றும் ஐராவதம் மகாதேவன் கண்டுபிடித்தார்.

புகளூர் கல்வெட்டு

புகளூர் கரூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்த ஊரில் ஆறு நாட்டார் என்று ஒருமலை உள்ளது. இம்மலைப்பகுதியில் இக்கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. மொத்தம் 12 கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

இவை அனைத்தும் சங்க காலத்தமிழ் எழுத்தில் எழுதப்பெற்றுள்ளன. இவற்றுள் இரு கல்வெட்டுகள் சேர மன்னர்கள் வழங்கிய கொடை பற்றிக் கூறுகின்றன. எனவே இவை மிக முக்கியத்துவம் பெறுகின்றன. அனைத்துக் கல்வெட்டுக்களும் சமண முனிவருக்குச் செய்து கொடுத்த படுக்கை என்று வழங்கப்படும் பாளிய் மற்றும் அதிட்டானம் குறித்தனவாகும்.

இக்கல்வெட்டுகள் 1927-28 ஆம் ஆண்டு கண்டறியப்பட்டன. 1965 ஆம் ஆண்டில் ஐராவதம் மகாதேவனால் தெளிவாகப் படிக்கப்பட்டு சேரர்கள் கல்வெட்டு என்று வெளிப்படுத்தப்பட்டது.

சிறப்புகள் :

- சங்க கால சேர அரசர்களின் கல்வெட்டு
- கோ ஆதன், செல்லிரும்பொறை, பெருங்கடுங்கோ, இளங்கடுங்கோ ஆகிய அரசர்களின் பெயர்களுடன், கருஊர் என்ற இடப்பெயரும் குறிப்பிடப்பெற்றுள்ளன
- கோஆதன் செல்லிரும்பொறையின் மகன் பெருங்கடுங்கோவின் மகன் இளங்கடுங்கோ இளங்கோ ஆவதன் பொருட்டு பாளிய் அமைத்துக் கொடுத்துள்ள செய்தியைக் கூறுகின்றது
- சேர அரசின் மூன்று தலைமுறை இதன் மூலம் தெரியவந்துள்ளது.
- இதிலுள்ள அரசர்கள் பதிற்றுப்பத்தில் 7, 8, 9 ஆம் பத்திற்குரிய தலைவர்களாக அடையாளப்படுத்தப் பெற்றுள்ளனர்.
- அரசியல், சமயம், வணிகம் தொடர்பான தொன்மையான செய்திகளைப் புகளூர் கல்வெட்டுகள் கொண்டுள்ளன.

ஜம்பை

- அமைவிடம் : விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் வட்டத்தில் ஜம்பை உள்ளது. இக்கல்வெட்டு உள்ள இடத்திற்குத் தாசிமடம் என்று பெயர். இது 1981-ல் கண்டுபிடிக்கப்பட்டது.
- காலம்: பொ.ஆ.1 ஆம் நூற்றாண்டு (தோராயமானது)
- கல்வெட்டுச் செய்தி : ஸத்திய புத்திரன் அதியன் நெடுமான் அஞ்சி என்பவர் தானமாகக் கொடுத்தே பாளி (சமணர் படுக்கை)

சிறப்புகள்

- தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சங்க காலச் சிற்றரசர் அதியமானின் கல்வெட்டு. கடையெழு வள்ளல்களுள் ஒருவர்
- அவ்வரசனே பாளியைக் கொடுத்துள்ளான்
- இவர் மலையமான் திருமுடிக்காரியுடன் போரிட்டு வெற்றி பெற்றதாக இலக்கியம் கூறுகிறது.
- இலக்கியச் செய்தியை மெய்ப்பிப்பது போன்று திருமுடிக்காரியின் தலைநகரான திருக்கோயிலூர் பகுதியில் உள்ள ஜம்பையில் கிடைத்துள்ளது.
- இக்கல்வெட்டு அவனது வெற்றியின் நினைவாகப் பொறிக்கப் பெற்றிருக்கலாம்.
- அசோகரது கல்வெட்டுக்களில் மூவேந்தருக்கு இணையான அண்டை அரசுகளுள் ஒருவராகக் குறிப்பிடப் பெற்றுள்ள 'சத்திய புத்த' என்னும் சொற்றொடர் அதியமானைக் குறிக்கிறது என்று முன்னர் அறிஞர்களால் கருதப்பட்டது. (இக்கருத்தை முதலில் சொன்னவர் கே.ஜி.சேஷய்யர். டி.பரோ என்பவர் தக்க மொழியியல் ஆதாரங்களைக் காட்டி அந்தக் கருத்துக்கு வலுவூட்டினார்.) தற்போது இக்கல்வெட்டு அக்கருத்தினை உறுதிபடுத்துகிறது.

அரசலூர்

ஈரோடு மாவட்டத்தில் அரசலூர் அமைந்துள்ளது. இவ்வூரை ஒட்டியுள்ள நாகமலையில் ஆண்டிபாறை என்றழைக்கப்படுமிடத்தில் இயற்கையான குகைத்தளமும் கற்படுக்கைகளும் உள்ளன. கற்படுக்கைகளிடையே சிறப்புடைய இசைக் கல்வெட்டுகள் மூன்று பிற்காலத் தமிழ்-பிராமி எழுத்தில் உள்ளன. 1960 இல் புலவர் இராசு இக்கல்வெட்டுகளைக் கண்டறிந்தார். **தமிழின் மிகத் தொன்மையான இசைக்கல்வெட்டு இதுவே ஆகும்.** காலம் : கி.பி.4 ஆம் நூற்றாண்டு.

கல்வெட்டுச் செய்திகள்

- மலை வண்ணக்கனான தேவன் சாத்தன் இசை எழுத்துக்களைச் சேர்த்தமைத்தான் என்பது இதன் பொருளாகும். மலை வண்ணக்கன் என்பது மலைப் பிரதேசத்தைச் சேர்ந்த வண்ணக்கன் என்ற குடியைச் சேர்ந்தவன் எனப் பொருள்படும்.
- இடைக்காலக் கல்வெட்டுகளில் வண்ணக்கன் என்ற சொல் காசுகளின் தரம் சோதிப்பவன் என்ற பொருளில் பயின்று வருகிறது. இப்பகுதியில் உள்ள கொடுமணல் அகழாய்வில் சங்க காலத்திய வண்ணமணிகள் தயாரிக்கும் தொழிற்கூடங்கள் அறியப்பட்டுள்ளதால் மணிகளைச் சோதிப்பவன் என்பதும் பொருந்துகிறது. எனினும், மணி என்பதைவிட மலை என்பதே எழுத்தின் அடிப்படையில் ஏறத்தாழ சரியாக உள்ளது.
- சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் படவடிவ இசைக்குறிப்புகள் (பாலை) உண்டு என்றும் அவை வட்டப்பாலை, சதுரப்பாலை என்று இருவகைப்படுமென்கிறார். இங்குள்ள இசை ஓசை எழுத்துக்கள் சதுரப்பாலையாக இருக்கலாம் என இசை அறிஞர் எஸ்.இராமநாதன் குறிப்பிட்டுள்ளார்.

**ஆனை மலை கல்வெட்டு**

மதுரை மாவட்டத்தில் உள்ள ஆனைமலையில் உள்ள இக்கல்வெட்டு பொ.ஆ.2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். 1906 ஆம் ஆண்டில் கே.வி.சுப்பிரமணியம் என்பவரால் இக்கல்வெட்டு கண்டறியப்பட்டது. மெய்

எழுத்திற்குப் புள்ளியிடப் பெற்று கிடைத்த காலத்தால் முந்தைய முதல் கல்வெட்டு இதுவே ஆகும்.

### அழகர் மலை கல்வெட்டு

மதுரை மாவட்டம் பழமுதிர்ச்சோலை என்றும் அழைக்கப்பெறும் அழகர் மலையில் இக்கல்வெட்டு உள்ளது. இதன் காலம் பொ.ஆ.மு.1 ஆம் நூற்றாண்டு. அழகர் மலையில் மொத்தம் 13 கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் 5 மதுரையைச் சுற்றியுள்ள வணிகர்கள் செய்த கொடை பற்றிக்கூறுகின்றன. இவற்றுடன் சேர்ந்து பிற அனைத்துமே சமணத்துறவிக்குச் செய்து கொடுத்த படுக்கை குறித்தே பேசுகின்றன. இதன்மூலம் தமிழகத்தில் சமண சமயத்தின் வளர்ச்சிக்குத் தமிழ் வணிகர்களின் ஆதரவை அறியமுடிகிறது.

### திருப்பரங்குன்றம் கல்வெட்டு

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றத்தில் இக்கல்வெட்டு அமைந்துள்ளது. காலம் : பொ.ஆ.மு.1 ஆம் நூற்றாண்டு. எருக்காட்டூரைச் சேர்ந்த பொலாலையன் என்பவரும் ஆய்சயன் நெடுசாதன் என்பவரும் சமணர் படுக்கை செய்து கொடுத்ததைப் பற்றியது. ஈழத்தைச் சேர்ந்த பொலாலையன் என்று எடுத்துக்கொண்டால் இது ஈழம் குறித்து கிடைக்கும் முதல் கல்வெட்டாகக் கொள்ளலாம். ஆயினும், இதை ஈழக்குடும்பத்தைச் சேர்ந்த எருக்காட்டூர் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் கொள்ளலாம். 'ஈழர்' என்பதற்குப் பனை மரத்திலிருந்து பதனி இறக்கும் இனத்தைச் சேர்ந்தவர் என்றும் பொருள் உண்டு.

### மன்னார் கோயில் கல்வெட்டு

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மன்னார்கோயில் என்ற ஊரில் உள்ள குகையில் இக்கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டின் காலம் பொ.ஆ.2 ஆம் நூற்றாண்டு ஆகும்.

கல்வெட்டின் சிறப்பு :

- இதுவரை சமணர் படுக்கைகள் அமைத்துக்கொடுத்தது பற்றிக் கூறும் கல்வெட்டுகளிலும் படுக்கை என்பதற்குச் சமமான சொல் பாளிய் அல்லது பளிய் என்று கொடுக்கப் பெற்றிருக்கும். ஆனால், இந்தக் கல்வெட்டில் முதன்முறையாகப் 'பள்ளி' என்ற சொல்லாட்சி இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

### வரிச்சியூர் கல்வெட்டு

மதுரை மாவட்டத்தில் வரிச்சியூரில் உள்ள சுப்பிரமணிய மலையில் மூன்று தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளில் கலம், நெல், நூறு, கருகிய, முழஉகை ஆகிய சொற்கள் பயின்று வருவது சிறப்பானதாகும். எண் -அளவு குறிக்கப்படும் தமிழகக் கல்வெட்டுகளில் இதுவே காலத்தால் முந்தியதாகும்.

தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் படுக்கைகள் மற்றும் குகை அமைப்புகள் முதலியவை கொடையாகக் கொடுக்கப்பட்ட தகவல்களை மட்டும் காணும் நிலையில் நெல் கொடையாகக் கொடுக்கப்பட்டிருப்பதும் தமிழகக் கல்வெட்டுகளில் இக்கல்வெட்டுகளில் தான் முதன்முதலாகத் தெரிய வருகிறது.

### மாமண்டூர்

திருவண்ணாமலை மாவட்டத்தில் மாமண்டூர் கல்வெட்டுகள் உள்ளன. தமிழ் - பிராமி கல்வெட்டுகளில் சிற்றசு தலைவர்களைக் குறிக்கும் கல்வெட்டுகளில் இதுவும் ஒன்று. இக்கல்வெட்டில் தச்சனின் பெயர் வருவது தமிழகக் கட்டடக்கலை வரலாற்றிற்குச் சிறப்பாகும்.

### சங்ககால நடுக்கற்கள்

தமிழகத்தில் இதுவரையில் மொத்தம் 5 நடுகற்கள் சங்க காலத்தைச் சேர்ந்ததாகக் கிடைத்துள்ளன. அவை தேனி மாவட்டத்தின் புலிமான்கோம்பை, தாதப்பட்டி ஆகிய இடங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தின் பொற்பனைக்கோட்டை என்ற இடத்திலும் காணப்படுகின்றன. சங்ககாலத்தைச் சார்ந்த நடுகற்களில் உருவம் அல்லது சிலைகள் காணப்படவில்லை.

### புலிமான் கோம்பை நடுகற்கள்

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டத்தில் புலிமான்கோம்பை எனும் சிற்றூர் வைகை ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. இங்கு 2006 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறையினர் மேற்கொண்ட கள ஆய்வில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்ககாலத் தமிழ் (தமிழி) எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மூன்று நடுகற்கள் கிடைத்துள்ளன. புலிமான்கோம்பையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் ஒன்றில் கீழ்க்கண்ட செய்தி காணப்படுகிறது. "கூடல்ஊர் ஆகோள் பெடு தீயன் அந்தவன் கல்" இதன் பொருள்: "கூடலூரில் ஆநிரை கவர்ந்தபோது நடந்த பூசலில் கொல்லப்பட்ட தீயன் அந்தவனின் கல்"

சிறப்புகள்

- சங்க இலக்கியங்களில் நடுகற்கள் பற்றிய செய்திகள் விரவி வருகின்றன. அவற்றில் "எழுத்துடை" நடுகல் என்றக் குறிப்புகள் இடம் பெறுகின்றன. இந்நடுகற்கள் கண்டுபிடிக்கப் பெறும் வரை சங்க இலக்கியங்கள் கூறும் எழுத்து ஓவியத்தைக் குறிப்பதாகவே கருதப்பட்டது.
- சங்க இலக்கியச் செய்திகளின் உண்மைத் தன்மையை உறுதி செய்ய உதவியது.
- இந்தியாவில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட நடுகற்களில் இவையே மிகப் பழமையானவை ஆகும்.
- இதுவரை தமிழகத்தில் கிடைத்த சங்ககாலத் தமிழ் (தமிழி) கல்வெட்டுக்களில் எழுத்தமைதியின் அடிப்படையில் காலத்தால் முந்தியவையாகும்.
- சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் ஆகோள் அதாவது நிரை கவர்தல் அல்லது கால்நடைகளைக் கவர்ந்து செல்லுதலைப் பற்றி கூறும் முதல் நடுகல் இதுவேயாகும்.
- பிராகிருத மொழிக் கலப்பின்றி முழுவதும் தமிழ்ச் சொற்களே கல்வெட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- இதுவே சங்ககாலத்தைச் சேர்ந்த முதல் நடுகல்லாகும். இந்நடுகல் கண்டுபிடிப்பதற்கு முன்பு வரை பொ.ஆ. 6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இருளப்பட்டி நடுகல்லே காலத்தால் முற்பட்ட நடுக்கல்லாக கருதப்பட்டு வந்தது.

காலம் எழுத்தமைதியின் அடிப்படையில் இரு கல்வெட்டுக்களின் காலம் பொ.ஆ.மு. 4ஆம் நூற்றாண்டு எனவும் மற்றொரு கல்வெட்டின் காலம் பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டெனவும் கணிக்கப்பெற்றுள்ளது.

தாதப்பட்டி (திண்டுக்கல் மாவட்டம்)

சங்கத் தமிழ் இலக்கியங்களில் உள்ள நடுகல் பற்றிய செய்திகள் (எழுத்துடை நடுகல், கூறுளி குயின்ற கோடுமா எழுத்து) உண்மையே என மெய்பித்தது. இதுவரை அவை ஓவியங்களைக் குறிக்கின்றன வரி வடிவங்களை அல்ல என்ற கருத்தும் நிலவியது. இதுநாள் வரை கி.பி 6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துப் பொறிக்கப்பட்ட இருளப்பட்டி நடுகல் கல்வெட்டே காலத்தால் முந்தியது என்ற கூற்று மாற்றப்பெற்றுள்ளது. நெடுநிலைக் கல்லில் எழுத்துக்கள் கிடைத்திருப்பினும் இதுவே முதல் முறையாகும்.

பொற்பனைக்கோட்டை

2012 ஆம் ஆண்டு இங்கு ஒரு தமிழ் பிராமி கல்வெட்டுகளுடன் கூடிய நடுகல் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறையால் கண்டுபிடிக்கப்பட்டது. பொற்பனைக் கோட்டையில் கிடைத்த நடுகல் முக்கோண வடிவத்தில் உள்ளது. இதில் 5 வரிகள் இடம்பெறுகின்றன. கடைசி இரு வரிகளும் தெளிவாகப் படிக்கும் அளவில் தெளிவாகவுள்ளன. (4) அங்கபடை தாணைத் தணயன் கணங் 5) குமாரன் கல்) இந்நடுகல் தற்போது தஞ்சை தமிழ்ப் பல்கலைகழகத்தில் தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் துறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

நடுகற்கள்

போர்களத்தில் ஆநிரை கவரும் சண்டைகளிலும் வீரமரணம் அடைந்தவர்களின் நினைவாக நடுகற்கள் நடப்பட்டன. முல்லை நில வாழ்க்கையில் மக்களின் சிறப்பான செல்வ வளமாகக் கால்நடைகள் (ஆநிரைகள்) இருந்தன. அருகருகே வாழ்ந்த இனக்குழுவினர் மற்ற குழுவினரின் கால்நடைகளைக் கவர்ந்து தமதாக்கிக் கொள்வதற்காகச் சண்டையிட்டுள்ளனர். முல்லைநில மக்களின் தலைவன் எதிரிகளை எதிர்த்துப் போரிட்டுக் கால்நடைகளைக் கவர்ந்து வருவதுண்டு. இதை எதிர்த்து போரிடுபவரும் உண்டு. அப்போது இறந்துபடும் வீரர்களைத் தியாகிகளாகப் போற்றி அவர்களின் நினைவாக நடுகற்களை நிறுவினர். நடுகற்களைக் குறித்தும், அவற்றை வழிபட்ட முறைகளைக் குறித்தும் சங்க இலக்கியங்களில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. நடுகல் நடும் முறைகள் பற்றி "காட்சி கால் கோள் நீர்ப்படை நடுகல் சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலென்று இரு மூன்று மரபிற் கல்லொடு புணர" எனத் தொல்காப்பியம் தெளிவாக எடுத்துரைக்கிறது.

சங்க காலத்திற்குப் பிறகும், பல்லவர் காலத்திலும் நடப்பட்ட நடுகற்கள் முல்லை நிலப்பகுதிகளில் பெரிதும் காணப்படுகின்றன. குறிப்பாக, திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம் என்ற ஊரினைச் சுற்றியுள்ள பகுதிகளில் பரவலாக இத்தகைய நடுகற்களைக் காணலாம். யாருடைய நினைவாக அந்த நடுகற்கள் நடப்பட்டனவோ, அந்த வீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டு வீரர் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

பிற தமிழ் பிராமி பொறிப்புகள்

தமிழ் பிராமி எழுத்துகள், கற்பாறைகள் மற்றும் நடுகற்களில் மட்டுமின்றி மட்பாண்டங்கள், காசுகள், முத்திரைகள், மோதிரங்கள் இவற்றிலும் பொறிக்கப்பெற்றுள்ளன.

மட்பாண்டங்களில் தமிழ் பிராமி பொறிப்புகள்

வரலாற்றின் தொடக்க காலத்தைச் சேர்ந்த சுடுமட்பாண்டங்களில் மக்களின் பெயர்கள் தமிழ் பிராமி எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளன. இவை சாதாரண மக்கள் கூட எழுதப்படிக்க தெரிந்தவர்கள் என்பதை விளக்குகின்றன. அரிக்கமேடு, அழகன்குளம், கொடுமணல், கீழடி உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல இடங்களிலும் இத்தகைய சுடுமட்பாண்டப் பொறிப்புகள் காணப்படுகின்றன.

எகிப்து நாட்டின் பெரேனிகே (Berenike), குசேர் அல் காதிம் (Quseir al Qadhim) ஆகிய இடங்களிலும், ஓமன் நாட்டின் கோர்ரோரி (Khor Rori) என்ற இடத்திலும் தமிழ் பிராமி எழுத்துக்களில் மக்களின் பெயர் பொறித்த சுடுமட்பாண்டத் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், பண்டைத் தமிழர்கள் மேற்கு ஆசியாவிலும் அதற்கு அப்பாலும் உள்ள ரோமானியப் பேரரசுப் பகுதிகளுக்கும் சென்று வணிகத்தில் ஈடுபட்டிருந்தது குறித்து அறியமுடிகிறது.

ஒரு பொருள் தமக்கு உரிமையானது என்பதைக் குறிப்பதற்காகவே அதன்மீது மக்கள் தம் பெயர்களைப் பொறித்து வைத்தனர். சுடுமட்பாண்டங்களில் காணப்படும் பெரும்பாலான பெயர்கள் தமிழிலும், சில பெயர்கள் பிராகிருத மொழியிலும் உள்ளன. கப்பல்களில் அல்லது வண்டிகளில் பொருள்களை எடுத்துச் செல்லும்போது இவற்றை அடையாளம் காண்பதற்கும் தங்களது பெயர்களை எழுதினர்.

பானை ஓடுகளிலுள்ள பழந்தமிழ் எழுத்துப்பொறிப்புகள் முதன் முதலில் மார்டிமர் வீலர் நிகழ்த்திய அரிக்கமேடு அகழாய்வின் மூலம் அறியப் பெற்றுள்ளன. அதுபோல் காசுகளிலுள்ள பழந்தமிழ் எழுத்துப் பொறிப்புகளை முதன் முதலில் 1985 இல் காசுகளில் கண்டு வெளியிட்டவர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி ஆவார்.

1987 இல் சேர மன்னர் கொல்லிப் புறை காசுகளைக் கண்டுபிடித்து சேர வரலாற்றுக்குப் பெருமைச் சேர்த்தவர் ஆர்.நாகசாமியாவார்.

தமிழ் பிராமி எழுத்துக்கள் முத்திரைகளில் இருப்பதை 1981 இல் "கோவேத" என்று தமிழ் பிராமியில் எழுதப்பட்ட ஆனைகொடை (இலங்கை) முத்திரைக் கொண்டு இந்திரபாலாவும் "தீயன்" என்ற தமிழ் பிராமி எழுத்துப் பொறிப்பை மோதிரத்தில் சங்கரன் ராமனும் முதன் முதலில் கண்டுபிடித்தனர்.

தமிழ் பிராமி எழுத்துகளின் காலம்

பொருந்தல் மற்றும் கொடுமணல் அகழாய்வுகளில் கிடைத்த பானை ஓட்டின் அடிப்படையில் தமிழ்-பிராமி

எழுத்துகளின் கால மேலெல்லை பொ.ஆ.மு. 5 ஆம் நூற்றாண்டெனத் தொல்லியலாளர் கா.ராஜன் குறித்திருந்தார். ஆனால், தற்போது கீழடி அகழாய்வில் கிடைத்த அறிவியல் ரீதியான காலகணிப்புகள் தமிழ்-பிராமியின் காலத்தை மேலும் 100 ஆண்டுகள் (கி.மு.6-ஆம் நூற்றாண்டு) பழமை வாய்ந்தது என்னும் முடிவுக்கு இட்டுச்செல்கிறது.

பொ.ஆ.4 ஆம் நூற்றாண்டு வரை தமிழ்-பிராமி எழுத்துகள் வழக்கிலிருந்துள்ளன. பிறகு இவ்வெழுத்துக்களே மாற்றம் பெற்று வட்டெழுத்துக்களாக வளர்ச்சியடைந்துள்ளன. அதற்கான தொடர்ச்சியான கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. எனவே, தமிழ் பிராமி எழுத்துகளின் காலம் பொ.ஆ.மு.6 ஆம் நூற்றாண்டு முதல் பொ.ஆ.4 ஆம் நூற்றாண்டு வரை என்று கணிக்கப் பெறுகிறது.

## தமிழ்-பிராமி மட்பாண்டங்களில் பொறிக்கப் பெற்ற பெயர்கள்

| இடம் | தமிழ் பிராமி பெயர்கள் |
|---|---|
| கொடுமணல் | கண்ணன் ஆதன், விஸாகி, நிகம, கூல அந்தை சாம்பன் அகல், ஏகன் |
| பொருந்தல் | வயிர |
| உறையூர் | முலன்பேட்டு அந்தனன் (அந்தனன் - உப்பு வணிகன்) |
| மாங்குடி | குருமங்கள அதன் இ யானைய் போ |
| அழகன்குளம் | பதுமாற் கோதை |
| அரிக்கமேடு | ஆதிரையன் கோத்திராசன் சாத்தன் ஆவியின் (வழித்தோன்றல்) |
| தேரிருவேலி | நெடுங்கி(ளி) |
| காவிரிப் பூம்பட்டினம் | அபிமகததோ |
| எகிப்து குசேர் அல் காதிம் | கணன் (கண்ணன்), சாதன் (சாத்தன்), பனை ஓறி |
| பெரனிக் (எகிப்து) | கொற்றபூமான் |
| தாய்லாந்து | துற ஓன் |
| கீழடி | குவிரன் ஆதன், தாமதி |

- கொடுமணலில் "விஸாகி" என்ற பெண் பெயர் பொறித்த ஓடு ஒன்று கல்லறையிலிருந்து கிடைத்துள்ளது.
- அரிக்கமேடு அகழ்வாராய்ச்சியில் கிடைத்த உடைந்து போன அகல் விளக்கு ஓட்டில் பிராமி எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன. அந்த விளக்கின் உரிமையாளரின் பெயர் அதில் பிராமி எழுத்தினால் எழுதப்பட்டிருக்கிறது. 'முதுகூழரான்' என்பதை 'முதிகுழுர அன்' என்று எழுதப்பட்டிருக்கிறது.
- அலகரை, உறையூர் அகழ்வாராய்ச்சியிலும் பிராமி எழுத்துப் பானை ஓடுகள் காணப்பட்டன. ஆனால் அவை துண்டு துண்டுகளாக இருப்பதனால் வாசகம் சரியாகத் தெரியவில்லை.

### தமிழ் பிராமி எழுத்துடன் கூடிய முத்திரை மோதிரம்

- தமிழ்-பிராமி எழுத்துகளுடன் கூடிய முத்திரை மோதிரம் கரூரில் கிடைத்துள்ளது. இதில் 'சாத்தன சாத்தவேகி' என்று எழுதப்பட்டுள்ளது. இதன் காலத்தை கி.பி.முதல் அல்லது இரண்டாவது நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம்.
- 1806 முதல் 1904 ஆம் ஆண்டு வரை ஏராளமான ரோமானிய தங்க, வெள்ளி நாணயங்கள் கரூரில் கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பின்னணியில் ஆராயும்பொழுது, இந்த முத்திரை மோதிரம் முக்கியத்துவம் பெறுகிறது. இதில் உள்ள சொற்கள் நிதி காப்பாளர், வணிகர் இவை இரண்டையுமே குறிக்கின்றன.
- சாதவாகனர்களின் மற்றும் குப்தர்களின் காலத்திய கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் 'சாதவாகா' என்ற சொல்லும் 'சாதவேகா' என்ற சொல்லும் ஒரே பொருளில் அமைந்துள்ளதாகத் தெரிகிறது. நெடுந்தூரம் சென்று வெளியூர்களில் வியாபாரம் செய்தவர்களையும் வணிகர் குழுக்களில் அங்கத்தினராக இருந்தவர்களையும் இப்பெயரால் குறிப்பிடுகின்றனர். 'நிகமம்' என்ற சொல்லும் வழக்கத்தில் இருந்துள்ளது. 'சிரேஷ்ட்டி, குளிகர்கர், 'சாதவாகர்' ஆகிய பெயர்களும் இடம்பெற்றுள்ளன.
- மதுரைக்கு அருகில் உள்ள மாங்குளம் என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட தமிழ் பிராமி கல்வெட்டில் 'வெள்ளை நிகமத்தோர்' என்ற சொல் காணப்படுகின்றது. இவை அனைத்தையும் சேர்த்து ஆராயும்போது தற்போது கிடைத்துள்ள முத்திரை மோதிரம், அக்காலத்தைச் சேர்ந்த சாத்தன் என்ற வணிகன், வணிகக் குழுதலைவனாக சாத்தவேகி நிகமத்தோர் பயன்படுத்திய முத்திரை மோதிரம் என அறியலாம்.
- மேலும் கண்டுபிடிக்கப்பட்ட மற்றொரு பொன் முத்திரை மோதிரத்தில் 'நல்வெளையம்' என்று தமிழ்-பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

## அயல்நாடுகளில் கண்டெடுக்கப்பட்ட தமிழ் - பிராமி பொறிப்புகள்

### குசேர் அல் காதிம்

- குசேர் அல் காதிம் எகிப்து நாட்டில் செங்கடற்கரையில் அமைந்துள்ளது. இது ஒரு ரோமானியர் காலத்தில் சிறந்து விளங்கிய துறைமுகமாகும். இது சங்ககாலத் தமிழகத் துறைமுகங்களுடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்தது.
- இங்கு தமிழ்பிராமி எழுத்துப்பொறிப்புள்ள இரு பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இவை பொ.ஆ முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று ஐராவதம் மகாதேவன் கருதுகிறார்.
- இவற்றில் "கணன்", "சாதன்" என்ற எழுத்துப்பொறிப்புகள் உள்ளன. இவை கண்ணன், சாத்தன் என்ற பெயர்களை உடைய வணிகர்களைக் குறிப்பிடுகின்றன.
- 2007 ஆம் ஆண்டு "பனை ஓறி" என்ற எழுத்துப்பொறிப்புள்ள பானை ஓடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.
- ஆக, இந்த இடத்தில் மொத்தம் தமிழ்-பிராமி எழுத்துகள் கொண்ட மூன்று பானைத் துண்டுகள் கண்டறியப்பட்டுள்ளன.

### பெரனிகே

- பெரனிகே எகிப்து நாட்டில், செங்கடற்பகுதியிலுள்ள ரோமானியத் துறைமுகமாகும். இது சங்ககாலத்

தமிழகத்துடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்த ஓர் ஊராகும். தமிழ் வணிகர்கள் இப்பகுதிக்குச் சென்றிருந்தனர் என்று கருதப்படுகின்றது.

- இந்தியப் பானையில் 7½ கிலோ மிளகு புதைத்து வைக்கப்பட்ட நிலையில் இங்கு கிடைத்துள்ளது. இது பழந்தமிழகத்தின் கேரளப் பகுதியிலிருந்து சென்றிருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது.
- தேங்காயின் ஓடும், தேக்கு மரத்துண்டுகளும் இங்கு கிடைத்துள்ளன. இவையும் பழந்தமிழகத்திலிருந்து சென்றிருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது.
- ஒரு பானையோட்டில் "கொ(ற்)ற பூ மான்" என்ற தமிழ்-பிராமி எழுத்துப்பொறிப்பு காணப்படுகின்றது.

குவான் லுக் பட்

- தாய்லாந்தில் குவான் லுக் பட் என்ற இடத்தில் கி.மு. 3-ம்-4ம் நூற்றாண்டைச் சேர்ந்த உரைகல் ஒன்றில் தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 'பெரும் பத்தன் கல்' என்ற தமிழ் பிராமி எழுத்தில் கிடைத்துள்ள இக்கல், பெரும்பத்தன் என்பவரால் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். மேலும், அவர் ஒரு பொற்கொல்லராக இருக்க வேண்டும். அந்தக் கல், தங்கத்தின் தரத்தை அறிய உதவும் உரைகல் ஆகும்.

ஓமன்

- ஓமன் நாட்டில் தமிழ்-பிராமி பொறிப்புள்ள பானை சிதில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதில் 'ணந்தை கீரன்' என்ற சொல் உள்ளது. இது முதலாம் நூற்றாண்டை சேர்ந்ததாக இருக்கலாம் என மதிப்படப்பட்டுள்ளது.

கீறல்கள் / குறியீடுகள்

இந்தியாவில் கிடைக்கப்பெற்ற வரிவடிவங்களில் காலத்தால் தொன்மையானது 4,500 ஆண்டுகள் பழமை வாய்ந்த சிந்துவெளி வரிவடிவங்கள் ஆகும். சிந்துவெளி பண்பாடு மறைந்ததற்கும் தமிழ்-பிராமி எழுத்துகள் தோன்றியதற்கும் இடைப்பட்ட காலத்தில் ஒரு வரிவடிவம் இருந்தது. அவ்வரிவடிவத்தினை ஆய்வாளர்கள் குறியீடுகள் என்றும் கீறல்கள் என்றும் அழைக்கின்றனர். இவற்றை சாதாரண கீறல்கள் என்று புறந்தள்ளிவிட இயலாது. ஏனெனில், இவை சிந்துவெளி வரிவடிவத்தின் நீட்சியாகவும் தமிழ்-பிராமி எழுத்துகளின் முன்னோடியாகவும் இருக்கவேண்டும். சிந்துவெளி எழுத்துகள் போன்றே இவற்றை படித்தறிதலும் முழுமைபெற இல்லை. செம்புக்கால பண்பாட்டிலும் அதன் தொடர்ச்சியாக பெருங்கற்கால பண்பாட்டிலும் இக்குறியீடுகள் கிடைக்கின்றன. இத்தகைய குறியீடுகள் கருப்பு - சிவப்பு பானை ஓடுகளில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இரும்புக் காலத்தில் பெருங்கற்கால ஈமச்சின்னங்களிலும் அதோடு தொடர்புடைய குடியிருப்புப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. தமிழகத்தில் ஆதிச்சநல்லூர், கொற்கை, அழகன்குளம், கொடுமணல், கரூர், தேரிருவேலி, உறையூர், மாங்குளம், பேரூர் மற்றும் பிற தொடக்க வரலாற்று கால தொல்லியல் சார் இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளிலும் குறியீடுகள் கொண்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன. தமிழகம் மட்டுமின்றி இலங்கை திசமஹாரம, கந்தரோடை, மாந்தை, ரிதியகாமா போன்ற ஊர்களிலும் இதுபோன்ற குறியீடுகள் கிடைத்துள்ளன. இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகத்தில் இவை பரந்த அளவில் சேகரிக்கப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக தென்னிந்தியாவில் கண்டெடுக்கப்பட்டுள்ள குறியீடுகளில் 75 சதவிதம் தமிழகத்தில் கிடைக்கப்பெற்றவை என்பது சிறப்பாகும். தமிழ்-பிராமிக்கு முந்தைய வரிவடிவமாக விளங்கிய குறியீடுகள் பெருங்கற்கால மற்றும் இரும்பு கால மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் எழுத்து வடிவமாகும்.

## தமிழ்-பிராமி கல்வெட்டுக்களைப் படித்ததில் அறிஞர்களின் பங்களிப்பு

### வெங்கையா

- அசோகர் கல்வெட்டுக்களில் காணப்படும் பிராமி வரிவடிவத்துடன் ஒப்புநோக்கி இவை பிராமி வரிவடிவத்தை ஒத்துள்ளன என்ற கருத்தை வெளியிட்டவர்.
- 1906 இல் மறுகால்தலைக் கல்வெட்டைக் கண்டுபிடித்து அதைப் படிக்க முயற்சித்தார். கல்வெட்டு மொழி பாலியாக இருக்க வேண்டும் எனக் கருதினார்.

### கே.வி.சுப்ரமணியர்

- 12 இடங்களில் கிடைத்த 30 கல்வெட்டுக்களைக் கொண்டு தமிழ் மொழிக்கே உரித்தான சிறப்பு எழுத்துக்களான "ழ" "ற" "ன" போன்றவற்றை தமிழ் எழுத்துக்கள் தான் எனச் சரியாக ஊகித்தார்.
- 1924 இல் சென்னையில் நடந்த மொழியியல் மாநாட்டில் முதன் முதலாக இவை தமிழ் மொழியைச் சேர்ந்தவையே என ஆணித்தரமாக உரைத்தார்.
- இதனால் இவர் "தமிழ் பிராமியின் தந்தை" என அழைக்கப்படுகிறார்.

### எச்.கிருஷ்ணர்

- தமிழின் எழுத்தான "ள" வை சரியாக ஊகித்தது.
- பழந்தமிழை (தமிழ் பிராமி) இலங்கை பிராமியுடன் ஒப்பிட்டு இப்பிராமி தென்னந்திய சாயல் ஒத்திருப்பதாகத் தெரிவித்தது.

### தி.நா.சுப்பிரமணியன்

- 1938 இல் பண்டைத் தமிழ் எழுத்துக்கள் என்ற நூலை வெளியிட்டார்.
- பட்டிபுரோலு பிராமி வரிவடிவத்திற்கும் பிராமி வரிவடிவத்திற்குமிடையே காணப்பெற்ற ஒற்றுமையை முதன் முதலில் கண்டுபிடித்து வெளியிட்டார்.

### ஐராவதம் மகாதேவன்

- தமிழ் பிராமி கல்வெட்டுகள் காணப்படும் இடங்களுக்கு நேரில் சென்று 1965 இல் தமிழ்நாடு அரசு தொல்லியல் ஆய்வுக் கருத்தரங்கில் படித்த கட்டுரைகளைத் தொகுத்து 1966 இல் Corpus of Tamil Brahmi Inscriptions என்ற நூலை வெளியிட்டார்.
- 1906 இல் கண்டறியப்பட்ட மாங்குளம் கல்வெட்டை 1960 களில் முழுமையாகப் படித்துப் பொருள் கூறினார்.
- மாங்குளம் கல்வெட்டில் நெடுஞ்செழியன் மற்றும் "வழுதி" என்ற சங்க காலப் பாண்டிய மன்னரின் பெயரைக் கண்டறிந்தார்.

- புகளூர் தமிழ் பிராமி கல்வெட்டைப் படித்து அவற்றில் சேர மரபைச் சார்ந்த ஆதன், இரும்பொறை ஆகிய மன்னர்களின் பெயர்கள் இடம்பெறுவதை முதலில் கண்டறிந்தார்.
- எடக்கல் கல்வெட்டிலுள்ள கடுமிபுதச் சேர என்ற எழுத்தை 1995 இல் சரியாகப் படித்தார். இதுவே கேரளம் உள்ளிட்ட பண்டைத் தமிழகத்தில் 'சேர' என்ற குலப்பெயரைச் சுட்டும் ஒரே சங்க காலத் தமிழ் கல்வெட்டாகும்.
- கல் எழுத்துப் பொறிப்புகளுடன் பானை ஓடுகள், காசுகள், முத்திரைகள், மோதிரங்கள் இவை அனைத்திலும் உள்ள எழுத்துக்களைத் தெளிவுற ஆராய்ந்து அவற்றில் எழுத்து முறை, வரிவடிவம், மொழியியல் அமைப்பு, சமூகக் கட்டமைப்பு போன்றவற்றைத் திறம்பட ஆராய்ந்ததுடன் பழந்தமிழ் எழுத்துகளின் பெட்டகமாக "Early Tamil Epigraphy From The Earliest Times to The 6th Century A.D" என்ற நூலை 2003 இல் வெளியிட்டார்.
- இவர் தொல்லெழுத்துத் துறையில் ஆற்றிய சீரிய பணியைப் பாராட்டும் வகையில் இந்திய அரசு இவருக்கு 'பத்மஸ்ரீ' விருது வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**ஆர்.பன்னீர்ச்செல்வம்**

- புகளூர் கல்வெட்டில் இடம்பெறும் செல்லிரும்பொறை, பெருங்கடுங்கோ, இளங்கடுங்கோ போன்ற சேர மரபினரைப் பதிற்றுப்பத்துடன் ஒப்புநோக்கி அவர்களை முறையே 7, 8, 9 ஆம் பத்திற்குரிய பாட்டுடைத் தலைவர்களாகக் கூறியுள்ளார்.

**ஆர்.நாகசாமி**

- 1981 இல் திருவண்ணாமலை மாவட்டம் திருக்கோயிலூர் வட்டம் ஜம்பை என்ற ஊரில் கிடைத்த கல்வெட்டின் மூலம் அசோகர் கல்வெட்டில் குறிப்பிடப் பெற்றிருக்கும் "ஸதியபுதோ" மலையமான் திருமுடிக்காரியுடன் போரிட்டுத் தகடூரை எறிந்த தலைவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவரான அதியமானே எனச் சந்தேகத்திற்கிடமின்றி நிறுவினார்.
- அதுவரை "ஸதியபுதோ" யார்? என்பது தமிழக வரலாற்றில் புதிராகவே இருந்தது.

**கா.ராஜன்**

- மண்ணடுக்கு ஆய்வுகளின் அடிப்படையில் பண்பாட்டாய்வின் அடிப்படையிலும் குறியீடுகள், சிந்துவெளி பண்பாடு தொட்டு சில வடிவ மாற்றங்களுடன் தொடர்ந்து சங்க காலத்திலும் வழங்கியுள்ளது எனக் குறிப்பிடுகின்றார்.
- தமிழ் பிராமி வரிவடிவம் இக்குறியீடுகளிலிருந்தே வளர்ச்சிப் பெற்றுள்ளது எனக் கூறுகின்றார்.
- இது நாள் வரை தமிழ் பிராமி கல்வெட்டுகள் சமணர் இருக்கைகளில் மட்டுமே கிடைத்து வந்தன. இதனால் இவ்வெழுத்துக்கள் சமணரால் அறிமுகப்படுத்தப்பட்டதாகக் கருத்துகள் நிலவின.
- இந்தியாவிலேயே மிகப் பழமையான தமிழிக் கல்வெட்டு புலிமான் கோம்பை நடுகல் கல்வெட்டே எனப் பறை சாற்றினார்.
- மேலும், புலிமான் கோம்பை நடுகற்கள் கொண்டு தமிழிக் கல்வெட்டுக்கள் சமணருக்கு மட்டுமே உரித்தானவையல்ல. பாமர தமிழனும் எழுத்தறிவு பண்பாட்டைப் பெற்றுள்ளான் என்பதை விளக்கினார்.
- தொல்காப்பியத்தில் இடம்பெறும் "ஆகோள்" என்ற சொல்லாட்சி இக்கல்வெட்டிலும் இடம்பெறுவதைக் கொண்டு தமிழ் இலக்கியத்தின் காலத்தை மேல் நோக்கிக் கொண்டுச் சென்றுள்ளார்.
- தாதப்பட்டி கல்வெட்டே எழுத்துப் பொறித்து அறியப்பட்ட முதல் நெடுநிலைக்கல் (menhir) என்பதை வெளிப்படுத்தினார்.

**தமிழ் - பிராமி கல்வெட்டுகள் கிடைக்கும் இடங்கள் மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு**

| கல்வெட்டு | மாவட்டம் | ஆண்டு |
|---|---|---|
| மாங்குளம் | மதுரை | 1882, 1906, 1964 |
| எடக்கல் | கேரளா | 1894, 1996 |
| கீழவளவு | மதுரை | 1903 |
| மேட்டுப்பட்டி | திருநெல்வேலி | 1906 |
| மறுகால்தலை | திருநெல்வேலி | 1906 |
| ஆனைமலை | மதுரை | 1906 |
| வரிச்சியூர் | மதுரை | 1908 |
| திருப்பரங்குன்றம் | மதுரை | 1908, 1952 |
| அழகர்மலை | மதுரை | 1908 |
| குன்றக்குடி | சிவகங்கை | 1909 |
| அரிட்டாபட்டி | மதுரை | 1971, 2003 |
| முதலைக்குளம் | மதுரை | 1978 |
| ஜம்பை | விழுப்புரம் | 1981 |
| திருமலை | சிவகங்கை | 1989 |
| குடுமியான்மலை | புதுக்கோட்டை | 1991 |
| முத்துப்பட்டி | மதுரை | 1910 |
| கொங்கர்புளியங்குளம் | மதுரை | 1910 |
| கருங்காலக்குடி | மதுரை | 1911 |
| சித்தன்னவாசல் | புதுக்கோட்டை | 1914 |
| விக்கிரமங்கலம் | மதுரை | 1926, 1964, 1978 |
| புகளூர் | கரூர் | 1928, 1964 |
| திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | 1938 |
| மாமண்டூர் | திருவண்ணாமலை | 1940 |
| அரச்சலூர் | ஈரோடு | 1962 |
| திருவாதவூர் | மதுரை | 1965 |
| அய்யர்மலை | கரூர் | 1974 |
| அம்மன்கோயில் பட்டி | சேலம் | 1979 |
| மேட்டுப்பட்டி | திருநெல்வேலி | 1986 |
| தொண்டூர் | விழுப்புரம் | 1991 |
| நெகனூர்பட்டி | விழுப்புரம் | 1992 |
| மன்னார்கோயில் | திருநெல்வேலி | |
| தாதப்பட்டி* | தேனி | |
| புலிமான்கோம்பை* | தேனி | 2006 |
| பொற்பனைக்கோட்டை* | புதுக்கோட்டை | 2012 |

*நடுகற்கள்

**தமிழ் - பிராமி மட்பாண்டங்களின் காலம்**

| இடம் | மாவட்டம் | காலம் |
|---|---|---|
| அரிக்கமேடு | புதுச்சேரி | பொ.ஆ.மு 100 - 200 பொ.ஆ (வீலர்) |

| | | |
|---|---|---|
| | | பொ.ஆ.மு 200 - 300 பொ.ஆ (பெக்ளி) |
| அழகன்குளம் | இராமநாதபுரம் | பொ.ஆ.மு 100 - 100 பொ.ஆ |
| உறையூர் | திருச்சிராப்பள்ளி | பொ.ஆ.மு 200 - 100 பொ.ஆ |
| கரூர் | கரூர் | பொ.ஆ.மு 100 - 200 பொ.ஆ |
| காவேரிப் பூம்பட்டினம் | நாகப்பட்டினம் | பொ.ஆ.மு 100 - 200 பொ.ஆ |
| கொடுமணல் | ஈரோடு | பொ.ஆ.மு 200 - 100 பொ.ஆ (எ.சுப்பராயலு) பொ.ஆ.மு. 400 (2012 அகழாய்வு - கா. ராஜன்) |
| கொற்கை | தூத்துக்குடி | பொ.ஆ.மு 300 - 200 பொ.ஆ |
| மாங்குடி | திருநெல்வேலி | பொ.ஆ.மு 200 - 100 பொ.ஆ |
| தேரிருவேலி | இராமநாதபுரம் | பொ.ஆ.மு 200 - 100 பொ.ஆ |
| பொருந்தல் | திண்டுக்கல் | பொ.ஆ.மு 500 |
| கீழடி | மதுரை | பொ.ஆ.மு 580 |

### 1.8.4.4. களப்பிரர் காலக் கல்வெட்டுகள்

1980 க்குப் பிறகு களப்பிரர் காலத்தைச் (பொ.ஆ. 301 - 600) சேர்ந்த பத்துக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் பல்வேறு இடங்களிலிருந்து கண்டுபிடிக்கப்பெற்று வெளியிடப் பெற்றுள்ளன. இக்கல்வெட்டுக்கள் அரச்சலூர் (4 ஆம் நூற்றாண்டு), பூலாங்குறிச்சி, அம்மன்கோயில்பட்டி, நெகனூர்பட்டி, சித்தன்னவாசல் (5 ஆம் நூற்றாண்டு) திருச்சிராப்பள்ளி, பெருமுக்கல், அரசலாபுரம், இந்தளூர், ஈரெட்டிமலை, பறையன்பட்டு, திருநாதர்குன்று, பிள்ளையார்பட்டி, தமதஹள்ளு (பொ.ஆ 6 ஆம் நூற்றாண்டு) போன்ற இடங்களில் உள்ளன.

**பூலாங்குறிச்சிக் கல்வெட்டு**

பொதுவாக தமிழகத்தில் பொ.ஆ.6 ஆம் நூற்றாண்டு வரை கிடைக்கும் கல்வெட்டுக்கள் ஒரு வரி முதற்கொண்டு 5,6 வரிகளைக் கொண்ட சிறிய கல்வெட்டுக்களாகவே உள்ளன. ஆனால், சிவகங்கை மாவட்டம் பூலாங்குறிச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட ஐந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் மட்டும் பெரிய அளவில் அதிக வரிகளைக்கொண்டு விளங்குகின்றன. இவ்விடத்தில் மொத்தம் 3 கல்வெட்டுக்கள் இருந்துள்ளன.

சேந்தன், கூற்றன் என்ற இரு அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறது. அவர்களின் குடும்பம் வம்சாவளி ஆகியன குறித்து எக்குறிப்பும் காணப்படாவிட்டாலும் சில அறிஞர்கள் அவர்களைக் களப்பிர அரசர்கள் எனக் கருதுகின்றனர். இதனால், பூலாங்குறிச்சிக் கல்வெட்டு இருண்ட காலம் என்று கருதப்பெற்று வந்த களப்பிரர் காலத்திலும் அரசு நடைபெற்றுள்ளதைத் தெரிவிக்கிறது எனலாம். அத்துடன் களப்பிரர் காலத்தில் சமண சமயத்தினருக்கு மட்டுமின்றி இந்துக் கோயிலான (சிவன் கோயில்) தேவகுலம் அமைக்கப்பெற்று அதற்கு வழிபாடு செய்ய முறைகளை வகுத்துள்ளமையை அறியமுடிகிறது. மேலும் பிராமணர்களுக்கு நிலக்கொடை வழங்கிய செய்தியையும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. தமிழிக் கல்வெட்டுக்களில் உள்ளது போல் "பாளிய்" என்ற சொல்லாட்சி இடம்பெறவில்லை. கொடுத்தவர் பெயர் மட்டுமே காணப்பெறுகிறது.

**அரச்சலூர் கல்வெட்டு**

இக்கல்வெட்டில் உள்ள தா, தை, தா என்பது போன்ற இசைக்குறிப்புக்களைத் (எழுத்துக்களை) தொகுத்தது மலையிலுள்ள வண்ணக்கன் தேவன் சாத்தன் என்பவர் ஆவார். (தமிழகத்தில் இசைக் குறிப்புகள் பற்றிக் கூறும் முதல் கல்வெட்டு. எழுத்தமைதி தமிழியிலிருந்து வட்டெழுத்துக்கு மாறும் நிலையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.)

**அரசலாபுரம் கல்வெட்டு**

- செய்தி: முகையுருவைச் சேர்ந்த மேற்சேரிக்காகச் சண்டையிட்டு வெற்றிபெற்ற பின் இக்கோழிக்கு உருவம் செதுக்கப்பெற்றுள்ளது.
- சிறப்பு: தொன்மைத் தமிழகத்தில் காளைச் சண்டையைப் போல் கோழிச் சண்டையும் நிகழ்ந்துள்ளதை விளக்கும் முதல் கல்வெட்டு.

**இந்தளூர்க் கல்வெட்டு**

தொன்மைத் தமிழகத்தில் காளைச் சண்டையைப் போல் கோழிச் சண்டையும் நிகழ்ந்துள்ளதை விளக்கும் கல்வெட்டு.

**திருநாதர்குன்று கல்வெட்டு**

சமண முனிவர்களின் சமய மாண்பை விளக்கும் கல்வெட்டாகும். இதுவரை கிடைத்த கல்வெட்டுக்கள் அனைத்தும் சமணத் துறவிகளுக்குப் பிறர் செய்த கொடைகளை (பாளிய் - இருக்கை) மட்டுமே பேசின. ஆனால், இக்கல்வெட்டில் சமணசமயத்தின் கொள்கை பேசப்பெறுகிறது. இவ்வகையில் இது முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டாகும்.

### 1.8.4.5. பல்லவர் காலக் கல்வெட்டுகள்

பல்லவர் காலத்தைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டுகள் இதுவரையில் சுமார் 260 கிடைத்துள்ளன. இவற்றில் கி.பி.850 க்கு முந்தியவை சுமார் 140 கல்வெட்டுகள் ஆகும். கி.பி.6 ஆம் நூற்றாண்டுக்கு முன் அரசு செலுத்திய பல்லவர்கள் தங்களது செப்பேடுகளைப் பிராகிருத மொழியிலும் சமசுகிருத மொழியிலும் வெளியிட்டனர். சிம்மவர்மன் காலம் தொடங்கி சமசுகிருதத்தோடு தமிழிலும் செப்புப் பட்டயங்களை வெளியிடத் தொடங்கினர். பல்லவர் காலத் தமிழ்க் கல்வெட்டுகளிலே மிகப் பழமையானது பள்ளன் கோயிலிலிருந்து கண்டு எடுக்கப் பெற்ற சிம்மவர்மனின் செப்பேட்டில் எழுதப் பெற்றுள்ள தமிழ்ப் பகுதியாகும். இது சிம்மவர்மனின் ஆறாம் ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்டதாகும்.

(முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டு ஒன்று செங்கல்பட்டு மாவட்டம் வல்லம் என்ற ஊரில் கிடைத்துள்ளது. (இரண்டாம் நந்திவர்மன் காலத்தில்

இருந்து தமிழ் எழுத்தில் பொறிக்கப்பெற்ற தமிழ்க் கல்வெட்டுகள் பெருமளவில் கிடைத்துள்ளன. அதிலும் சிறப்பாகக் கம்பவர்மன் காலத்தில் இருந்து நல்ல தமிழில் சிறந்த அமைப்புள்ள கல்வெட்டுகளைக் காணமுடிகிறது.

பல்லவர்கள் காலக் கல்வெட்டுகள் அனைத்தும் 'கோவிசைய' என்று தொடங்குகின்றன. கல்வெட்டுகள் பல்லவ மன்னர்களை 'வர்மர்' என்றும் 'போத்தரையர்' என்றும் 'விக்கிரமபருமர்' என்றும் அடைமொழிகளால் குறிக்கின்றன. 'போத்தரையர்' என்னும் அடைமொழி செங்கல்பட்டு மாவட்டம் வல்லம் என்னும் என்ற ஊரில் கிடைத்த மகேந்திரவர்மனது கல்வெட்டில் முதலில் குறிப்பிடப்படுகிறது.

பல்லவர்கள் காலத் தமிழ்க் கல்வெட்டுகளில் 'ஸ்வஸ்திஸ்ரீ' என்ற மங்கல வாசகம் பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் இருந்து காணப்படுகிறது. பல்லவ மன்னன் அபராஜிதன் வெண்பா இயற்றும் திறமை படைத்தவர் என்பதைத் திருத்தணியிலிருந்து கிடைத்துள்ள கல்வெட்டு மூலம் உணரலாம். பல்லவர் காலத் தமிழ்க் கல்வெட்டுகள் மூலம் அவர்களது ஆட்சிமுறை, வேளாண்மை, நீர்ப்பாசனம், சமயவழிபாடு, கலை, பண்பாடு ஆகியவற்றைத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. நாட்டுப்பகுதிகள் கோட்டம், நாடு, ஊர் என்று பிரிக்கப்பட்டிருந்ததையும் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

**திருக்கழுக்குன்றம் கல்வெட்டு**

பல்லவர்கள் தாங்கள் வெற்றி கொண்ட ஊரைத் தங்களது பெயரோடு சேர்த்து வழங்கி வந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது. முதலாம் நரசிம்மவர்மன், சாளுக்கிய மன்னர்களின் தலைநகரான வாதாபியை வெற்றி கொண்டதன் காரணமாக வாதாபி கொண்ட நரசிம்மன் என்று ஒரு பெயர் வழங்கி வந்தது திருக்கழுக்குன்றம் கல்வெட்டால் புலப்படுகிறது.

**மண்டகப்பட்டு குகைக் கல்வெட்டு**

விசித்திரசித்தன் (முதலாம் மகேந்திரவர்மன்) செங்கல், மரம், உலோகம், சுதை இவை ஏதுமின்றி மும்மூர்த்திகளுக்குக் (பிரம்மன், சிவன், விஷ்ணு) கோயில் எடுத்தான் என்ற செய்தியைக் கல்வெட்டு கூறுகிறது.

**திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டு**

முதலாம் மகேந்திரவர்மன் முதலில் சமணனாக இருந்தான். பின்பு திருநாவுக்கரசரிடம் ஈடுபாடு கொண்டு சைவ சமயத்தைத் தழுவினான். இவன் சிவலிங்க வழிபாடு உடையவன் என்று திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டுக் கூறுகின்றது.

**வாயலூர்க் கல்வெட்டு**

வரலாற்றைப் பற்றி குறிப்பிடும் கல்வெட்டுகளில் இராசசிம்மனின் வாயலூர்க் கல்வெட்டு முதன்மை இடம் பெறுகிறது. இதில் பல்லவ மன்னர்களின் வழிமுறை தெளிவாகக் குறிக்கப் பெற்றுள்ளது.

**குடுமியான்மலை கல்வெட்டு**

இங்குள்ள இசைக் கல்வெட்டு இசைக்கலை ஆசிரியரான ருத்ராச்சார்யா என்பவரின் சீடனான பரம மகேஸ்வரனால் வெட்டப்பட்டது. இக்கல்வெட்டு சங்கீரண ஜதி எனப்படும், ராகத்தைப் பற்றிய குறிப்புகளைக் கூறுகிறது. இதன் அருகில் "பரிவாதினி" என்ற சொல் குறிக்கப்பட்டுள்ளது. இது ஒரு யாழ் வகையாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இது பல்லவ மன்னனான முதலாம் மகேந்திரவர்மனால் வெட்டப்பட்ட கல்வெட்டாக இருக்கலாம் என்று சிலரும், இல்லை என்று சிலரும் கருதினர். இக்கல்வெட்டு கி.பி.7 நூற்றாண்டின் மத்தியில் தமிழ்நாட்டில் வழங்கிவந்த இசைக்கலை பற்றிக் கூறுகிறது.

### 1.8.4.6. சோழர் காலக் கல்வெட்டுகள்

சோழர் தங்களது பரந்து விரிந்த பேரரசை ஆள்வதற்கு வலுவான நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கியதுடன், பிற்கால வரலாற்றாய்வாளர்களுக்கு உதவும்வண்ணம் பெரும் எண்ணிக்கையிலான வரலாற்றுச் சான்றுகளையும் விட்டுச் சென்றுள்ளனர். செப்பேடுகளிலும் கல்லிலும் 10,000-க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் சோழர் வரலாற்றுக்கான முதல்நிலைச் சான்றுகளாக உள்ளன.

இந்த வரலாற்று ஆவணங்களில் பெரும்பான்மையானவை அரசர்களும் பிறரும் கோவில்களுக்கு வழங்கிய கொடை குறித்த தகவல்களாகவே உள்ளன. அவற்றின் உள்ளடக்கத்தில் நிலப் பரிமாற்றங்கள், வரிகள் (விதிக்கப்பட்ட வரிகள், விலக்கப்பட்ட வரிகள்) ஆகியன குறித்த தகவல்களே அதிகம். ஆனால், பிற்காலக் கல்வெட்டுகள் சமூக வேறுபாடுகள் குறித்தும் குறிப்பிடுகின்றன. அவை சமூகத்தில் சாதிகள், துணைச்சாதிகள் இருந்ததைக் காட்டுகின்றன. இவற்றின் வாயிலாக அன்றைய சமூகக் கட்டமைப்பு குறித்த தகவல்களை அறிய முடிகிறது.

இவற்றுடன் செப்பேடுகளிலும் அரசர் ஆணைகள் காணப்படுகின்றன. அவற்றிலும் குல வரலாறு, போர்கள், வெற்றிகள், நிர்வாகப் பிரிவுகள், உள்ளாட்சி அமைப்பு, நில உரிமைகள், பல்வேறு வரிகள் குறித்த செய்திகள் உள்ளன.

- முதலாம் இராசராச சோழன் தன் கல்வெட்டுகளின் தொடக்கத்தில் தன் ஆட்சியின் பெருமைகளைக் கூறும் மெய்கீர்த்திகளை முதன் முதலில் சேர்த்தார்.
- முதலாம் இராஜேந்திரன் காலத்தில் 'திரிபுவனச் சக்கரவர்த்தி' என்றும் 'கோனேரின்மை கொண்டான்' என்றும் கல்வெட்டின் தொடக்கத்தில் காணலாம்.

**உத்திரமேரூர் கல்வெட்டு**

இன்றைய காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கிராமம் பிராமணர்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட ஒரு பிரம்மதேய கிராமமாகும். இக்கிராமத்தில் கிராம சபைக்கான உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பது குறித்துத் தெளிவாக விளக்கும் கல்வெட்டுகள் உள்ளன. ஒவ்வொரு குடும்பிலிருந்தும் (வார்டு) உறுப்பினர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். மொத்தம் 30 குடும்புகள் இருந்தன. போட்டியிடும் ஆடவர் 35-70 வயது வரம்புக்குள் இருத்தல்

வேண்டும். வேதநூல்களிலும், சமய நூல்களிலும் தேர்ச்சி பெற்றிருப்பதும், நிலஉரிமையாளராகவோ, சொந்த வீடு உடையவராகவோ இருக்க வேண்டும் என்பவை தகுதிகளாகும்.

தேர்ந்தெடுக்கும் முறை:

ஒவ்வொரு குடும்பிலிருந்தும் தகுதியுடைய வேட்பாளர்களின் பெயர்கள் பனையோலைத் துண்டுகளில் எழுதப்படும். அவை மட்பாண்டம் ஒன்றில் போடப்படும். மன்றத்தின் மூத்த உறுப்பினர் ஒரு சிறுவனை அழைத்து குடத்துக்குள் உள்ள ஓலைத் துண்டுகளை எடுக்கச் சொல்லி அதில் எழுதப்பட்டுள்ள பெயரை அறிவிப்பார். இம்முறையின்படி பல குழுக்கள் முடிவு செய்யப்படும்.

**திருமுக்கூடல் கல்வெட்டு**

வீரராஜேந்திரன் காலத்தைச் சேர்ந்த திருமுக்கூடல் கல்வெட்டு தனிப்பெருமை வாய்ந்தது. அந்த ஊரில் இருந்த மருத்துவமனையில் (ஆதுலர் சாலை) என்னென்ன மருந்துகள் இருந்தன என்னும் பட்டியலை அந்தக் கல்வெட்டில் இருந்து அறியமுடிகிறது. மேலும், இக்கல்வெட்டு அரசனின் ஆணை எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது என்பதை அழகுறத் தெரியப்படுத்துகிறது.

**திருவேந்திரபுர கல்வெட்டு**

திருவேந்திரபுரத்தில் கிடைத்துள்ள கல்வெட்டு மூன்றாம் இராஜராஜனுக்கு ஏற்பட்ட இன்னல்களையும் அவை, அப்பொழுது வாழ்ந்த ஹொய்சாள மன்னனின் குறுக்கீட்டினால் களையப்பட்டதைக் கூறுகிறது.

**திருவிடைவாயில் கல்வெட்டு**

திருவிடைவாயிலில் (தஞ்சாவூர்) கிடைத்துள்ள ஒரு கல்வெட்டில் அவ்வூர் கோயிலைப் பற்றிய இதுவரை கிடைக்கப் பெறாத திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல் ஒன்றைக் காண்கிறோம்.

**சோழர் மற்றும் பாண்டிய மன்னர்களின் மெய்கீர்த்திகள்**

| சோழ மன்னன் | மெய்க்கீர்த்தி தொடக்கம் |
|---|---|
| முதலாம் இராசராசன் | "காந்தளூர் சாலை கலமறுத் தருளிய" "திருமகள் போல்" |
| முதலாம் ராஜேந்திரன் | "திருமன்னி வளர இருநில மடந்தையும்" "பூர்வ தேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட" |

| பாண்டிய மன்னன் | மெய்க்கீர்த்தி தொடக்கம் |
|---|---|
| முதலாம் சடையவர்மன் குலசேகரன் | "பூவின் கிழத்தி" |
| இரண்டாம் சடையவர்மன் குலசேகரன் | "பூதல வனிதை" |
| சடையவர்மன் விரபாண்டியன் | "திருமகள் வளர்" |
| முதலாம் மாறவர்மன் குலசேகரன் | "தேர் போல்" |

- தமிழ்நாட்டில் கிடைத்துள்ள மிகவும் தொன்மையான வடமொழிக் கல்வெட்டு சிவன் வாயில் என்னுமிடத்தில் கிடைத்த சிம்மவர்மன் என்னும் புல்லவ மன்னனின் கல்வெட்டைக் கூறலாம்.
- காஞ்சி கல்வெட்டில் இரண்டாம் நரசிம்மவர்மனாகிய இராசசிம்மன் சைவ சித்தாந்த வழியில் நின்று மலங்களை நீக்கிய சிவசூடாமணியாகத் திகழ்ந்தான் என்ற குறிப்பு உள்ளது. தமிழ்நாட்டில் சைவ சித்தாந்தத்தைக் குறிக்கும் மிகவும் தொன்மையான கல்வெட்டு இதுதான்.

### 1.8.4.7. பாண்டியர் காலக் கல்வெட்டுகள்

பாண்டியர்களின் ஆரம்ப காலக் கல்வெட்டுகள் அனைத்தும் தமிழகத்தின் தென் பகுதியில் கிடைப்பதில் இருந்து அவர்கள் முதலில் தென் பகுதியில்தான் தங்கள் ஆதிக்கத்தை செலுத்திக் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகும். பாண்டியர் காலத்தில், மிகப் பழமையான தமிழ்மொழிக் கல்வெட்டுகள் அனைத்தும் வட்டெழுத்திலேயே உள்ளன.

பாண்டியர்களின் தமிழ்க் கல்வெட்டுகளில் மிகப் பழமையானது மதுரை வைகைக் கரையில் கிடைத்துள்ள தமிழ்க் கல்வெட்டு ஆகும். இது பாண்டிய மன்னன் சேந்தன் காலத்தது ஆகும்.

பாண்டியர் காலக் கல்வெட்டுகளில் மன்னர்கள் 'கோமாறஞ்சடையர்' என்றும் 'கோச்சடைமாறர்' என்றும் அடைமொழிகளால் வழங்கப்படுகின்றனர். கல்வெட்டுகள் வழியாக கடுங்கோன் வழிவந்த பாண்டியர்களின் அரசமரபினர், அவர்கள் கண்ட வெற்றிகள், அவர்களுடன் போட்டியிட்ட மற்றப் பேரரசுகள் அவர்களின் இலக்கிய, சமய ஈடுபாடுகள் அவர்களின் அரசு அமைப்புப் போன்ற பல உண்மைகள் நமக்குக் கிடைக்கின்றன. 7, 8 ஆம் நூற்றாண்டிலிருந்து 16 ஆம் நூற்றாண்டு வரை பாண்டியர் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகளும் தொடக்ககால பாண்டியர் வரலாற்றை அறிய உதவிபுரிகின்றன.

நெடுஞ்சடையப் பராந்தகனின் ஆனைமலைக் கல்வெட்டும், திருப்பரங்குன்றம் கல்வெட்டும் கலி சகாப்த ஆண்டில் குறிக்கப் பட்டிருப்பதால் இவை வரலாற்றுக் காலக் கணிப்பிற்கு ஆதாரங்களாய் அமைந்துள்ளன. இது போன்று ஐவர் மலையில் உள்ள வரகுணனின் 8 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு சக ஆண்டு 792 அதாவது கி.பி.870-ல் பொறிக்கப்பட்டது. திருச்சிராப்பள்ளி மற்றும் அம்பாசமுத்திரத்தில் உள்ள வரகுணனின் கல்வெட்டுகளும் மிக பயனுள்ளவை ஆகும். இவையெல்லாம் வட்டெழுத்தில் எழுதப்பெற்றவை.

பத்தாம் நூற்றாண்டில் பாண்டிய நாடு சோழர் ஆதிக்கத்தின்கீழ் வந்த காலம் வரை வட்டெழுத்து வழக்கில் இருந்தது. பிறகு சோழ நாட்டிலும் தொண்டை நாடுகளில் உள்ளது போலப் பிற்காலத் தமிழ் எழுத்தில் எழுதப்பட்டன. இரண்டாம் பாண்டியப் பேரரசு காலத்தில் கல்வெட்டுகள் பன்மடங்கு அதிகரித்தன. நீண்ட வாசகங்களுடன் வரையப்பட்டன. சோழ அரசர்களைப் போல் இவர்களும் மெய்க்கீர்த்திகளைப் புனைந்து கொண்டனர். ஒவ்வோர் மன்னனும் ஒருவிதச்

சொற்றொடர்கொண்ட மெய்க்கீர்த்திகளை அமைத்துக் கொண்டனர்.

மெய்க்கீர்த்திகள் , பல இடங்களில் பெருமைகளை மிகைப்படுத்திக் கூறுவது குறையாக இருந்தாலும், அவற்றில் பல வரலாற்று உண்மைகள் அடங்கி உள்ளன என்பதை மறக்க முடியாது. மதுரை மாவட்டம் கீழ்மாத்தூர் என்ற ஊரில் காணப்பெறும் கல்வெட்டு தமிழவேள் என்று முத்தமிழ் புலமை பெற்ற அறிஞர் ஒருவரைக் குறிப்பிடுகிறது.

### மானூர் கல்வெட்டு

திருநெல்வேலி மாவட்டம் மானூர் என்னும் ஊரில் உள்ள கி.பி. (பொ.ஆ) 800 ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு மூலம் பாண்டியர் மன்னன் மாறன் சேந்தனின் காலத்தில் நிலவிய நிர்வாகக் குழுக்கள் பற்றியும் அதன் நடைமுறைகளையும் அறியமுடிகிறது. கிராம மன்றங்களையும், பல்வேறு குழுக்களையும் கொண்டிருந்த சோழர்களின் உள்ளாட்சித் துறை போலவே நிர்வாகம் காணப்படுகிறது. சிவில், இராணுவ அதிகாரங்கள் ஆகிய இரண்டும் ஒரே நபரிடம் வழங்கப்பட்டிருந்தன. சோழர் கிராம நிர்வாகத்திற்கு உத்தரமேரூர்க் கல்வெட்டு எவ்வளவு முக்கியமோ அவ்வாறே மானூர்க் கல்வெட்டும் பாண்டியர் வரலாற்றுக்கு முக்கியம் வாய்ந்ததாகும்.

### மதுரை வைகைக்கரைக் கல்வெட்டு

கோச்சேந்தன் என்ற பாண்டிய மன்னன் அரிகேசரி என்ற தனது விருதைப் பெயரில் வைகைக் கரையில் மதகு ஒன்றை அமைத்துள்ளார். இக்கல்வெட்டின் மூலம் பாண்டிய மன்னர்கள் வைகைக் கரையில் மதகு அமைத்து நீர்ப்பாசனத்திற்கு உதவியுள்ளதை அறிய முடிகிறது.

- கல்விச் சாலையைப் பற்றி எண்ணாயிரம் என்ற ஊரில் காணப்பெறும் முதலாம் இராஜேந்திரனுடைய கல்வெட்டும், செங்கல்பட்டு மாவட்டத்தில் திருமுக்கூடல் என்ற ஊரில் கிடைத்த கல்வெட்டும் விளக்கமாகக் கூறுகின்றன. மருத்துவச் சாலையைப் பற்றி அதே ஊரில் காணப்பெறும் வீரராஜேந்திரனின் கல்வெட்டு தெரிவிக்கிறது.
- ஊராட்சி முறையைப் பற்றி மானூரில் காணப்பெறும் மாறஞ்சடையனுடைய கல்வெட்டும், சோழ மன்னன் முதற் பராந்தக சோழனுடைய உத்திரமேரூர்க் கல்வெட்டும் தெளிவாக்குகின்றன.
- நீதிமுறையைப் பற்றி திருப்பாதிரிப்புலியூரில் காணப்பெறும் பெருமாள் பராக்ரம பாண்டியனுடைய கல்வெட்டு அருமையாக விவரிக்கிறது.

## 1.8.5. தமிழ்நாட்டுச் செப்பேடுகள்

### 1.8.5.1. சங்க காலம்

#### வேள்விக்குடி செப்பேடுகள்

வேள்விக்குடிச் சாசனத்தில் சங்க காலத்து மன்னன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் பெயர் குறிப்பிடப்படுகின்றது. சங்கங்களின் வரலாற்று மரபை உறுதிசெய்ய இது உதவுகின்றது.

### 1.8.5.2. பல்லவர் காலம்

சிம்மவிஷ்ணு வமிசத்தைச் சேர்ந்த பல்லவ மன்னர்களுடைய வரலாற்றுக்குக் கல்வெட்டுகளைக் காட்டிலும் செப்பேடுகளே மிகுந்த சான்றுகளைத் தருகின்றன. இரண்டாம் சிம்மவர்மனின் (சுமார் கி.பி.550) ஆறாம் ஆட்சி ஆண்டில் அளிக்கப்பட்ட பள்ளன்கோயில் செப்பேடுகள் முதன்முதலாக வடமொழியும் தமிழும் கலந்தவை ஆகும்.

#### உருக்காட்டுக்கோட்டம் செப்பேடு

1879 இல் புதுச்சேரிக்கு அருகே உருக்காட்டுக்கோட்டம் என்னுமிடத்தில் இருபுறமும் இணைக்கப்பட்டு லிங்கம், நந்தி ஆகியன (பல்லவர்களின் முத்திரை) பொறிக்கப்பட்ட செப்பு வளையத்தில் கோர்க்கப்பட்ட பதினோரு செப்புப்பட்டயங்கள் கண்டறியப்பட்டன. அரசன் நந்திவர்மனின் (கி.பி.753) இருபத்திரண்டாவது ஆட்சியாண்டில், மானியமாகத் தரப்பட்ட ஒரு கிராமம் குறித்த செய்திகள் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன் உள்ளடக்கம் அரசரைப் பற்றிய சமசுகிருத மொழியில் புகழ்வதில் தொடங்கி மானியத்தைப் பற்றிய விவரங்களைத் தமிழில் கூறி இறுதியில் சமசுகிருத செய்யுளோடு முடிவடைகிறது.

### 1.8.5.3. சோழர் காலம்

பிற்காலச் சோழர்கள் காலத்தில் (பத்து முதல் பதிமூன்றாம் நூற்றாண்டு வரை) வெளியிடப்பட்ட பல செப்புப்பட்டயக் கொடை ஆவணங்களில் இந்து, பௌத்த அல்லது சமண சமயத்தைச் சேர்ந்த தனிப்பட்ட குருமார்களுக்கோ, துறவிகளுக்கோ அல்லது புகழ்பெற்ற மனிதர்களுக்கோ வழங்கப்பட்ட கொடைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் கொடை வழங்கியவர், கொடை பெற்றவர் ஆகியோர் குறித்து விரிவான செய்திகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் கொடை வழங்கியவரின் அறச்செயல்களே அதிகம் பதிவு செய்யப்பட்டுள்ளன. கொடை வழங்கியவர் மட்டுமே சிறப்புக் கவனம் பெறுகிறார்.

#### லெயிடன் பட்டயம்

ஹாலந்து நாட்டில் லெய்டன் நகரில் உள்ள பொருட்காட்சியகத்தில் தமிழகச் செப்பேடுகள் 2 இருக்கின்றன. அவற்றுள் ஒன்று அளவில் பெரியது மற்றொன்று சிறியது. இதில் பெரியது முதலாம் இராசஇராசனது காலத்தில் வெளியிடப்பட்டது. இச்செப்பேடு இராசராசசோழனுடைய 21 ஆம் ஆண்டைச் சேர்ந்தது.

முதலாம் இராசஇராச சோழன், கடார மன்னமாகிய மாறவிசயோத்துங்க வருமன் (சூளாமணிபன்மன்) நாகப்பட்டினத்தில் 'சூடாமணி வரும விகாரம்' என்னும் புத்த விகாரைக் கட்டுவதற்குப் பேருதவி புரிந்ததுடன் 'ஆனைமங்கலம்' என்னும் கிராமத்தினையும் பள்ளிச் சந்தமாக அளித்தான். அப்புத்த விகாரம் இராஜேந்திரனது காலத்தில் முடிவுற்றதால், இவன் தன் தந்தையின் அறக்கட்டளையைச் செப்பேடுகளில் தீட்டியளித்துள்ளான். இதுவே 'ஆனைமங்கலம் செப்பேடு' என்று

அழைக்கப்படுகிறது. இச்செப்பேடுகள் 'ஆலந்து' நாட்டின் பொருட்காட்சி சாலையில் உள்ளதால் இவை லீடன் செப்பேடுகள் என அழைக்கப் பெறுகின்றன. கடல் கடந்த கடாரம் நாட்டு மன்னன் தமிழ் நாட்டில் பௌத்தப் பள்ளி எடுக்கும் அளவுக்கு இராசராசசோழனின் பெருமையும் அயலக உறவும் சிறந்திருந்தது. இச்செப்பேட்டில் சோழர் குலத்தைப் பற்றியும் கொடை பற்றியும் ஏராளமான செய்திகள் உள்ளன.

முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பெற்ற ஆனைமங்கல நிவந்தச் செப்பேடுகளும் ஹாலந்து நாட்டின் பொருட்காட்சி சாலையில்தான் உள்ளன. இவ்விரண்டுக்கும் வேறுபாடு அறிதலுக்காக அளவில் பெரிய இராசராசசோழனின் ஆனைமங்கலச் செப்பேடுகள் 'பெரிய லீடன் செப்பேடுகள்' என அழைக்கப் பெறுகின்றன.

### திருவாலங்காட்டுச் செப்பேடு

சோழர்காலச் செப்பேடுகளில் மாபெரும் செப்பேடு திருவாலங்காட்டுச் செப்பேடு ஆகும். இச்செப்பேடுகள் கி.பி.1905-இல் கண்டுபிடிக்கப்பட்டன. திருவாலங்காட்டில் எழுந்தருளி இருக்கும் அம்மை நாச்சியாருக்கும், திருவாலங்காட்டில் மகா தேவர்க்கும் இம்மன்னன் இருபத்தைந்தரை வேலி நிலத்தினைத் தேவ தானமாக அளித்த செய்தியைக் கூறுகின்றன.

இச்செப்பேடுகள் முதலாம் இராசேந்திர சோழன் மேற்கொண்ட படை எழுச்சி பற்றிக் கூறுகின்றன. இவை முதலாம் இராசேந்திர சோழனின் ஆறாவது ஆட்சி ஆண்டில் கி.பி.1018 வெளியிடப் பெற்றனவாகும். இச்செப்பேடுகள் சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

### அன்பில் செப்பேடு

சுந்தர சோழன் (இரண்டாம் பராந்தகன் சோழன்) வெளியிட்ட அன்பில் செப்பேடுகள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அன்பில் ஊரைச் சேர்ந்த அநிருத்தணன் அதிகாரிக்கு திருவழுந்தூர் நாட்டில் உள்ள கருணாகர மங்கலம் என்னும் கிராமத்தை வழங்கியதைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இச்செப்பேடுகள் சுந்தர சோழனின் நான்காம் ஆட்சி ஆண்டில் (கி.பி.960) வெளியிடப்பட்டன.

### கரந்தை செப்பேடுகள்

இச்செப்பேடுகள் முதலாம் இராசேந்திர சோழனின் எட்டாம் ஆட்சி ஆண்டில் (கி.பி.1020) வெளியிடப் பெற்ற செய்திகளைக் கொண்டனவாகும். 1949 ஆம் ஆண்டு கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு இச்செப்பேடுகள் கிடைத்தன. இச்செப்பேடுகளின் மூலமாக இராசேந்திரன் ஆயிரத்தெண்பது சதுர்வேதி பட்டர்களுக்கு ஐம்பத்தோரூர்களைப் பிரம்மதேயமாக அளித்த செய்திகளை அறியலாம். சோழ மன்னரின் மரபு பற்றியும், இராசேந்திரனின் வெற்றி, வாழ்க்கை, அரசியல் பற்றிய செய்திகளையும் இச்செப்பேடுகள் விரிவாகக் கூறுகின்றன.

### சாரால செப்பேடு

இது வீரராஜேந்திரன் சோழனுடைய ஏழாம் ஆண்டைச் சேர்ந்தது (கி.பி.1070). இச்செப்பேட்டில் காணும் நீண்ட வடமொழி முகப்புரை (ப்ரசஸ்தி) அதே மன்னன் காலத்தைச் சேர்ந்த கன்னியாகுமரிக் கல்வெட்டின் நேர்படியாக இருக்கின்றது. சித்தூரில் உள்ள சாரால என்னும் ஊரில் இச்செப்பேடுகள் கிடைத்துள்ளமையின் 'சாரால செப்பேடுகள்' எனும் பெயர் பெறுகின்றன.

### சின்ன லெயிடன் செப்பேடுகள் (சிறிய ஆனைமங்கலச் செப்பேடுகள்)

இச்செப்பேடுகள் முதலாம் குலோத்துங்க சோழனின் இருபதாம் ஆட்சி ஆண்டில் (கி.பி.1090) வெளியிடப்பட்டன. இவை இம்மன்னன், கடார மன்னன் சோணாட்டில் கட்டிய 'இராச ராசப் பெரும் பள்ளிக்கும், இராசேந்திர சோழப் பெரும் பள்ளிக்கும் பள்ளிச் சந்த இறையிலியாக' ஆனைமங்கலத்தில் ஒரு பகுதியுடன் ஆமூர், நாணலூர், புத்தாக்குடி, மூஞ்சிக்குடி, சந்திரபாடி, உதயமார்த்தாண்ட நல்லூர் ஆகிய ஊர்களில் இருந்து விளையும் ஆயிரக்கணக்கான கலம் நெல்லை நிவந்தம் செய்துள்ள செய்தியைக் கூறுகின்றன. இச்செப்பேடு மொத்தம் 3 ஏடுகளையும் 52 வரிகளையும் கொண்டுள்ளது.

| சோழர் காலச் செப்பேடுகள் | |
|---|---|
| அன்பில் செப்பேடு | சுந்தர சோழன் |
| பெரிய லெய்டன் செப்பேடு | முதலாம் இராசராசன் |
| கரந்தைச் செப்பேடு | முதலாம் இராசேந்திரன் |
| சாரால செப்பேடு | வீரராசேந்திரன் |
| சிறிய லெய்டன் செப்பேடு | முதலாம் குலோத்துங்கன் |
| திருஇந்தளூர்ச் செப்பேடு | முதலாம் ராசாதிராசா |
| திருக்களர் செப்பேடு | முதலாம் இராசேந்திரன் |

## 1.8.5.4. பாண்டியர் காலம்

பாண்டியர்களது வரலாற்றுக்கு அவர்களும், அவர்களது சிற்றரசர்களான ஆய் வம்சத்தினரும் விடுத்துள்ள பத்துச் செப்பேடுகள் இதுவரை கிடைத்துள்ளன. அவை :

- வேள்விக்குடிச் செப்பேடுகள்
- சீவரமங்கலச் செப்பேடுகள்
- சின்னமனூர்ப் பெரிய சாசனம்
- சிவகாசிச் செப்பேடுகள்
- ஆயகுல மன்னரின் நான்கு செப்பேடுகள்

### வேள்விக்குடிச் செப்பேடுகள்

இவை, எட்டாம் நூற்றாண்டுப் பிற்பகுதியைச் சேர்ந்த ஜடிலப்நெடுஞ்சடையப் பராந்தகன் என்னும் பாண்டிய மன்னனால் வெளியிடப்பட்டவை. இச்செப்பேடுகளின் மூலப் பிரதி, லண்டன் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. களப்பிரரை வென்று கடுங்கோன் எப்படிப் பாண்டிய அரசை மீண்டும் நிலைநிறுத்தினான் என்பதை விவரிக்கும் இச்செப்பேடு இவரது முன்னோரான பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிப் பற்றிக் கூறுவது சங்க இலக்கியச் சான்றுகளுடன் பொருந்துகிறது.

கடுங்கோன் வழிவந்த ஆறு பாண்டிய மன்னர்களைப் பற்றிய விவரங்களும் முதன்முதலாக இச்செப்பேடு வழியாகத்தான் தெரியவருகின்றன. அவர்கள் அடைந்த வெற்றிகள், ஆற்றிய இலக்கியத் தொண்டுகள், உருவாக்கிய அரசு அமைப்பு முறைகள் போன்ற பல முக்கியச் செய்திகளை இச்செப்பேடு வழியாக அறியமுடிகிறது.

## வேள்விக் குடிச் செப்பேட்டின் செய்திச் சுருக்கம்

வேள்விக்குடி என்ற ஊர் சங்க காலத்தில் (பொ.ஆ.மு.300) கொற்கைக் கிழான் நற்கொற்றன் என்ற அந்தணர்க்குப் பல்யாக முதுகுடுமி பெருவழுதி என்ற பாண்டிய மன்னால் வழங்கப்பட்டுள்ளது. நடுவிலே நாட்டின் ஆட்சி களப்பிரரிடம் மாறியிருந்தது. அந்நாளிலே தானக்கிராமத்தை அந்த வேற்று அரசாங்கம் கைப்பற்றிவிட்டது. மீண்டும் பாண்டிய வம்சத்தின் அரசு நிறுவப்பட்ட பிறகும் நெடுங்காலம் கழித்தும் (கிட்டத்தட்ட 500 ஆண்டுகள்) அந்த ஊர் முதலில் தானம் பெற்றவனுடைய வம்சத்தாருக்குக் கிடைக்கவில்லை. பாண்டியர் ஆட்சி மீண்டும் நிறுவப்பட்டு 6 அரசர்களின் காலம் முடிந்து 7ஆம் அரசனான பராந்தக நெடுஞ்சடையனுடைய ஆட்சியிலேயே முன்னர் தானம் பெற்ற அந்தணரின் வாரிசு அச்செய்திகளை அரசரிடம் கூறுகின்றார். மீண்டும் அவ்வூர் பராந்தக நெடுஞ்சடையனின் காலத்தில் (பொ.ஆ.8ஆம் நூற்றாண்டில்) சான்றுகளைக் காட்டியப் பிறகு அந்தணரின் வாரிசுக்கு கொடையாக வழங்கப்படுகிறது. இதுவே இதன் செய்திச் சுருக்கமாகும்.

## சீவரமங்கலச் செப்பேடுகள்

வேள்விக்குடிச் செப்பேடு சாசனத்தை அளித்த நெடுஞ்சடையப் பராந்தகனால் இவை அளிக்கப்பட்டன. இவை சென்னை அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இச்செப்பேட்டை வி.வெங்கையா அவர்கள் 1893 ஆம் ஆண்டில் இந்திய ஆண்டிக்குவேரியில் முதன்முறையாக வெளியிட்டார்.

இச்செப்பேடுகளில் நெடுஞ்சடையனின் கீழ்க்கண்ட செயல்களை அறியமுடிகிறது.

- பல்லவர், கேரளர், கொங்கர்மீது கண்ட வெற்றிகள்
- வெள்ளூர், விண்ணம் போன்ற வெற்றிகள்
- காஞ்சிவாய்ப் பேரூரில் திருமாலுக்குக் குன்றமன்னதோர் கோயில் கட்டியது
- ஆய்வேள் அரசனை வென்றது.
- கரவந்தபுரத்தைச் சுற்றி அகழியையும், மதிலையும் அமைத்தது.

## சின்னமனூர்ப் சிறிய சாசனம்

மதுரை மாவட்டத்தில் சின்னமனூர்க் கிராமத்தில் இச்செப்பேடுகள் கண்டெடுக்கப்பட்டன. சீவரமங்கலச் செப்பேடுகளை வரைந்த அரிகேசரி என்பவனே இச்செப்பேடுகளையும் எழுதியபடியாலும், வேறுசில அகச்சான்றுகளாலும் நெடுஞ்சடையப் பராந்தக மன்னனே சிறிய செப்பேடுகளையும் வழங்கி இருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது.

## தளவாய்ப்புரச் செப்பேடுகள்

பெரிய சின்னமனூர்ச் சாசனம் வழங்கிய இராசசிம்மனின் தந்தை பராந்தக வீரநாராயணன் வெளியிட்ட செப்பேடுகள் இவை. வேறு எந்தச் செப்பேடுகளிலும் கிடைக்காத பாண்டிய வம்சத்தினரைப் பற்றிய பல செய்திகள் இதிலிருந்து கிடைக்கின்றன. மாறன் ஸ்ரீவல்லபனுடைய தந்தையின் பெயர் பராந்தகன் என்று இது குறிக்கின்றது. சின்னமனூர்ச் செப்பேட்டில் அது வரகுணன் என்று காணப்படுகிறது. ஆகவே, நெடுஞ்சடையப் பராந்தகனே முதலாம் வரகுணன் என்று பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி கருதியது உறுதிப்படுகிறது. மாறன் குடந்தையில் கண்ட பெரும் வெற்றியைப் பற்றிய விவரம் இதில் கிடைக்கின்றது.

தளவாய்புரச் செப்பேடு "தென்மதுராபுரஞ் செய்தும் அங்கதனிலருந்ததமிழ் நற்சங்கம் இரீஇத் தமிழ் வளர்த்தும்" என்று பாண்டியர்களின் பெருமையைப் பேசுகிறது.

## சின்னமனூர்ப் பெரிய சாசனம்

இது பாண்டிய மன்னன் இரண்டாம் இராசசிம்மனால் வழங்கப்பட்டது. பாண்டிய மன்னர்களின் பெருமைகளைக் கூறிய பின்னர்ப் பாண்டியன் தலையாலங்கானத்துப் போரில் இரு பெரு வேந்தரை வென்றதையும், மகாபாரதம் தமிழ்ப்படுத்தியதையும், மதுராபுரியில் சங்கம் வைத்ததையும் ("மாபாரதம் தமிழ்ப் படுத்தும் மதுராபுரிச் சங்கம்") சிறப்பாகக் கூறுகிறது.

அரிகேசரி என்னும் மன்னனும் அவனைத் தொடர்ந்து அவனது மகன் சடிலன், அவன் மகன் இராசசிம்மன், அவன் மகன் வரகுணன், அவன் மகன் ஸ்ரீவல்லபன், அவனது மகன்கள் வரகுணன், பராந்தக சடையன் என்ற இருவர் என்று பாண்டிய பரம்பரையை வரிசைப்படுத்தி இச்செப்பேடு அளிக்கிறது. பராந்தக சடையனின் மனைவி, வானமாதேவி என்பவள். அவர்களது மகனே இச்செப்பேட்டை வழங்கிய இராசசிம்மன் ஆவான்.

## சிவகாசிச் செப்பேடுகள்

இந்தச் செப்பேடு 1960 ஆம் ஆண்டில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. இதை வெளியிட்டவன் பாண்டிய மன்னன் வீரபாண்டியன் ஆவான். சிவகாசிச் செப்பேட்டின் தமிழ்ப் பகுதி பாண்டிய மன்னர்கள் அகத்தியரோடு தமிழ் ஆய்ந்தார்கள் என்று குறிப்பிடுகிறது.

## ஆய்குல மன்னரின் செப்பேடுகள்

பொதியமலை, திருவாங்கூர், கன்னியாகுமரி போன்ற பகுதிகளை ஆண்டுவந்த ஆய்குல மன்னர் விட்டுச் சென்றுள்ள நான்கு செப்பேட்டுச் சாசனங்கள் நமக்குக் கிடைக்கின்றன. அவற்றை ஆராய்ந்து அவற்றின் வரலாற்று உண்மைகளை முதன் முதலில் வெளிப்படுத்திய பெருமை டி.ஏ.கோபிநாதர் என்பவரைச் சாரும். ஆய் மன்னர் வேணாட்டுப் பகுதியை சுயேட்சையாக ஆண்டு வந்த போதிலும் அவ்வப்போது பாண்டியர் அவர்களை இயங்கச் செய்தனர்.

# 1.8.6. தமிழ்நாட்டு நாணயங்கள்

### 1.8.6.1. நாணயவியல்

நாணயவியல் (Numismatics) என்பது நாணயங்கள் பற்றிய படிப்பு ஆகும். நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள படங்களும் உருவங்களும், அரசர்களுடைய பெயர்கள், பட்டங்கள், அவர்களின் உருவப்படங்கள், நிகழ்வுகள், இடங்களின் பெயர்கள், காலங்கள், அரசவம்சத்தின் பெயர்கள், அரச சின்னங்கள் ஆகியவற்றை நமக்கு உணர்த்துகின்றன. அரசர்களின் இராணுவப் படையெடுப்புகள், பிரதேச விரிவாக்கம், வணிகத் தொடர்புகள், சமய நம்பிக்கைகள் போன்றவையும் நாணயங்களில் இடம்பெற்றுள்ளன. நாணயங்களில் உள்ள

மோகக்கலவை பேரரசின் பொருளாதார நிலை குறித்த செய்திகளை வழங்குகின்றன.

### 1.8.6.2. தமிழ்நாட்டில் நாணயங்கள்

தமிழக வரலாற்றின் தொடக்கமான சங்ககாலத்தைச் (பொ.ஆ.மு. 300 - பொ.ஆ. 300) சேர்ந்த பாண்டிய, சேர, சோழர்களது நாணயங்கள் வைகை, கரூர், காவிரி ஆற்றுப்படுகைகளில் சிதறல்களாகக் கிடைக்கப் பெறுகின்றன. சங்ககாலப் பாண்டிய மன்னனின் "பெருவழுதி" எனும் பெயர் பொறிக்கப் பெற்ற நாணயமும், "கொல்லிப்புறையு", "கொல்லிரும்புறை", "மாக்கோதை" எனும் சேர மன்னர்களின் எழுத்துப்பொறிக்கப் பெற்றுள்ள நாணயங்களும் முக்கியமானவைகளாகும்.

இதைத் தொடர்ந்து பல்லவர், இடைக்காலச் சோழர்கள், பாண்டியர், விஜயநகர, நாயக்க அரசுகளது எழுத்துப்பொறிக்கப் பெற்ற மற்றும் எழுத்துப்பொறிப்பற்ற நாணயங்கள் ஏராளமாகத் தமிழகத்தில் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன.

### 1.8.6.3. சங்ககால நாணயங்கள்

முதன்முதலாக, சங்க காலத்தில்தான் செலாவணிக்குரிய பொருளாக நாணயங்கள் புழக்கத்திற்கு வந்தன. சேர, சோழ, பாண்டிய அரசர்களின் நாணயங்கள், முத்திரை பொறிக்கப்பட்ட நாணயங்கள், ரோமானிய நாணயங்கள் ஆகியவை சங்க காலம் குறித்து அறிந்துகொள்ள உதவும் மற்றொரு வகையான சான்றாகும். கொடுமணல், போடிநாயக்கனூர் ஆகிய ஊர்களில் முத்திரை பொறித்த நாணயங்கள் கிடைத்துள்ளன. ரோமானிய நாணயங்கள் தென்னிந்தியாவில் கோயம்புத்தூர் மண்டலத்தில் செறிந்து காணப்படுகின்றன. அழகன்குளம், கரூர், மதுரை ஆகிய இடங்களிலும் அவை கிடைத்துள்ளன.

#### அ) சங்க காலப் பாண்டியர் நாணயங்கள்

பாண்டியர்கள் தமது தலை உருவத்துடன் பெருவழுதி என்று பெயர் பொறித்த நாணயங்களையும் வெளியிட்டுள்ளனர். இவர்களது நாணயங்களில் ஒரு பக்கம் மீன் சின்னம் கோட்டுருவில் இடம்பெற்றிருப்பினும் மறு பக்கம், யானை, காளை, வேலியிட்ட மரம், மீன், ஆமை உள்ள தொட்டி, டாரின் போன்ற சின்னங்களும் இடம்பெறுகின்றன.

பாண்டியரது நாணயங்கள் மதுரை, வைகை ஆற்றுப்படுகையில் அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ளன. திருநெல்வேலி மாவட்டம் தாமிரபரணி ஆற்றுப்படுகை, கரூர், அழகன் குளம், கும்பகோணம் ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன. வட இலங்கையிலும் பாண்டியர்களது நாணயங்கள் கிடைத்துள்ளன.

பெரும்பாலான சங்க காலப் பாண்டியர் நாணயங்கள் சதுர வடிவமாகவும் சில காசுகள் வட்டவடிவமாகவும் உள்ளன. 0.50 கிராம் எடையிலிருந்து 10.60 கிராம் வரை எடையுள்ள நாணயங்களும் கிடைத்துள்ளன. இவர்களது முத்திரை நாணயங்கள் வெள்ளி உலோகத்தால் ஆனதாக 1.5 கிராம் எடையுடையதாக அரை கார்ஷாப் பணத்திற்குச் சமமானதாகவுள்ளன. பெரும்பாலான நாணயங்கள் செம்பினாலானவை. பிற்காலத்தில் (பொ.ஆ.மு. 100-300) வெளியிடப்பெற்ற ஒரு சில நாணயங்கள் ஈயத்தால் ஆனவையாகவுள்ளன.

#### ஆ) சங்க கால சேர நாணயங்கள்

பெரும்பாலும் சேரர்களது காசுகளின் ஒரு பக்கம் அவர்களது குலச் சின்னமான நாணேற்றப்பட்ட வில்லுடன் அம்பு இடம்பெறும். மறு பக்கம் கோட்டுருவ யானை, அம்பு பூட்டிய வில், மும்முகடு, மீன்கள், நதி போன்ற சின்னங்கள் காணப்படுகின்றன. சங்ககால அரசர்களுள் சேர அரசர்களது எழுத்துப்பொறிப்பு நாணயங்களே இதுவரை நமக்கு அதிகம் கிடைக்கின்றன. கொல்லிப்புறையு, கொல்லிரும்புறையு, குட்டுவன் கோதை, மாக்கோதை போன்ற சேர அரசர்களது எழுத்துப்பொறித்த நாணயங்கள் கிடைத்துள்ளன.

சேரர் நாணயங்கள் பெரும்பாலும் கரூர், அமராவதி ஆற்றுப்படுகைகளில் அதிக அளவில் கிடைக்கின்றன. ஒரு சில தஞ்சாவூர், மதுரை, திருக்கோயிலூர், மடிகேரி (கருநாடகம்), ஆகிய இடங்களிலும் கிடைக்கின்றன. சேரர்களது நாணயங்கள் அதிக அளவு எடையாக 3.66 கிராமிலிருந்து குறைந்த அளவாக 0.76 கிராம் வரை கிடைக்கின்றன. முத்திரை நாணயங்கள் வெள்ளியிலானாதாகவும் பிற நாணயங்கள் செம்பிலானதாகவும் சதுர வடிவுடனும் கிடைக்கின்றன. ஈயத்தாலான நாணயங்கள் அரிதாகவே கிடைக்கின்றன.

#### இ) சங்ககாலச் சோழர் நாணயங்கள்

சங்ககாலச் சோழர் நாணயங்களில் இதுவரை முத்திரை நாணயங்கள் கிடைக்கவில்லை எனினும் ஒரு பக்கம் புலி சின்னம் மட்டும் முத்திரை முறையில் பொறிக்கப் பெற்றுள்ள ஒரே ஒரு நாணயங்கள் மட்டும் கிடைத்துள்ளது. ஆயினும் முத்திரை நாணயங்களைத் தழுவி யானை, வேலியிட்ட மரம், 6 முகடுள்ள குன்று, நதி, காளை, மீன்கள் போன்ற எச்சின்னமும் முதன்மைப்படுத்தப்படாத வகை நாணயங்களை இவர்கள் வெளியிட்டுள்ளனர்.

எத்தகைய நாணயங்களாயினும் ஒரு பக்கம் சோழரது குலச்சின்னமான வாய்ப்பிளந்து வால் உயர்த்தி நிற்கும் புலி உருவம் இவர்களது நாணயங்களில் இடம்பெற்றிருக்கும். பிற அரச குலங்களைப் போலவே யானை முதன்மைப்படுத்தப்பட்டு வலது பக்கமோ அல்லது இடது பக்கமோ நோக்கி நிற்பது போல உள்ள நாணயங்களும் குதிரை பூட்டிய ரதம், திமிலுள்ள காளை போன்ற நாணயங்கள் இடைக்காலத்தையும் (பொ.ஆ. 1-2 ஆம் நூ.) யானை, கொடி, மேற்புறம் குடை விளிம்பை ஒட்டி சிறு உருவம் உள்ள நாணயங்கள் பிற்காலத்தையும் (பொ.ஆ.3) சேர்ந்தவையாகக் கருதப் பெறுகின்றன.

சங்ககாலச் சோழரது எழுத்துப்பொறிப்பு நாணயங்கள் இது நாள் வரையில் கிடைக்கவில்லை என்பதும் இங்குச் சுட்டத்தக்கது. சோழரது நாணயங்கள் கரூர் - அமராவதி, மதுரை - வைகை ஆற்றுப்படுகை அரியலூர் போன்ற இடங்களில் கிடைத்துள்ளன. காவிரிப்பூம்பட்டின அகழாய்வில் மணிக்கிராமம், வானகிரி போன்ற இடங்களில் முன்புறம் யானையும் பின்புறம் புலியும் பொறித்த நாணயங்கள் கிடைத்துள்ளன.

தமிழகத்தில் மட்டுமின்றி தாய்லாந்தில் குவான் - லுக் - பத் (kuan-luk-pat) என்ற இடத்தில் ஒரு பக்கம் ரதம்

பூட்டிய குதிரையும் பின்புறம் புலியும் உள்ள நாணயங்கள் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பெரும்பாலான சோழர்களது நாணயங்கள் செம்பினால் ஆனவை. ஈய நாணயங்கள் அரிதாகவே கிடைக்கின்றன.

மூவேந்தர்களில் சேரர்கள் வில்லையும், சோழர்கள் புலியையும், பாண்டியர்கள் மீனையும் தமது குலச்சின்னங்களாகக் கொண்டுள்ளதை இலக்கியங்கள் விளக்குகின்றன. இவற்றை மெய்ப்பிக்கும் வகையில் இவர்களது குலச்சின்னங்கள் பொறித்த நாணயங்கள் தமிழகத்தில் கிடைக்கின்றன. சோழர்களைத் தவிர மற்ற இருவேந்தர்களும் முத்திரை நாணயங்களை வெளியிட்டுள்ளனர். மூவேந்தர்களும் ஒரு பக்கம் யானை, காளை, குதிரை போன்ற பல சின்னங்களைப் பயன்படுத்தினாலும் மற்றொரு பக்கம் தங்களது குலச் சின்னங்களான மீன் (பாண்டியர்), நாணேற்றப் பெற்ற வில் அம்பு (சேரர்), வால் உயர்த்தி வாய்ப்பிளந்து நிற்கும் புலி (சோழர்) தங்களது நாணயங்களில் பொறித்துள்ளனர். இச்சின்னங்கள் கொண்டு கிடைத்துள்ள நாணயங்கள் எந்த அரச குலத்தைச் சார்ந்தது என எளிதாக இனங்காண இயலும்.

### ஈ) சங்க காலச் சிற்றரசர் நாணயங்கள்

மூவேந்தர்கள் மட்டுமின்றி சங்க காலத்தில் வேந்தர்களின் கீழ் ஆட்சி செய்த வேளிர்களில் ஒரு சிலரும் நாணயங்களை வெளியிட்டுள்ளனர். திருக்கோயிலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த மலையமான் என்ற சிற்றரசனும் (சோழர்) தகடூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த அதியமான் (சேரர்) என்ற சிற்றரசனும் நாணயங்களை வெளியிட்டுள்ளதாகக் கருதப்பெறுகிறது. இவர்களின் பெயர் பொறிப்புகள் இல்லை. கிடைப்பிடம் கொண்டு இவர்களது நாணயங்களாக ஊகிக்கப்பெற்றுள்ளது.

இது தவிர சங்க இலக்கியங்கள் எவற்றிலும் இடம்பெறாத அதின்னன் எதிரான் சேந்தன் என்ற பெயர் பொறித்த ஈய நாணயங்கள் 149 கிடைத்துள்ளன. நாணயங்கள் வெளியிட்டிருப்பதால் இவரையும் சிற்றசராகவே கருதவேண்டியுள்ளது.

### முத்திரை நாணயங்கள்

முத்திரை நாணயங்கள் என்பன முத்திரைப் பொறிப்புடன் எழுத்துப் பொறிப்பின்றிக் காணப்படும் காசுகள் ஆகும். தமிழகத்தில் முதன்முதலில் கர்னல் காலடுவெல் என்பவர் கி.பி.1800 இல் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மகத நாட்டைச்சேர்ந்த மூன்று வெள்ளிக் காசுகளைக் (முத்திரைக் காசுகள்) கண்டுபிடித்தார். முத்திரை நாணயங்கள் பரவலாகத் தமிழகத்தில் சென்னை முதல் திருநெல்வேலி முடிய பல இடங்களில் கிடைத்துள்ளன. குறிப்பாகக் கோயம்புத்தூர், தருமபுரி, மதுரை ஆகிய பகுதிகளில் இவை அதிக அளவில் கிடைத்துள்ளன. ஒரு சில காசுகளில் பின்புறம் யானை உருவம் காணப்படுகிறது. இவ்வுருவத்தைக் கொண்டு இக்காசுகள் சேர நாட்டுப் பகுதியில் புழக்கத்தில் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. தர்மபுரி மாவட்டம், 'நவலை' என்ற பகுதியில் யானை உருவம் பொறிக்கப்பெற்ற முத்திரைக்காசுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கொடுமணல் அகழாய்வின்போது இரு முத்திரைக் காசுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. மகத அரசை ஆட்சிசெய்த அஜாதசத்ரு பின்னர் வந்தோர் ஆட்சிக்காலத்தைச் சேர்ந்த முத்திரை காசுகள் தமிழகத்தில் மாம்பலம் மற்றும் வெம்பாவூர் போன்ற ஒரு சில இடங்களில் கிடைக்கின்றன. தமிழகத்தில் இக்காசுகள் கிடைப்பதோடு காஞ்சிபுரத்தில் இக்காசுகள் செய்வதற்கான மண்வார்ப்புகளும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. முத்திரைக் காசுகளை அடுத்து தமிழ்நாட்டில் நமக்குக் கிடைப்பன சங்க காலத்து நாணயங்களேயாகும்.

**தமிழகத்தில் முத்திரை நாணயங்கள் கிடைக்கப் பெற்ற இடங்கள்**

| இடம் | நூற்றாண்டு |
|---|---|
| மாம்பலம் | கி.மு. 5 |
| வெம்பாவூர் | கி.மு. 5 |
| விரசிகாமணி | கி.மு. 5 |
| தாராபுரம் | கி.மு. 5 |
| கன்னியன்குட்டை | கி.மு. 4 |
| தொண்டைமாநத்தம் | கி.மு. 4 |
| சாவடிப் பாளையம் | கி.மு. 4 |
| பெணார் | கி.மு. 4 |
| போடி நாயக்கனூர் | கி.மு. 2 |
| அழகன்குளம் | கி.மு. 2 |
| கரூர் | கி.மு. 2 |
| காவிரிப்பூம்பட்டினம் | கி.மு. 2 |
| நவலை | கி.மு. 2 |
| கொடுமணல் | கி.மு. 1 |

### 1.8.6.4. பல்லவர் கால நாணயங்கள்

பல்லவர் நாணயங்களில் அவர்களது குலச்சின்னமான திமிலுடன் கூடிய காளை உருவமே பெரும்பாலும் இடம்பெறுகின்றது. ஒரு சில நாணயங்களில் சிங்க உருவம் உள்ளது. பின்புறம் செடியின் தளிர், பாத்திரம், பாய்மரக்கப்பல், ஸ்ரீவத்ஸம், யானை, விதையுடன் கூடிய தளிர், வட்டத்திற்குள் சங்கு, கம்பிகளுள்ள சக்கரத்தின் நடுவில் சிறுவட்டம் கொடிக்கம்பம் உள்ளன. மேலும் பாய்மரக்கப்பல் பொறிக்கப் பெற்ற நாணயங்கள் இவர்களது கடல் வாணிகத்தைச் சுட்டுகிறது.

பல்லவர்களது முந்தைய நாணயங்களில் எழுத்துப்பொறிப்புகள் ஏதுமின்றி ஒரு சில சின்னங்களே இடம் பெற்றிருந்தன. காலம் செல்லச் செல்ல எழுத்துப்பொறிப்புக்களுடன் நாணயங்களை வெளியிட்டுள்ளனர். ஒரு பக்கம் காளையும் மறுபக்கம் ஸ்ரீவத்ஸமும் உள்ள எழுத்துப்பொறிப்பற்ற நாணயம் காஞ்சிபுரம் அகழாய்வில் கிடைக்கப் பெற்றுள்ளது இங்குச் சுட்டத்தக்கதாகும்.

பல்லவர்கள் காளை உருவம் பொறித்த நாணயங்களை வெளியிடும் முன்பாகச் சிங்க உருவம் பொறித்த நாணயங்களை வெளியிட்டுள்ளனர். ஒருபுறம் சிங்கமும் மறுபுறம் ஸ்வஸ்திகா மற்றும் சங்கு போன்ற உருவங்கள் பொறிக்கப்பட்ட நாணயங்களை முதலாம் மகேந்திரவர்மனுக்கு முற்பட்டது சிம்மவர்மனுக்குப் பிற்பட்டது என ஆர்.கிருஷ்ணமூர்த்தி குறிப்பிடுகின்றார்.

முதலாம் மகேந்திரவர்மன் காலந்தொட்டே எழுத்துப்பொறிப்பு நாணயங்கள் கிடைக்கின்றன அதைத் தொடர்ந்து முதலாம் நரசிம்மவர்மன், முதலாம் பரமேஸ்வரன், இரண்டாம் நரசிம்மன், நந்திவர்மன், மூன்றாம் நந்திவர்மன் போன்ற அரசர்களும் தங்களது விருதுப் பெயர்களை பல்லவ கிரந்த எழுத்துக்களில் பொறித்து நாணயங்களை வெளியிட்டுள்ளனர்.

பல்லவர்களது நாணயங்கள் அவர்களது ஆட்சித் தலைமையிடமான காஞ்சிபுரத்தில் கிடைக்கின்றன. இது தவிர ஆரணி, ஆற்காடு, கடலூர், கரூர், கும்பகோணம், செஞ்சி, தஞ்சாவூர், திருச்சி, தர்மபுரி, தரங்கம்பாடி, திருவையாறு, திருவண்ணாமலை, பாபநாசம், மதுரை, மாமல்லபுரம், விழுப்புரம், வேலூர் போன்ற பல இடங்களிலும் பல்லவர் நாணயங்கள் கிடைத்திருப்பினும் கரூர், திருக்கோயிலூர் ஆகிய ஊர்களியேயே அதிக அளவில் கிடைக்கின்றன. இதுவரை பல்லவர் நாணயங்கள் குவியலாகக் கிடைக்கவில்லை.

பல்லவர்கள் காலக் கல்வெட்டுக்களில் கொடை கொடுப்பதில் 'பொன்' (கழஞ்சுகள்) அதிகம் இடம்பெறுகின்றது. ஆனால் பல்லவர் நாணயங்களில் இதுவரை பொன்னாலான நாணயங்கள் கிடைக்கவில்லை. ஒன்றிரண்டு வெள்ளி நாணயங்கள் தவிர அனைத்தும் ஈயம், செம்பு, வெண்கலம், அதிக அளவு தகரம் கலந்த வெண்கலம் (highly tin bronze) போன்ற உலோகத்தால் ஆனதாகவே உள்ளன.

#### 1.8.6.5. பிற்காலச் சோழ நாணயங்கள்

தென்னிந்தியாவில் தங்கள் ஆட்சி சிறந்த நிலையில் இருந்தபோது, சோழ மன்னர்கள் தங்க, வெள்ளி, செம்பு நாணயங்களை வெளியிட்டனர். இவர்களது வெள்ளி, செம்பு நாணயங்கள் சாதாரணமாக எங்கும் கிடைக்கின்றன. முதலாம் இராசேந்திரசோழன், முதலாம் இராசாதிராச சோழன், கிழக்குச் சாளுக்கிய மன்னனான முதலாம் ராசராசன் ஆகியவர்களுடைய தங்க நாணயங்கள் 1946-ல் தௌளேஸ்வரத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில் எல்லாம் ஒரு பக்கத்தில்தான் அடையாளப் பொறிப்பு உள்ளது.

பிற்காலச் சோழர் கால நாணயங்களைப் பொதுவாக, இரு வகையாகப் பிரிக்கலாம். ஒரு வகை நாணயங்களில், இரு பக்கங்களிலும் நடுவிலும் சோழர்களது சின்னமாகிய புலியும், சோழராட்சிக்கு உட்பட்டிருந்த சேரர்களின் வில்லும் பாண்டியர்களின் மீன் சின்னமும் மன்னரும் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன. மற்றொரு வகை நாணயமான, 'ஈழக்காசுகளில்' (Ceylon Type) இலச்சினைக்குப் பதில் முன் பக்கம் ஒரு மனித உருவம், நிற்கின்ற நிலையிலும், மறுபுறம் உட்கார்ந்த நிலையிலும் காணப்படுகின்றது.

ஈழக்காசுகள் முதலாம் இராசராசசோழன் காலத்தில் இருந்து வழக்கில் உள்ளன. இம்முதல் வகை நாணயங்கள் முதலாம் குலோத்துங்கன் காலம் வரை புழக்கத்தில் இருந்தன. நமக்குக் கிடைத்துள்ள சோழர்களின் நாணயங்களில் ஒன்றைக்கூட அவற்றின் சமகாலக் கல்வெட்டுகளில் குறிப்பிடும் நாணயங்களுடன் இணைத்துக் கூற இயலவில்லை.

#### 1.8.6.6. பிற்காலப் பாண்டியர் நாணயங்கள்

பொ.ஆ. 6 ஆம் நூற்றாண்டில் கடுங்கோன் வழி பாண்டியர்கள் ஆளத்தொடங்கியுள்ளனர் ஏறத்தாழ பத்திற்கும் மேற்பட்ட அரசர்கள் ஆட்சி செய்துள்ளனர் என்பது தெளிவு. அவர்களுள் இரு அரசர்களின் பெயரில் மட்டுமே நாணயங்கள் கிடைத்துள்ளன. அவை, அவனிப சேகரன் கோளக என்று தமிழில் எழுத்துப் பொறிக்கப்பட்ட செம்பு நாணயமும், ஸ்ரீ வரகுண என்று தமிழ் எழுத்துப் பொறிக்கப்பட்ட தங்க நாணயமும் ஆகும். அவற்றுள் ஸ்ரீ வரகுண என்ற நாணயம் ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபனான இரண்டாம் வரகுணனைச் சேர்ந்தது (பொ.ஆ. 815-862). அவனிப சேகரன் கோளக என்ற நாணயத்தில் "கோளக" என்பது "குளிகை" என்ற சொல்லுடன் தொடர்புபடுத்தப் பெறுகிறது.

#### 1.8.6.7. தமிழ்நாட்டில் பிறநாட்டு நாணயங்கள்

**அ) தமிழகத்தில் கிரேக்க நாணயங்கள்**

தமிழகத்தின் அயல்நாட்டு வணிகம் பொ.ஆ.மு. 7ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்கி தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளது. கிரேக்கர்கள் தமிழகத்துடன் பொ.ஆ.மு. 5 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதற்கொண்டு வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். இவ்வணிகர்கள் மூலம் பல தமிழ்ச் சொற்கள் கிரேக்க மொழியில் நுழைந்து இடம்பெற்றுள்ளன. "அரிசி", "இன்ஜிவேர்", போன்ற சொற்கள் "அரிஸா", "ஜின்ஜிபேராஸ்" என்று அழைக்கப் பெற்றன. ரோமானியர்கள் தமிழகத்திற்கு வருவதற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த கிரேக்கர்கள் ரோமானியர்களுக்கு முன்னரே பொ.ஆ.மு.300 ஆம் ஆண்டிலிருந்தே தமிழ்நாட்டுடன் கடல்வழி வணிகத்தின் ஈடுபட்டுள்ளதற்கு இவர்களது நாணயங்களே சான்று பகர்கின்றன. கிரேக்க நாட்டு நாணயங்கள் தமிழ்நாட்டில் கரூர் ஆற்றுப்பகுதியில் கிடைத்துள்ளன.

**ஆ) தமிழகத்தில் கிடைத்துள்ள ரோமானியர் நாணயங்கள்**

கி.மு.1-3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ரோமானியர் நாணயங்கள் தமிழகத்தில் பரவலாகக் கிடைக்கின்றன. இது சங்ககாலத் தமிழருக்கும் ரோமானியருக்கும் இடையே நிலவிய கடல் சார் வணிகத்திற்கு மிகச் சிறந்த சான்று ஆகும். தமிழர்கள் கடலோரங்களில் மட்டுமின்றி நடுக்கடலிலும் பயணம் செய்துள்ளனர். 'நாவாய்' என்ற இந்த லத்தீனிய சொல்லே தமிழருடன் யவனர்கள் கொண்டுள்ள கடல் வாணிகத் தொடர்பினை விளக்கும் சான்றாக உள்ளது. யவனர்கள் என்ற சொல் பொதுவாக அந்நியர்களைக் குறித்தாலும் பெரும்பாலும் அது கிரேக்க, ரோமானியர்களையே குறித்து நின்றது.

தமிழகத்துடனான ரோமானிய வணிகம் கி.மு.1 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையில் செழிக்கவில்லை. இக்கால வரம்புக்கு முற்பட்ட ரோம மன்னர்களின் நாணயங்கள் தமிழ்நாட்டில் இதுவரையில் கிடைக்கவில்லை. ரோமாபுரியின் அகஸ்டஸ் மன்னன் (கி.மு.34) காலத்திலிருந்தே தமிழகத்துடனான நேர்முக ரோமானிய வணிகத் தொடர்பு கிட்டியுள்ளது. அகஸ்டஸ் மன்னன் காலத்தைச் சேர்ந்த நாணயங்கள் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளன. ரோமிற்கு பாண்டிய மன்னனின் தூதுவன் சென்றுள்ளான். மதுரையிலும் யவனர்களுக்கான தனிச்சேரி இருந்துள்ளது.

ரோமாபுரி வணிகம் சிறந்து விளங்கிய காலத்தில் அரிக்கமேட்டில் பண்டகச் சாலையொன்றும், விற்பனைச் சாலையொன்றும் நடைபெற்றுதையும், ரோம மட்கலங்கள் இங்கு கிடைப்பதையும் அகழாய்வுகள் மெய்பித்துள்ளன. அரிக்கமேட்டு அகழாய்வில் கி.பி.முதல், இரண்டாம் நூற்றாண்டு ரோமாபுரி நாணயங்கள் கிடைத்துள்ளன. இந்நாணயங்கள் மூலம் பண்டைய தமிழருக்கும் ரோமாபுரி மக்களுக்கும் கடல் வாணிபத் தொடர்பு இருந்து வந்தது தெரியவருகிறது.

பேரரசன் கான்ஸ்டன்டைன் (பொ.ஆ. 324-337) காலத்தில் மீண்டும் தமிழகத்துடனான வணிகம் தொடர்ந்து வந்துள்ளது. இக்கருத்தை உறுதி செய்யும் சான்றாக பிற்காலத்தைச் சேர்ந்த ரோமானிய செப்புக் நாணயங்களை ஆர்.கிருஷ்ணமூர்த்தி கண்டறிந்து தெளிவுற விளக்கியுள்ளார். இவை மதுரை, திருக்கோயிலூர், கரூர் போன்ற ஊர்களிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன.

தமிழகத்தில் அகிலாண்டபுரம், ஆனைமலை, கல்லகிணர், சாவடிப்பாளையம், திருப்பூர், பூதி நத்தம், பெண்ணார், பொள்ளாச்சி, வெள்ளலூர் (கோயமுத்தூர்), உத்தமபுரம் (மதுரை), கத்தாங்கண்ணி (ஈரோடு), கரிவலம் வந்த நல்லூர் (திருநெல்வேலி), கரூர், கலையம்பத்தூர் (திண்டுக்கல்), காருகாக்குரிச்சி (புதுக்கோட்டை), கிருஷ்ணகிரி (தருமபுரி), கோனேரிப்பட்டி (சேலம்), சொறையப்பட்டு, தொண்டைமாநத்தம் (கடலூர்), பிஷப்டவுன் (உதகமண்டலம்), மாம்பலம் (சென்னை), மதுரை போன்ற இடங்களில் ரோமானிய நாணயங்கள் கிடைக்கின்றன.

அழகன்குளத்தில், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் நடத்தப்பெற்ற அகழாய்வுமூலம் மூன்று ரோமானிய நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஒன்று இரண்டாம் வாலண்டியன் காலத்தைச் சேர்ந்ததாகவும், மற்றொன்று டியோடிஷியஸ் காலத்ததாகவும், மூன்றாம் காடு ஆர்கேடியஸ் காலத்ததாகவும் உள்ளன. மேற்காணும் இந்நாணயங்கள் கி.பி.4-5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

தமிழ்நாடு மற்றும் கேரளாவில் கிடைக்கப்பெற்ற நாணயங்களைக் கொண்டு பார்க்கையில் தமிழ்நாட்டுடன் கி.மு.2 - கி.பி.4-5 ஆம் நூற்றாண்டுவரை ரோம் நாடு வாணிகத்தொடர்புக் கொண்டிருந்தது தெளிவாகிறது. டாக்டர் விமலா பெக்லி என்பவர், அரிக்கமேட்டில் சில பானை ஓடுகளைக் கொண்டு தமிழகத்துக்கும் ரோம் நாட்டுக்கும் கி.மு.2 ஆம் நூற்றாண்டிலேயே வணிக உறவு ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கூறியிருக்கிறார்.

தமிழகத்தில் இதுவரை கிடைத்துள்ள ரோமானிய நாணயங்கள் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களில் கிடைத்துள்ளன. ஒரே ஒரு ஈயக்காசு காவிரிப்பூம்பட்டினத்தில் கிடைத்துள்ளதாக கே.வி.இராமன் எழுதியுள்ளார். இருப்பினும் வெள்ளி நாணயங்கள்தான் அதிக அளவில் கிடைத்திருக்கின்றன. குறிப்பாகக் கோவை மாவட்டப் பகுதியில்தான் இந்த நாணயங்கள் அதிக அளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ரோமானிய நாணயங்கள் தயாரிக்கக்கூடிய பித்தளை அச்சு ஒன்று கரூரிலிருந்து தாம் சேகரித்துள்ளதாகக் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

**இ) தமிழகத்தில் கிடைத்துள்ள சீன நாணயங்கள்**

*சீனா*வுக்கும் தமிழகத்திற்கும் பொ.ஆ.மு. 2 ஆம் நூற்றாண்டு முதலே வணிக உறவு நிலவியிருக்கிறது. பெலியட் கூற்றின்படி பொ.ஆ.மு. 2 ஆம் நூற்றாண்டு முதல் *சீனா*விற்கு தமிழ் நாட்டின் காஞ்சிபுரத்துக்கும், தொடர்பு இருந்தது உறுதியாகிறது. அக்காலக் கட்டத்தைச் சேர்ந்த *சீன* நாணயங்கள் ஒலையக் குன்னம், (பட்டுக்கோட்டை), விக்ரமம், தளிக்கோட்டை போன்ற பகுதிகளிலிருந்து வெளிக்கொணரப் பெற்றுள்ளன. பொ.ஆ. 8 ஆம் நூற்றாண்டில் *சீன* அரசரின் வேண்டுகோளுக்கிணங்கி *சீன* வணிகர்களுக்காகப் பல்லவ மன்னன் இரண்டாம் நரசிம்மன், நாகப்பட்டினத்தில் புத்த ஸ்தூபி ஒன்றை அமைத்தான் என்று அறிய முடிகிறது.

சோழர்கள் ஆட்சியின் பொழுதும் *சீன* நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் வணிகத் தொடர்பு இருந்துள்ளது என்பதை பொ.ஆ. 10 ஆம் நூற்றாண்டு முதல் 13 ஆம் நூற்றாண்டு வரையிலான *சீனர்*களது நாணயங்கள் மற்றும் பீங்கான், பானை ஓடுகள் தமிழ் நாட்டில் கிடைத்திருப்பதைக் கொற்கையிலும், கங்கை கொண்ட சோழபுரத்திலும் மேற்கொண்ட அகழாய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

அண்மையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறையினர் மேற்கொண்ட அகழாய்விலும் *சீன*ப் போர்சிலின் (porcelain) பானை ஓடுகள் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே தமிழகத்துடனான *சீன*ரது வணிக உறவு பொ.ஆ.மு. 200 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி 15 ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து இருந்துள்ளதை இந்நாணயங்கள் கொண்டு அறியலாம்.

கீழடி 'வெள்ளி நாணயம்'

கீழடி அகழ்வாய்வில் (7 ஆம் கட்டம்) சதுர வடிவிலான வெள்ளியிலான முத்திரை பதித்த நாணயம் கிடைத்துள்ளது. இந்நாணயத்தில், சூரியன், சந்திரன், காளை, எருது, நாய் போன்ற விலங்கு உருவங்கள் மற்றும் வடிவியல் அமைப்புகள் இடம்பெற்றுள்ளன. 2.20 கிராம் எடையுள்ள இந்த வெள்ளி நாணயம், வடமாநில மக்களுடன், பழந்தமிழர் கொண்டிருந்த வணிகத் தொடர்களுக்கான சான்றாக விளங்குகின்றன. இந்நாணயம் கி.மு.2 முதல் கி.மு.6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என தொல்லியல்துறையினர் தெரிவித்தனர். இந்நாணயத்தை ஆய்வு செய்த தலைசிறந்த நாணவியல் அறிஞரும், கொல்கத்தா பல்கலைக்கழகப் பேராசிரியருமான சுஷ்மிதா பாசு மசும்தார் 'இந்த வெள்ளி முத்திரைக் காசு, கி.மு.4 ஆம் நூற்றாண்டுக்கு அதாவது, மௌரியப் பேரரசர் அசோகர் காலத்துக்கும் முற்பட்டது' என்று தெரிவித்திருக்கிறார். இதுபோன்ற வெள்ளி நாணயங்கள் கி.மு.6 ஆம் நூற்றாண்டில், மகதப்பேரரசால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுபோன்ற நாணயங்கள் ஆலங்குளம் (இராமநாதபுரம்) பகுதியில் நடத்தப்பட்ட அகழாய்விலும் கிடைத்துள்ளன.

## மேற்பார்வை நூல்கள் :

1. இரும்பின் தொன்மை, கா.இராஜன், இரா.சிவானந்தம், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.
2. கலை மற்றும் பண்பாடு, அருங்காட்சியங்கள், தொல்லியல் துறை, கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-24.
3. தமிழக அகழாய்வுகள், முனைவர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர், முனைவர் சீ.வசந்தி, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
4. பொருநை - ஆற்றங்கரை நாகரிகம், இரா.சிவானந்தம், ஜெ.பாஸ்கர், மு.பிரபாகரன், த.தங்கதுரை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.
5. தொல்லியல் ஆய்வுகள், பேராசிரியர் டாக்டர் கே.வி.இராமன்.
6. தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும், சா.குருமூர்த்தி.
7. கொடுமணல் அகழாய்வு, ர.பூங்குன்றன், தமிழ்நாடு தொல்லியல் துறை.
8. கீழடி, வைகை நதிக்கரையில் சங்க கால நகர நாகரிகம், இரா.சிவானாந்தம், மு.சேரன், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.
9. பூம்புகார், தமிழ்நாடு தொல்லியல் துறை.
10. ஆய்வில் பூத்த மலர்கள், அ.அப்துல் மஜீத், தமிழ்நாடு தொல்லியல் துறை.
11. தொல்லியல் நோக்கில் தமிழகம், கு.தாமோதரன், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.
12. கல்வெட்டியல், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.
13. தமிழ் பிராமி கல்வெட்டுகள், முனைவர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர், முனைவர் சீ.வசந்தி, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
14. தமிழகச் செப்பேடுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
15. தமிழர் காசு இயல், நடன.காசிநாதன்
16. தமிழகப் பாறை ஓவியங்கள், டாக்டர் இராசு.பவுன்துரை.
17. தொல்லியல் நோக்கில் சங்க காலம், கா.இராஜன்.
18. தென்னிந்திய வரலாறு, கே.ஏ.நீலகண்டர்.
19. தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், கே.கே.பிள்ளை.

**வலைதளங்கள்**

1. இந்திய தொல்லியல் துறை (சென்னை வட்டம்)
2. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
3. தமிழ் இணையக் கல்விக் கழகம், தமிழர் தகவலாற்றுப்படை.

**TNPSC Old Questions**
**பொது அறிவு**

பொருத்துக : (APPGR-II/2025)

(a) முல்லை — 1. வருணன்
(b) மருதம் — 2. கொற்றவை
(c) நெய்தல் — 3. மாயோன்
(d) பாலை — 4. வேந்தன்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| அ) | 3 | 1 | 4 | 2 |
| **ஆ)** | **3** | **4** | **1** | **2** |
| இ) | 3 | 2 | 4 | 1 |
| ஈ) | 1 | 4 | 2 | 3 |

பின்வரும் சொற்றொடர்களில் எவை வட்டெழுத்துக்கள் பற்றிய சரியான விடைகளாகும்? (APPGR-II/2025)

(i) கி.பி. 3 ம் நூற்றாண்டில் வட்டெழுத்துக்கள் திராவிட அல்லது தமிழ்-பிராமி நடையிலிருந்து உருவானது
(ii) கி.பி. 6 ம் நூற்றாண்டில் முழுமையாக வளர்ச்சியடைந்தது.
(iii) கி.பி. 13ம் நூற்றாண்டில் இருந்த சோழப் பேரரசின் காலத்திலும் வட்டெழுத்துக்கள் நடைமுறையிலிருந்தன.

**அ) (i) மட்டும்** ஆ) (i) மற்றும் (iii)
இ) (i) மற்றும் (ii) ஈ) (ii) மற்றும் (iii)

கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்ந்து சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்ந்தெடுக்கவும். (GST2AM/2025)

(a) திட்டமிட்ட நகரம், தானியக் கிடங்கு மற்றும் உறை கிணறுகள் அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்டன.
(b) சேரர்கள் காவேரி டெல்டா பகுதியை ஆட்சி செய்தனர். அவர்களின் தலைநகரம் உறையூர் ஆகும்.
(c) சோழர்களின் சின்னம் புலி ஆகும். அவர்கள் புலி உருவம் பொறித்த சதுர வடிவிலான செம்பு நாணயங்களை வெளியிட்டார்கள்.
(d) சங்க காலம் வெண்கலக் காலத்தில் இருந்து வேரூன்றத் தொடங்கியது.

அ) (a) மட்டும் சரி ஆ) (b) மட்டும் சரி
**இ) (a) மற்றும் (c) சரி** ஈ) (a), (c) மற்றும் (d) சரி

ஆதிச்சநல்லூர் அகழாய்வு மாதிரிகள் தற்பொழுது ________ அருங்காட்சியகத்தில் உள்ளன. (SCE/2025)

அ) லண்டன் **ஆ) பெர்லின்**
இ) திருநெல்வேலி ஈ) மதுரை

மாங்குளம் தமிழ்-பிராமி கல்வெட்டில் குறிப்பிட்டிருக்கும் பெயர்? (SCE/2025)

**அ) நெடுஞ்செழியன்** ஆ) செங்குட்டுவன்
இ) நெடுஞ்சேரலாதன் ஈ) கரிகாலன்

திருநாவுக்கரசர் "கல்வியில் கரையிலாத" எனக் குறிப்பிட்ட நகரம் (SCE/2025)

அ) மதுரை **ஆ) காஞ்சி**
இ) பூம்புகார் ஈ) தஞ்சை

கீழடியில் __________ எழுத்துப் பொறிப்புகள் கொண்ட பானை ஓடுக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. (CTND003/2024)

அ) தமிழ் - ஆயுத எழுத்து
ஆ) தமிழ் - மெய் எழுத்து
இ) தமிழ் - உயிர்மெய் எழுத்து
ஈ) தமிழ் - பிராமி எழுத்து

பண்டைய தமிழகத்தின் நிர்வாகப் பிரிவுகள் ஏறுவரிசையில் இவ்வாறு அமைந்திருந்தது. (CTND003/2024)

(1) ஊர்
(2) நாடு
(3) கூற்றம்
(4) மண்டலம்

அ) (3), (2), (1), (4)
ஆ) (4), (3), (2), (1)
இ) (1), (3), (2), (4)
ஈ) (1), (2), (3), (4)

__________ என்னும் தமிழ் இலக்கிய நூல் 'நடுகல்' நடுவதற்கான வழிமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கிறது. (AAOGS/2024)

அ) தொல்காப்பியம்
ஆ) எட்டுத்தொகை நூல்கள்
இ) பத்துப்பாட்டு
ஈ) பதினெண்கீழ்க்கணக்கு

பொருத்துக. (CAGS/2024)

a) குறிஞ்சி — 1. தூறையாடல்
b) பாலை — 2. களையெடுத்தல்
c) முல்லை — 3. காளை தழுவல்
d) மருதம் — 4. வேட்டையாடல்

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 2 | 1 |
| ஆ) | 4 | 1 | 3 | 2 |
| இ) | 4 | 2 | 1 | 3 |
| ஈ) | 1 | 2 | 3 | 4 |

தமிழ்நாட்டில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட பாறை ஓவியம் __________ யில் உள்ளது. (PCTS/2024)

அ) பெருமுக்கல்
ஆ) மல்லபாடி
இ) கீழ்வாலை
ஈ) செத்தவரை

ஆதிச்சநல்லூர் தாழிகள் புதைத்த இடத்தைக் கண்டுபிடித்தவர் யார்? (CAGS/2024)

அ) புரூஸ்ஃபூட்
ஆ) ஐகோர்
இ) சாகர்
ஈ) கன்னிங்ஹாம்

கீழடி தளம் __________ ஆண்டில் நிறுவப்பட்டது. (HSGS/2024)

அ) பிப்ரவரி 2016
ஆ) பிப்ரவரி 2017
இ) பிப்ரவரி 2018
ஈ) பிப்ரவரி 2019

பின்வருவனவற்றுள் சமண அறிஞர்களின் முக்கிய கற்றல் மையமாக இருந்த இடம் எது? (CCSE1P/2024)

அ) மதுரை
ஆ) திருச்சி
இ) தஞ்சாவூர்
ஈ) திருவாலங்காடு

மன்னர்களின் பட்டங்களைப் பொருத்துக (CCSE1P/2024)

(a) பாண்டியர் — 1. ஆதவன்
(b) சேரர் — 2. திதியன்
(c) சோழர் — 3. செழியன்
(d) ஆய் — 4. செம்பியன்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| அ) | 3 | 4 | 2 | 1 |
| ஆ) | 3 | 1 | 4 | 2 |
| இ) | 3 | 2 | 1 | 4 |
| ஈ) | 4 | 3 | 1 | 2 |

கண்ணகிக்கு __________ ஆல் கோயில் கட்டப்பட்டது. (CCSE1P/2024)

அ) கரிகாலன்
ஆ) செங்குட்டுவன்
இ) உக்ரபெருவழுதி
ஈ) நெடியோன்

உத்திரமேரூர் கல்வெட்டுகள் தெரிவிப்பவை (CCSE1P/2024)

(1) கிராம நிர்வாகம்
(2) எழுதப்பட்ட அரசியல் அமைப்பு
(3) முழுமையான தேர்தல் முறை
(4) பராந்தகனின் நிர்வாகம்

அ) (1) மட்டும்
ஆ) (1), (2), (3) மட்டும்
இ) (1), (2) மட்டும்
ஈ) மேற்கூறிய அனைத்தும்

அரிக்கமேடு தொல்லியல் ஆய்வுகளின் கூற்றுகளில் கீழ்கண்டவைகளில் சரியானது எது? (CCSE1P/2024)

1) அரிக்கமேடு தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது
2) இது ஒரு சோழர்களின் துறைமுகம்
3) இத்துறைமுகம் ரோம் நாட்டுடன் வாணிப உறவு கொண்டிருந்தது
4) அரிக்கமேடு துறைமுகம் காவேரிப்பட்டணம், அழகன்குளம் மற்றும் முசிறி துறைமுகங்களுடன் நெருங்கிய வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது

அ) (1), (2) சரியானது (3), (4) தவறானது
ஆ) (1), (2), (3) சரியானது (4) தவறானது
இ) (2), (3), (4) சரியானது (1) மட்டும் தவறானது
ஈ) (1), (3), (4) சரியானது (2) மட்டும் தவறானது

இந்நடுகல் கல்வெட்டு எவ்வாறு தமிழில் படித்துப் பொருள் கொள்ளப்பட்டுள்ளது? (CSGS/2024)
பேடுதீயன் அந்தவன் கூடல்ஊர் ஆகோள்

அ) ஆகோளில் மரணமடைந்த அந்தவனுக்கு பேடு தீய குலம் சார்ந்த கூடலூர் கல்
ஆ) கல்பேடு தீயன் அந்தவன் கூடல் ஊர் ஆகோள்
இ) கூடலூர் ஆகோளில் மரணமடைந்த பேடு தீய குலம் சார்ந்த அந்தவனுக்கு எடுக்கப்பட்ட கல்
ஈ) ஆகோள் அந்தவன் தீயன் கூடல் ஊர் கல்பேடு

தொல்லியல் அகழ்வாய்வு நடந்துள்ள கீழடி அமைந்துள்ள மாவட்டம் __________ (CSGS/2024)

அ) திருநெல்வேலி
ஆ) புதுக்கோட்டை
இ) சிவகங்கை
ஈ) மதுரை

கூற்று (A) : இரும்பில் கருவிகள் செய்தோர் குறித்து சங்க இலக்கியத்தில் குறிப்புகள் உள்ளன.

காரணம் (R) : கொடுமணலிலும், குட்டூரிலும் இரும்பு உருக்கு உலைகள் அகழாய்வில்

வெளிப்பட்டுள்ளன. (CSGS/2024)

கூற்று (A) சரி, ஆனால் காரணம் (R) தவறு

கூற்று (A), காரணம் (R) இரண்டும் சரி, காரணம் (R) மற்றும் கூற்றை (A) சரியாக மெய்ப்பிக்கிறது.

கூற்று (A) தவறு, காரணம் (R) சரி

கூற்று (A), காரணம் (R) இரண்டும் சரி, ஆனால் காரணம் (R) கூற்றை (A) சரியாக மெய்ப்பிக்கவில்லை.

...ல்லை நிலம் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது ...ரியானது? (CSGS/2024)

1. முல்லை நில மக்கள் ஆநிரைகளை வளர்க்கும் தொழில் உடையவர்கள்.
2. இந்திரனை கடவுளாக வணங்குவர்.
3. முல்லை நிலம் என்பது காடும் காடு சார்ந்த நிலமாகும்.

அ) 1 மற்றும் 2 மட்டும் ஆ) 2 மற்றும் 3 மட்டும்

இ) 1 மற்றும் 3 மட்டும் ஈ) 2 மட்டும்

...ரோம் நாட்டைச் சேர்ந்த மூத்த பிளினி தன்னுடைய இயற்கை வரலாறு எனும் நூலில் ________ இந்தியாவின் முதல் பேரங்காடி எனக் குறிப்பிட்டுள்ளார். (CCSE4GT/2024)

அ) காவிரிப்பூம்பட்டினம் ஆ) நாகப்பட்டினம்

இ) முசிறி ஈ) கொற்கை

அசோகர் கல்வெட்டில் குறிப்பிடப்படும் "சத்யபுத்ரர்" (CCSE4GT/2024)

அ) அதியமான் ஆ) கரிகாலன்

இ) பாரி ஈ) நெடுஞ்சேரலாதன்

பின்வரும் மானியங்களை காலவரிசைப்படி வரிசைப்படுத்துக. (CSGS/2024)

1. வேள்விக்குடி மானியம்
2. சிவகாசி மானியம்
3. சின்னமனூர் மானியம்
4. ஸ்ரீவார மங்கலம் மானியம்

அ) 4, 2, 3, 1 ஆ) 1, 4, 3, 2

இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இசை ஸ்வரங்கள் அடங்கிய பிராமி கல்வெட்டு எங்கு கண்டுபிடிக்கப்பட்டது? (MIGS/2023)

அ) அரச்சலூர் ஆ) அரிக்கமேடு

இ) ஆதிச்சநல்லூர் ஈ) வனகிரி

ஆதிச்சநல்லூர் தொல்பொருள் ஆய்வுகள் குறித்த கூற்றுகளில் சரியான கூற்று எது? (JAGS/2023)

1) ஆதிச்சநல்லூர் திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்த ஊர் ஆகும்.
2) ராபர்ட் புரூஸ் ஃபுட் என்பவர் ஆதிச்சநல்லூரில் தொல்பொருள் ஆய்வுகள் நடத்தினார்.
3) ஆதிச்சநல்லூர் தொல்பொருள் தாதுக்களில் இரும்பாலாகிய வேலும் வெண்கலத்தாலாகிய சேவற் கொடியும் காணக் கிடைக்கின்றது.
4) ஆதிச்சநல்லூரில் பொன்னால் ஆன வாய் மூடிகள் காணக் கிடைக்கின்றன

அ) 1 மட்டும் ஆ) 2 மட்டும்

இ) 1, 2, 3 மட்டும் ஈ) 1, 2, 3, 4

இலக்கிய சான்றுகளுடன் தொல்லியல் துறையால் உறுதி செய்யப்பட்ட முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த 'ரோமானிய தொழிற்சாலை' பாண்டிச்சேரியின் அருகில் இருந்தது உறுதி செய்யப்பட்டது. அவ்விடம் எங்கே அமையப் பெற்றுள்ளது? (RAGS/2023)

அ) அரிக்கமேடு ஆ) பூம்புகார்

இ) மகாபலிபுரம் ஈ) கொடுமணல்

புகழூர் கல்வெட்டு எந்த இராஜ்ஜியத்துடன் தொடர்புடையது? (RAGS/2023)

அ) சேரர்கள் ஆ) சோழார்கள்

இ) பாண்டியர்கள் ஈ) பல்லவர்கள்

புதிய கற்கால பண்பாடு தமிழ்நாட்டில் பரவியிருந்த இடம் (ATOGS/2023)

அ) கன்னியாகுமரி ஆ) பையம்பள்ளி

இ) கொடுமணல் ஈ) ஆதிச்சநல்லூர்

கூற்று [A] : பாலை நிலமானது குடியிருக்கத்தக்க நிலப்பரப்பு ஆகும்.

காரணம் [R] : பாலை நிலத்து மக்கள் விலங்குகளை வளர்த்தனர். (RAGS/2023)

அ) [A] மற்றும் [R] சரி

ஆ) [A] சரி ஆனால் [R] தவறு

இ) [A] தவறு ஆனால் [R] சரி

ஈ) [A] மற்றும் [R] சரி, ஆனால் [R], [A] -விற்கான சரியான விளக்கம் அல்ல

எந்தப் புதைபொருளாராய்ச்சி, தமிழகத்திற்கும் ரோமாபுரிக்கும் இடையிட்ட கடல் வாணிகத்தின் விரிவையும் வளத்தையும் பெரிதும் விளக்கிக் காட்டுகின்றது? (GSGS/2023)

அ) கீழடி ஆ) அரிக்கமேடு

இ) மௌரியக்குடி ஈ) செங்கல்பட்டு

சரியான கூற்றை தேர்ந்தெடுக்கவும் : (CEGS/2023)

(i) புதுக்கோட்டை மாவட்டத்தின் பொற்பனைக்கோட்டை என்ற இடத்தில் சங்ககால நடுகற்கள் காணப்படுகின்றன.

(ii) அரிக்கமேடு என்ற இடம் சங்க காலத் துறைமுகப்பட்டினம் ஆகும்.

(iii) இந்திய கருவூலம் மற்றும் புதையல் சட்டம் 1878 இல் வகுக்கப்பட்டுள்ளது.

(iv) ரோமானிய நாணயங்கள் தென்னிந்தியாவில் திருநெல்வேலி மண்டலங்களில் செறிந்து காணப்படுகின்றன.

அ) (i), (ii) மற்றும் (iv) சரி

ஆ) (i), (ii) மற்றும் (iii) சரி

இ) (ii), (iii) சரி

ஈ) (ii) மற்றும் (iv) சரி

பின்வருபவர்களுள் அரிக்கமேடு அகழ்வாய்வினை மேற்கொண்டவர் யார்? (LEGS/2023)

அ) K.ராஜன் ஆ) மார்டிமர் வீலர்

இ) S.R. ராவ் ஈ) அலெக்ஸ்சாண்டர் ரியோ

கீழ்க்கண்டவற்றில் எந்த இணை தவறானது? (DMGS/2023)

(i) இளஞ்சேட்சென்னி - செங்குட்டுவன்
(ii) மாங்குளம் - தமிழ் பிராமி கல்வெட்டு
(iii) உருத்திரங்கண்ணனார் - பட்டினப்பாலை
(iv) வேளிர்குல சிற்றரசர் - திதியன்

அ) (i) மட்டும்
ஆ) (ii) மட்டும்
இ) (iii) மட்டும்
ஈ) (iv) மட்டும்

வரிசை I ல் உள்ளதை II ம் வரிசையுடன் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் (APPGS/2023)

| வரிசை I | வரிசை II |
| --- | --- |
| (a) குறிஞ்சி | 1. இந்திரன் |
| (b) முல்லை | 2. முருகன் |
| (c) மருதம் | 3. திருமால் |
| (d) நெய்தல் | 4. வருணன் |

| | a) | b) | c) | d) |
| --- | --- | --- | --- | --- |
| அ) | 2 | 3 | 1 | 4 |
| ஆ) | 3 | 2 | 1 | 4 |
| இ) | 2 | 1 | 3 | 4 |
| ஈ) | 3 | 1 | 2 | 4 |

வரிசை I-ல் காணும் தொல்லியல் ஆய்வு இடங்களை வரிசை II-ல் உள்ள அவற்றின் மாவட்டங்களுடன் பொருத்துக. (DOGS/2023)

| வரிசை - I | வரிசை - II |
| --- | --- |
| (a) கொடுமணல் | (1) தூத்துக்குடி |
| (b) பொருந்தல் | (2) விழுப்புரம் |
| (c) திருவக்கரை | (3) ஈரோடு |
| (d) ஆதிச்சநல்லூர் | (4) திண்டுக்கல் |

| | (a) | (b) | (c) | (d) |
| --- | --- | --- | --- | --- |
| அ) | (1) | (3) | (2) | (4) |
| ஆ) | (3) | (4) | (2) | (1) |
| இ) | (3) | (4) | (1) | (2) |
| ஈ) | (1) | (2) | (4) | (3) |

கீழ்க்காணும் பத்தியைக் கவனமாக படித்து, சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும். (DOGS/2023)

இந்த ஊர் திருநெல்வேலி மாவட்டத்தில் நம்பி ஆற்றின் இடது கரையில் அமைந்துள்ளது. நம்பி ஆற்றங்கரையில் இரும்புக்கால கலாச்சாரத்தின் வேர்களை தேடுவதற்காக ஒரு அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இது பழங்கால பொருட்களுக்கு பெயர் பெற்ற ஒரு செழிப்பான தொல்லியல் இடம் இவ்விடத்தின் பெயர்

அ) துலுக்கர்பட்டி
ஆ) கீழடி
இ) வெம்பக்கோட்டை
ஈ) பெரம்பலூர்

எந்தத் தொல்பொருள் ஆராய்சியாளர் பாண்டியர்களின் முத்துச் சந்தையைக் முதலில் கண்டுபிடித்தார்? (DOGS/2023)

அ) நாகசாமி
ஆ) கால்டுவெல்
இ) கே.வி. ராமன்
ஈ) எஸ். பரணவிதான

வலியுறுத்தல் மற்றும் காரணம் வகை (DOGS/2023)

வலியுறுத்தல் [A] தமிழக ஆட்சியாளர்கள் தமிழ் மற்றும் தமிழ் புலவர்களை அவர்கள் ஆதரவளித்தனர்.

காரணம் [R] அவையில் மன்றம், அவை, அம்பலம் மற்றும் மன்று போன்ற சொற்கள் அவையில் பயன்படுத்தப்பட்டது

அ) [A] என்பது உண்மை ஆனால் [R] என்பது தவறு
ஆ) [A] மற்றும் [R] இவை இரண்டும் உண்மை மற்றும் [R] என்பது [A] யின் சரியான விளக்கம்
இ) [A] என்பது தவறு [R] என்பது உண்மை
ஈ) [A] மற்றும் [R] இவை இரண்டும் உண்மையானது ஆனால் [R] என்பது [A] யின் சரியான விளக்கம் அல்ல.

தமிழ்நாட்டில் பல்லாவரத்தில் முதன்முதலில் பழைய கற்காலக் கருவியை கண்டுபிடித்தவர் (ACGS/2023)

அ) இராபர்ட் புரூஸ் ஃபூட்
ஆ) அலெக்சாண்டர் பிளெம்மிங்
இ) ஜோசப் ரிஸ்ட்விஷ்
ஈ) ஹென்றி ஜியோகியன்

தமிழகத்தில் எங்கு வழவழப்பாக்கப்பட்ட கற்கருவிகள் பெருமளவில் கிடைத்தன? (ACGS/2023)

அ) பையம்பள்ளி
ஆ) புதுக்கோட்டை
இ) திருநெல்வேலி
ஈ) திருவண்ணாமலை

கீழ்க்குறிப்பிடப்படுபவற்றில் பழைய கற்காலத்தில் வாழ்ந்த இடம் எது? (VSGS/2023)

அ) சேலம்
ஆ) மதுரை
இ) வல்லம்
ஈ) பல்லாவரம்

குடுமியான்மலை கல்வெட்டு __________ பற்றி விளக்குகின்றது

அ) இசை
ஆ) நாடகம்
இ) கிராம ஆட்சி முறை
ஈ) நடனம்

கீழ்க்கண்டவற்றில் எது (எவை) பொருந்தவில்லை (BEGS/2023)

i. பெருங்கற்கால புதையல் - சித்தன்னவாசல்
ii. தாழி புதையல் - மல்லப்பாடி
iii. கண்ணாடி தொழிற்சாலை - காரைக்காடு
iv. இசைக் கல்வெட்டு - அரச்சலூர்

அ) (i) மட்டும்
ஆ) (ii) மற்றும் (iv) மட்டும்
இ) (iii) மற்றும் (iv) மட்டும்
ஈ) (iv) மட்டும்

பின்வரும் எந்த கல்வெட்டில், தமிழ் கூட்டமைப்பின் சீர்குலைவு பற்றி குறிப்பிடுகிறது? (BEGS/2023)

அ) அலகாபாத் தூண் கல்வெட்டு
ஆ) காரவேலாவின் ஹதிகும்பா கல்வெட்டு
இ) ஜீனாகத் கல்வெட்டு
ஈ) மெஹ்ரௌலி தூண் கல்வெட்டு

பின்வருவனவற்றுள் சரியானதை பொருத்துக : (BEGS/2023)

1) பெரும்பாலை - தருமபுரி மாவட்டம்
2) மயிலாடும்பாறை - தூத்துக்குடி மாவட்டம்
3) சிவகளை - கிருஷ்ணகிரி மாவட்டம்
4) துலுக்கார்பட்டி - திருநெல்வேலி மாவட்டம்

அ) 1 மற்றும் 4 சரி
ஆ) 2 மற்றும் 3 சரி
இ) 1 மற்றும் 2 சரி
ஈ) 3 மற்றும் 4 சரி

ஓவாமலை தொல்லியல் இடம் எங்கு அமைந்துள்ளது? (BEGS/2023)

அ) மதுரை
ஆ) திருநெல்வேலி
இ) சிவகங்கை
ஈ) தஞ்சாவூர்

அத்திரப்பாக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கற்கருவிகள் ________ காலத்தை சார்ந்தவை (BEGS/2023)

அ) பழைய கற்காலம்
ஆ) புதிய கற்காலம்
இ) இடை பழங்கற்காலம்
ஈ) பெருங் கற்காலம்

பழங்கற்கால கருவிகள் என்பது (BEGS/2023)

1. ஈட்டிகள்
2. கூர்மையான முனைகள் கொண்ட வட்டமான கற்கள்
3. இருபுறமும் கூர்மையான கத்திகள்
4. முட்டை வடிவில் கூர்மையான கருவிகள்

அ) 1 மட்டும்
ஆ) 2 மட்டும்
இ) 1, 2 மற்றும் 3 மட்டும்
ஈ) 1, 2, 3 மற்றும் 4 மட்டும்

கீழ்கண்டவைகளில் தமிழ் மன்னர்களின் கூட்டமைப்பை தெரிவிக்கும் கல்வெட்டு எது? (BEGS/2023)

அ) ஹதிகும்பா கல்வெட்டு
ஆ) வேள்விக்குடி பட்டய செப்பேடு
இ) திருக்கோவிலூர் கல்வெட்டு
ஈ) சின்னமனூர் பட்டய செப்பேடு

ஆலங்குளம் அகழ்வாராய்ச்சி இடம் ________ மாவட்டத்தில் அமைந்துள்ளது. (BEGS/2023)

அ) இராமநாதபுரம்
ஆ) மதுரை
இ) திருநெல்வேலி
ஈ) தஞ்சாவூர்

தொல்பொருள் ஆராய்ச்சி இடங்களைப் பொருத்துக (BEGS/2023)

| | |
|---|---|
| a) ஆதிச்சநல்லூர் | 1. சிவகங்கை |
| b) மாங்குளம் | 2. தூத்துக்குடி |
| c) கொடுமணல் | 3. மதுரை |
| d) கீழடி | 4. ஈரோடு |

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| அ) | 2 | 3 | 4 | 1 |
| ஆ) | 3 | 4 | 2 | 1 |
| இ) | 4 | 3 | 1 | 2 |
| ஈ) | 2 | 3 | 1 | 4 |

சோழர்களை பற்றி குறிக்கும் முதல் கல்வெட்டு எது? (BEGS/2023)

அ) அசோகரின் சிறிய பாறைக் கல்வெட்டுகள்
ஆ) அசோகரின் 12 வது பாறைக் கல்வெட்டு
இ) அசோகரின் 13 வது பாறைக் கல்வெட்டு
ஈ) அசோகரின் 14 வது பாறைக் கல்வெட்டு

குடுமியான்மலை கல்வெட்டில் காணப்படும் 'பரிவாதனி' என்ற சொல் எதைக் குறிப்பிடுகின்றது? (HOGS/2023)

அ) ஒரு ஆசிரியர்
ஆ) ஒரு ராகம்
இ) வீணை
ஈ) மிருதங்கம்

அசோகரின் எந்த முக்கிய பாறை ஆணையில் சேர, சோழ மற்றும் பாண்டிய மன்னர்களை பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது? (HOGS/2023)

அ) 13-வது பாறை ஆணை
ஆ) 1-வது பாறை ஆணை
இ) 6-வது பாறை ஆணை
ஈ) 9-வது பாறை ஆணை

________ கல்வெட்டு சோழர்களின் கிராம நிர்வாக முறையை பற்றி குறிப்பிடுகிறது (HOGS/2023)

அ) உத்திரமேரூர்
ஆ) பட்டிபுரோலு
இ) மீனாட்சிபுரம்
ஈ) திருவிசலூர்

தமிழகத்தில் எங்கு காலத்தால் முந்திய நுண்கற்கால நினைவுச் சின்னங்கள் கிடைத்தன? (HOGS/2023)

அ) செங்கல்பட்டு
ஆ) தஞ்சாவூர்
இ) திருவண்ணாமலை
ஈ) தூத்துக்குடி

நடுகல் வழிபாட்டின் ஆறு படிநிலைகளை குறிப்பிடும் நூல் எது? (HOGS/2023)

அ) சிலப்பதிகாரம்
ஆ) மணிமேகலை
இ) திருக்குறள்
ஈ) தொல்காப்பியம்

அல்விளை பிரமாண இசைவு திட்டு என்பது (HOGS/2023)

அ) ஏற்றுமதி வரி
ஆ) இறக்குமதி வரி
இ) அடிமை வரி
ஈ) அடிமை விற்பனை விலை ஆவணம்

பின்வருவனவற்றில் புதிய கற்காலம் குறித்து தவறான கூற்று எது ? (IFGS/2023)

i. புதிய கற்கால மனிதர்கள் வேட்டையாடுதல், மீன்பிடித்தல் கால்நடை வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டனர்
ii. புதிய கற்கால மனிதர்களின் வீடுகள் சதுர வடிவிலும், கூரை கூம்பு வடிவிலும் அமைந்திருந்தது
iii. புதிய கற்கால பெண்கள் மணிகளை ஆபரணங்களாக அணிந்திருந்தனர்
iv. பானை வனைதல் புதிய கற்கால மனிதர்களின் கைத்தொழிலாக இருந்தது

அ) (i) சரி (ii), (iii), (iv) தவறானது
ஆ) (i), (ii) சரி (iii), (iv) தவறானது
இ) (i), (ii), (iii) சரியானது (iv) மட்டும் தவறானது
ஈ) (i), (iii), (iv) மட்டும் சரியானது (ii) தவறானது

ரோமானிய தொழிற்சாலை கண்டெடுக்கப்பட்ட இடம் (IFGS/2023)

அ) அரிக்கமேடு
ஆ) ஆதிச்சநல்லூர்
இ) கீழடி
ஈ) பூம்புகார்

பின்வரும் துறைமுகங்களில் சங்ககால துறைமுகமில்லாத நகரம் எது ? (SFGS/2023)

அ) புகார்
ஆ) கொற்கை
இ) தொண்டி
ஈ) உறையூர்

எந்த இடத்தில் சங்ககால சோழர்களின் காசுகள் தொல்லியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டன? (CSGS/2023)

அ) அரிக்கமேடு
ஆ) கரூர்
இ) தஞ்சாவூர்
ஈ) உறையூர்

கரிகால் சோழன் காவிரியின் குறுக்கே கட்டிய அணையின் பெயர் என்ன? (CSGS/2023)
அ) வைகை அணை
ஆ) பாபநாசம் அணை
**இ) கல்லணை**
ஈ) சாத்தனூர் அணை

கல்நிறுத்தி வைக்கும் மரபினை தமிழகத்தில் காணப்படும் இடம் (CSGS/2023)
அ) கொடுமணல்
ஆ) காஞ்சிபுரம்
இ) ஆதிச்சநல்லூர்
**ஈ) கீழடி**

தமிழ்நாட்டில் நகரமயமாதல் ________ நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது என்பதை கீழடி அகழாய்வு கூறுகின்றது. (CCS3T/2023)
அ) 3 - ம் நூற்றாண்டு பொ.ஆ.மு.
ஆ) 4 - ம் நூற்றாண்டு பொ.ஆ.மு.
இ) 5 - ம் நூற்றாண்டு பொ.ஆ.மு.
**ஈ) 6 - ம் நூற்றாண்டு பொ.ஆ.மு.**

தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட சோழர்களின் ஆரம்பகால செப்புத்தகடு கல்வெட்டுகள் (APPGS/2023)
(a) திருவாலங்காடு செப்புப் பட்டயம்
(b) வேள்விக்குடி செப்புப் பட்டயம்
(c) வேலூர் பாளையம் பட்டயம்
(d) சின்னமனூர் செப்புப் பட்டயம்

**அ) (a) மட்டும்**
ஆ) (b) மற்றும் (c) மட்டும்
இ) (a) மற்றும் (c) மட்டும்
ஈ) (c) மற்றும் (d) மட்டும்

பண்டைய காலத் தமிழர்களின் வணிக (தொடர்பு நடவடிக்கை) பற்றி பின்வரும் கூற்றில் எது உண்மையானவை? (JSO/2023)
(i) காவிரிப்பூம்பட்டினம், அனுராதபுரம் என்றும் அழைக்கப்பட்டது.
(ii) அல் அங்காடி மற்றும் நாள் அங்காடி என்று இரண்டு வகை சந்தை இருந்து வந்தது.
(iii) பழங்கால தமிழர்களோடு யவனர்கள் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

அ) (ii) மட்டும்
**ஆ) (ii) மற்றும் (iii) மட்டும்**
இ) (i) மற்றும் (ii) மட்டும்
ஈ) (i) மற்றும் (iii) மட்டும்

ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வை முதன்முதலில் மேற்கொண்டவர் (GTGS/2022)
அ) ஜான் மார்ஷல்
**ஆ) ஆன்ட்ரு ஜாகோர்**
இ) புரூஸ் பூட்
ஈ) கன்னிங் ஹாம்

சங்க கால சமுதாயத்தில் கூறப்பட்டுள்ள 'திணை' எனும் நிலப்பரப்புப் பிரிவுகளைச் சரியாக இணைப்படுத்துக. (FAGS/2022)
a) குறிஞ்சி — 1. கடலோரப் பகுதி
b) முல்லை — 2. விவசாயப் பகுதி
c) மருதம் — 3. பாலைவனப் பகுதி
d) நெய்தல் — 4. மலைப் பகுதிகள்
e) பாலை — 5. காடும் காடு சார்ந்த மேய்சல் பகுதி

| | (a) | (b) | (c) | (d) | (e) |
|---|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 | 5 |
| ஆ) | 2 | 3 | 4 | 5 | 1 |
| இ) | 3 | 5 | 4 | 1 | 2 |
| **ஈ)** | **4** | **5** | **2** | **1** | **3** |

கீழ்கண்ட வாக்கியங்களில் சங்க மருவிய காலத்தின் சரியான கூற்று எது? (CCS4T/2022)
i. பதினெட்டு நூல்களை உள்ளடக்கிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பாலும் ஒழுக்க நெறிமுறைகளைப் பற்றி கூறுகிறது.
ii. அவற்றுள் திருக்குறளும், நாலடியாரும் முதன்மையானதாகும்.
iii. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் பண்பாடு மற்றும் சமயத்தை பற்றி கூறுகின்றன.

அ) (i) மட்டும் சரி
ஆ) (ii) மட்டும் சரி
**இ) (i), (ii) மட்டும் சரி**
ஈ) (i), (iii) மட்டும் சரி

சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்து வடிவத்தின் பெயர் யாது? (REGS/2022)
அ) கரோஷ்தி
ஆ) தேவநாகரி
**இ) தமிழ்ப்-பிராமி**
ஈ) கிரந்தம்

கீழ்வருவனவற்றுள் எது மக்களின் வாழ்வையும், பொருள் பயன்பாட்டுப் பண்பாட்டையும் குறித்து விளக்குகிறது? (FAGS/2022)
**அ) இனத் தொல்லியல்**
ஆ) வரலாற்றுத் தொல்லியல்
இ) பொருளாதாரத் தொல்லியல்
ஈ) வரலாற்றுக் முந்தைய தொல்லியல்

முசிறியை "இந்தியாவின் முதல் பேரங்காடி" என்று கூறும் வெளிநாட்டு நூல் ________ ஆகும். (SDGS1/2022)
**அ) இயற்கை வரலாறு**
ஆ) புவியியல்
இ) எரித்திரியன் கடலின் பெரிப்ளஸ்
ஈ) புத்த பதிப்புகள் (நாட்குறி புத்தகம்)

சரியான இணையைத் தேர்வு செய்க : (SDGS1/2022)
**அ) கண்ணாடி மணிகள் - பொருந்தல்**
ஆ) உடைந்த சங்கு வளையல் - கீழடி
இ) உருக்கு உலை - கொடுமணல்
ஈ) ஒரே மரத்தாலான படகின் பகுதி - புதுச்சேரியின் ஆரோவில்

பொருத்துக: (CCS1P/2022)

| திணை | கடவுள் |
|---|---|
| a) குறிஞ்சி | 1. காளி |
| b) முல்லை | 2. முருகன் |
| c) மருதம் | 3. இந்திரன் |
| d) பாலை | 4. திருமால் |

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| அ) | 3 | 4 | 1 | 2 |
| ஆ) | 1 | 3 | 4 | 2 |
| **இ)** | **2** | **4** | **3** | **1** |
| ஈ) | 4 | 2 | 3 | 1 |

பின்வரும் பட்டங்களில் பாண்டிய மன்னர்களுடன் தொடர்புடையது எது? (CCS1P/2022)
(i) மீனவர்
(ii) வில்லவர்
(iii) குடவர்
(iv) பஞ்சவர்

அ) (i) மட்டும்
ஆ) (ii) மட்டும்
இ) (i) மற்றும் (iv) மட்டும்
ஈ) (ii) மற்றும் (iii) மட்டும்

அகழ்வு (தொல்பொருள்) ஆராய்ச்சியின் இடம் மற்றும் அவை தரும் தகவல்களோடு சரியானவற்றைப் பொருத்துக. (CCS1P/2022)

| | | | |
|---|---|---|---|
| a) | தஞ்சாவூர் அகழ்வாராய்ச்சி | 1. | ரோமானிய மட்பாண்டங்கள் |
| b) | கீழையூர் அகழ்வாராய்ச்சி | 2. | புத்த மத மையம் |
| c) | திருக்காம்புலியூர் அகழ்வாராய்ச்சி | 3. | ரோமானியருக்கும் தமிழர்களுக்கும் இடையே உள்ள வணிக தொடர்பு |
| d) | உறையூர் அகழ்வாராய்ச்சி | 4. | காவேரியின் கலாச்சாரம் |

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 4 | 3 |
| ஆ) | 3 | 4 | 2 | 1 |
| இ) | 4 | 3 | 1 | 2 |
| ஈ) | 2 | 3 | 1 | 4 |

பின்வரும் கல்வெட்டுகளில் எந்தக் கல்வெட்டில் 'மதுரா' என்னும் பழமையான சொல் குறிப்பிடப்பட்டுள்ளது? (CCS1P/2022)
(a) சித்தர்மலை கல்வெட்டு
(b) அழகர்மலை கல்வெட்டு
(c) மாமண்டூர் கல்வெட்டு
(d) பாத்திபுரலு கல்வெட்டு

அ) (a) மற்றும் (b) மட்டும்
ஆ) (a) மற்றும் (c) மட்டும்
இ) (b) மற்றும் (d) மட்டும்
ஈ) (c) மற்றும் (d) மட்டும்

சரியான விடையைத் தேர்ந்தெடுக்க : (CCS1P/2022)
கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தில் சோழர்கள் பற்றிய சரியான வாக்கியத்தைக் கூறுக.
i. அசோக கல்வெட்டில் சோழர்கள் பற்றி முதல் முறையாக குறிப்பிடப்பட்டுள்ளது.
ii. தமிழகத்தில் சுதந்திர அரசாக அவர்கள் விளங்கினர்.
iii. கன்னியாகுமரி கல்வெட்டுகள் மற்றும் அன்பில் சாசனமும் சோழர்கள் பற்றிய தகவல்களைக் கூறுகிறது.

அ) (i) மட்டும் சரியானது
ஆ) (i) மற்றும் (ii) மட்டும் சரியானது
இ) (i), (ii) மற்றும் (iii) சரியானது
ஈ) (i) மற்றும் (iii) சரியானது

கூற்று [A] : தமிழர்கள் ரோமானியர்களுடன் வாணிபத்தொடர்பு கொண்டிருந்தனர்.
காரணம் [R] : ரோமன் நாட்டு பானை ஓடுகளும் தங்க நாணயங்களும் அரிக்கமேட்டில் நடந்த அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. (AOGS/2022)

அ) [A] மற்றும் [R] இரண்டும் சரி. மேலும் [R] என்பது [A] விற்கான சரியான விளக்கமாகும்
ஆ) [A] சரி ஆனால் [R] தவறு
இ) [A] மற்றும் [R] இரண்டும் தவறு
ஈ) [A] தவறு ஆனால் [R] சரி

சங்க காலம் என்பது ________ உலோக காலத்தோடு தொடர்புடையது. (EO4GS/2022)
அ) செம்பு ஆ) இரும்பு
இ) தங்கம் ஈ) வெள்ளி

சங்க காலத்தில் விவசாய நிலங்களை உள்ளிட்ட நிலப்பரப்பு ______ என அழைக்கப்பட்டது (EO3GS/2022)
அ) குறிஞ்சி ஆ) முல்லை
இ) மருதம் ஈ) நெய்தல்

வருணன் என்ற கடவுளை வணங்கியவர்கள் (EO3GS/2022)
அ) குறிஞ்சி நில மக்கள்
ஆ) முல்லை நில மக்கள்
இ) நெய்தல் நில மக்கள்
ஈ) மருதம் நில மக்கள்

கரிகாலனுக்கு திருப்பு முனையாக இருந்த போர் (PSGS/2022)
அ) வெண்ணி ஆ) மகதம்
இ) அவந்தி ஈ) வஜ்ரா

தமிழக மக்கள் 6- ஆம் நூற்றாண்டியிலிருந்தே எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்பதை கூறும் தமிழ் - பிரமி எழுத்துப் பொறிப்புகள் ________ இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. (EO4GS/2022)
அ) கீழடி ஆ) கொடுமணல்
இ) ஆலங்குளம் ஈ) உறையூர்

இந்தியர்களுக்கும் ரோமானியர்களுக்கும் வியாபார தொடர்பு இருந்தது என்று உறுதி கூறிய அரிக்கமேட்டில் கண்டுப்பிடிக்கப்பட்ட நாணயங்கள் ________ காலத்தில் வெளியிடப்பட்டன. (PSGS/2022)
அ) கோபர்நிகஸ் ஆ) ஜூலியஸ்
இ) அகஸ்டஸ் ஈ) ஜஸ்டினியன்

i. இந்த இடம் தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது
ii. தாழிகள் புதைக்கப்பட்ட களம் ஏக்கர் பரப்பளவில் பரவி காணப்படுகிறது.

மேற்கூறிய கூற்றுகள் எந்த தொல்பொருள் தளத்தைப் பற்றி விவரிக்கிறது? (DPGS/2022)
அ) ஆதிச்சநல்லூர் ஆ) அரிக்கமேடு
இ) கீழவளவு ஈ) கழுகுமலை

பொருந்தாததைக் கண்டுபிடி. (CCS4T/2022)

அ) இளஞ்சேட்சென்னி
ஆ) கோச்செங்கணான்
**இ) பெருஞ்சேரல் இரும்பொறை**
ஈ) பெருநற்கிள்ளி

அகழ்வாராய்ச்சி இடங்களை அதன் மாவட்டத்துடன் பொருத்துக. (CCS4T/2022)

| அகழ்வாராய்ச்சி இடங்கள் | மாவட்டம் |
|---|---|
| a) கீழடி | 1. தூத்துக்குடி |
| b) கொற்கை | 2. அரியலூர் |
| c) கங்கை கொண்ட சோழபுரம் | 3. தஞ்சாவூர் |
| d) குறும்பன்மேடு | 4. சிவகங்கை |

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 2 | 1 |
| ஆ) | 3 | 2 | 1 | 4 |
| **இ)** | **4** | **1** | **2** | **3** |
| ஈ) | 1 | 4 | 3 | 2 |

தமிழகத்தில் எவ்விடத்தில் ரோமானிய குடியரசு காசுகள் கிடைத்தன? (GSTP/2022)
அ) சென்னை **ஆ) கரூர்**
இ) மதுரை ஈ) தஞ்சாவூர்

மருத குலத்தில் வாழும் மக்கள் (GSTP/2022)
அ) குறவர் **ஆ) உழவர்**
இ) இடையர் ஈ) ஆயர்

எந்த அகழ்வாராய்ச்சி பகுதியில் சர்.மோர்டிமர் வீலர் அறிவியல் மற்றும் மண் அடுக்கு முறையைப் பயன்படுத்தினார்? (CCS2E/2022)
அ) பல்லாவரம் ஆ) அத்திரம்பாக்கம்
**இ) அரிக்கமேடு** ஈ) காயல்

சங்ககால சேரர்களின் தலைநகரம் (CAGS/2022)
அ) காஞ்சி ஆ) முசிறி
இ) வெண்ணி **ஈ) வஞ்சி**

கரிகாற் சோழனின் இயற்பெயர் (CAGS/2022)
அ) கரிகாலன் ஆ) அருண்மொழி
**இ) திருமாவளவன்** ஈ) சுந்தரர்

கீழ்காணும் கல்வெட்டுகளில் தமிழக அரசர்களின் கூட்டணி பற்றி குறிப்பிடுவது எது? (EO1GS/2022)
அ) உத்திரமேரூர் கல்வெட்டு
**ஆ) ஹதிகும்பா கல்வெட்டு**
இ) அசோகரின் கல்வெட்டு
ஈ) திருமுக்கூடல் கல்வெட்டு

இடை பழங்கற்காலம் பற்றிய பின்வரும் சொற்றொடர்களை கவனிக்க. பின் சரியான பதில்களை தேர்ந்தெடுத்து எழுதுக. : (CYGS/2022)
(i) கருவிகள் அளவில் சிறியன.
(ii) அதிராம்பாக்கம், குடியம், வடமதுரை ஆகிய இடங்களில் நடந்த அகழ்வராய்ச்சியில் கிடைத்துள்ளன.
(iii) முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன.
(iv) உணவுப்பயிர்கள் பயிரிட்டனர்.

**அ) (i) மற்றும் (ii) சரி** ஆ) (ii) மற்றும் (iii) சரி
இ) (iii) மற்றும் (iv) சரி ஈ) (i) மற்றும் (iv) சரி

வரலாற்றுக்கு முந்தைய எந்த காலக்கட்டத்தில் சுடுமண் உருவக் கலை வழக்கத்திற்கு வந்தது? (AFGS/2022)
அ) செம்பு காலம் ஆ) பெருங்கற்காலம்
**இ) புதிய கற்காலம்** ஈ) இரும்புக் காலம்

பொருத்துக : (RAGS/2022)

| | |
|---|---|
| (a) மன்றம் | 1. பொது இடம் |
| (b) சப்தாங்கா | 2. நிர்வாக குழு |
| (c) எண்பேராயம் | 3. கூடுகை நடத்தும் இடம் |
| (d) பொதியில் | 4. ஏழு பிரிவுகள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| **அ)** | **3** | **4** | **2** | **1** |
| ஆ) | 3 | 2 | 1 | 4 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 4 | 2 | 1 | 3 |

ரோமானிய தொழிற்சாலையை மார்டிமர் வீலர் கண்டுபிடித்த இடம் (RAGS/2022)
**அ) ஆதிச்சநல்லூர்** ஆ) அரிக்கமேடு
இ) களியூர் ஈ) காஞ்சி

அரிக்கமேடு அமைந்துள்ள இடம் (CSGS/2022)
அ) திருநெல்வேலி ஆ) திண்டுக்கல்
**இ) பாண்டிச்சேரி** ஈ) கோவா

சங்க கால நிலங்களுடன் தொடர்புடைய தெய்வங்களை சரியாக பொருத்துக (ARGS/2022)

| | |
|---|---|
| (a) மருதம் | 1. வருணன் |
| (b) நெய்தல் | 2. இந்திரன் |
| (c) பாலை | 3. மாயோன் |
| (d) முல்லை | 4. கொற்றவை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| **அ)** | **2** | **1** | **4** | **3** |
| ஆ) | 4 | 3 | 2 | 1 |
| இ) | 3 | 4 | 2 | 1 |
| ஈ) | 1 | 2 | 3 | 4 |

அரிக்கமேட்டில் புதைபொருள் ஆராய்ச்சியை மேற்கொண்டவர் (ARGS/2022)
அ) டாக்டர். ஜேகர் ஆ) ஸ்டுவர்ட்
இ) ராபர்ட் புரூஸ்புட் **ஈ) மார்டிமர் வீலர்**

தமிழ்நாட்டில் உள்ளாட்சி அரசாங்கத்தின் வரலாற்றினை ________ மாவட்ட ________ கல்வெட்டுகளின் மூலம் அறியலாம். (AGGS/2021)
**அ) உத்திரமேரூர், காஞ்சிபுரம்**
ஆ) கீழடி, மதுரை
இ) ஆதிச்சநல்லூர், தூத்துக்குடி
ஈ) சித்தன்னவாசல், புதுக்கோட்டை

1863 ம் ஆண்டு யாரால் பழைய கற்கால கருவிகள் முதலில் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டது? (PTGS/2021)
அ) லி மெசிரி **ஆ) ராபர்ட் புருஸ்**
இ) மைல்ஸ் பர்கிட் ஈ) சுப்பா ராவ்

இயலமைப்பு புவியியல் தமிழ் பாரம்பரியத்தில் (இயற்கை சார்ந்து அமைதல்) நிலங்களை 5 பெரும் பிரிவுகளாக வழங்குகிறது. பின்வருவனவற்றிலிருந்து பொருத்துக. (AHGS/2021)

(a) குறிஞ்சி — 1. வளமான பகுதி
(b) முல்லை — 2. காட்டுப் பகுதி
(c) மருதம் — 3. கடல் பகுதி
(d) நெய்தல் — 4. மலைகள் பகுதி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| அ) | 3 | 2 | 1 | 4 |
| ஆ) | 1 | 3 | 2 | 4 |
| இ) | 3 | 1 | 4 | 2 |
| ஈ) | 4 | 2 | 1 | 3 |

1863 ம் ஆண்டு யாரால் பழைய கற்கால கருவிகள் முதலில் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டது. (ADGS/2021)

அ) லி மெசிரி
ஆ) மைல்ஸ் பர்கிட்
இ) சுப்பாராவ்
ஈ) **ராபர்ட் புருஸ்**

அகஸ்டின் காலத்து நாணயங்கள் ரோமானிய நாட்டுடன் வாணிப உறவு கொண்டு இருந்ததை கண்டறியப்பட்ட இடம் (ADGS/2021)

**அ) அரிக்க மேடு**
ஆ) கோயமுத்தூர்
இ) கரூர்
ஈ) ஆதிச்சநல்லூர்

இவ்விடம் மதுரையிலிருந்து தென்கிழக்கு திசையில், 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. தமிழகத்தில் வைகை ஆற்றங்கரையில் சங்ககால நகர நாகரிகம் அமைந்திருந்தது பற்றிய உண்மையை பறைசாற்றுகிறது. ஆராய்ச்சியாளரும் ஓய்வு பெற்ற அரசு அதிகாரியுமான திரு. ஆர். பாலகிருஷ்ணன், இங்கு அமைந்திருந்த நாகரிகத்திற்கும் சிந்து சமவெளி நாகரிகத்திற்கும் உள்ள ஒற்றுமைகளை சுட்டிக் காட்டுகிறார்.

மேல் குறிப்பிட்டுள்ள இடம் யாது?

அ) அழகன்குளம்
ஆ) பொருந்தல்
**இ) கீழடி**
ஈ) கொடுமணல்

கீழ்கண்டவைகளில் இடைக் கற்காலம் பற்றிய கூற்றுகளில் தவறானது எது? (GR1P/2021)

1. இக்காலம் பழைய கற்காலத்துக்கும் புதிய கற்காலத்துக்கும் இடைப்பட்ட காலம்
2. இம்மக்கள் மிகச் சிறிய கற்களாலான கருவிகளை பயன்படுத்தினர்
3. திருநெல்வேலி மாவட்டத்தில் காணப்படும் தேரிக் காடுகள் இடைக் கற்காலத்தை சார்ந்தாக கருதப்படுகிறது.
4. இக்கால மக்கள் இறந்தவர்களை எரிந்தனர்.

அ) 1 மட்டும்
ஆ) 2 மட்டும்
இ) 3 மட்டும்
ஈ) 4 மட்டும்